குண்டூசி

தீபாவளி மலர் - 84

விலை ரூ.7/.

திருமண பட்டு ஜவுளிகளுக்கு
ஸ்ரீராஜேஸ்வரி ஹால் கடைவீதி சேலம்

ஸ்ரீ விஜேத் சில்க்ஸ்

ராஜவீதி. கோயமுத்தூர்-1



திருமணம்
பண்டிகை மற்றும்
விசேஷங்களுக்கு
ராசியான
இடம்

சார்பு நிறுவனம்

விஜேத் கிளாத் சென்டர்

801, பெரிய கடை வீதி கோவை
போன்: 26131, வீடு: 30309.
72. கிராஸ் கட் ரோட் - கோவை

இத் தீபாவளித் திருநாளில் 'ஆனந்தா'வின் ஜவுளிகளை
வாங்கி அணிந்து மகிழும் அனைவருக்கும்
தீபாவளி நல் வாழ்த்துக்கள்!

*விழாக் காலங்களிலும் மற்றும் அன்றாடம் அணிவதற்கும்
ஏற்றத் துணிகள் எல்லாவற்றையும் ஒரே இடத்தில்
வாங்க சிறந்த இடம்*

★ பட்டுப் புடவைகளுக்கென்றே தனிப்பிரிவு

★ பல வண்ணப் புடவைகள் டிரஸ் மெட்டீரியல்ஸ் இவைகளுக்கென்றே தனிப் பிரிவு,

★ ஆடவர்களுக்கான சூட்டிங்ஸ், ஷர்ட்டிங்ஸ் இவைகளுக்கு என்றே ஒரு தனிப்பிரிவு.



(ஏர்-கண்டிஷன் வசதியுடன்)

ஆனந்தா

சில்க்ஸ் பாரடைஸ்

ஜவுளிகளின் சங்கமம்

ஆனந்தா பில்டிங்ஸ்,

N. S. B. ரோடு, திருச்சிராப்பள்ளி - 620 002

போன்: 27711

பட்டை 38 | தீபாவளி மலர்
சுசி 1 | அக்டோபர் 84

ஆச்சார்யாளின் அருளாசி

எத்தனை ஆண்டுகள் தீபாவளி பண்டிகை வந்தாலும அலுக்காமல் கொண்டாடப்பட்டு வருகிறது இபபுனித தீபாவளி பண்டிகை ஸ்ரீ கிருஷ்ண பகவானல் தொடக்கிவைககப்பட்ட திருநாள் வெளியில இருககும் தீய சகதிகளும், நமது மனத்திலுளளகெட்டசகதிகளுமபோகவேணடும். இததிருநாளில், கஙகையில நீராடிய புண்ணியததைப பெறறு,புததாடையுடுத்தி ஸ்ரீலக்ஷமி தேவியின அருளைப்பெற்று, புறத்திலும, அகத்திலும ஆனநதத்தை அடைவோமாக.

ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபதி, ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் அவர்கள். 14-9-84

தீபாவளி புனித பண்டிகை நன்னாளில் எல்லா நன்மைகளும் அடைந்து ஸ்ரீசாரதா சந்திர மௌளீஸ்வாரின் அருளைப் பெற்று ஆனந்த வாழ்வை அடைய என்னுடைய நல் ஆசிகள்.

சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஸ்ரீ மகாசன்னிதானம் அவர்கள்,
சிருங்கேரி, 24-9-84

காணிக்கை

காஞ்சி காமகோடி பீடம், சிருங்கேரி ஸ்ரீசாரதா பீடம், இவ்விரு மகா புருஷர்களின் அருளாசியுடன், மலரின்முகப்பில் மந்திராலய மகான் இன்றும ஜீவசமாதியிலமர்ந்து அருளாசிகளை வாரி வழங்கும் ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகளின் உருவம், சீதா ராம-லக்ஷ்மண ஸ்வாமிகளின் திவ்ய தரிசனத்துடன் காட்சியளிக்கும் இப்புனித மலரை எனது அன்பு நேயர்களின் சார்பில் ஸ்ரீராமசந்திர மூர்த்தியின் திருப்பாதக் கமலங்களில் சமர்ப்பிககிறேன்.

தாரக மந்திரமான ராமநாமத்தின் மூல மந்திரமான ராமா, ஸ்ரீராமா என்ற புனித ராமநாமம் மலர்பூராவிலும் வருகிறது. அனைவரும் ஜபித்து அவன் அருளைப் பெற வேண்டுகிறேன.

பக்தி மணம் கமழும இப்புனிதமலரில் என் அன்பு நேயர்களை,தணிகை முருகனிடம ஒருநாள இருநது தரிசிகக அழைததுச் செல்கிறேன்.

இந்த ஒருநாள் பகுதி சினிமா சம்பந்தப்பட்ட பத்திரிகையாக இருந்த காலத்தில் கால் நூற்றுண்டுக்கு முன் நக்ஷத்திரங்களுடன் ஒருநாள் என்ற சிறப்புப் பகுதியை அங்குசம் என்ற பெயரில எழுதிவநதேன். பத்திரிகை உலகிலேயே முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட இப்பகுதியை சிறப்பித்த 80-ககும மேற்பட்ட நக்ஷத்திரங்களில் தற்பொழுது இரண்டு திலகங்கள் தென்னக மாநில முதல்வராக இருக்கிறாகள்

வழககம்போல் பல நல்ல புனிதமான விஷயங்கள் அடங்கிய இப்புனித மலரை புரட்டுங்கள். குறைபோக்கி நிறைகண்டு உங்கள் ஆதரவைத் தொடர்ந்து அளிக்க வேண்டுகிறேன.

புனிதமலர் மணக்க உதவிபுரிந்த என் மதிப்பிற்குரிய வாசகர்கள், விளம்பரங்களை வாரி வழங்கிய தொழில்துறை வள்ளல்கள், எழுத்துலக சிற்பிகள யாவருக்கும நான் வணங்கும் முருகப்பெருமானை வேண்டி தீபாவளி திருநாளில என் அன்புகனிந்த நல்வாழ்த்துககளைச் சமர்ப்பிக்கிறேன்.

—குன்றில் ராதாகிருஷ்ணன்

அனைவருக்கும் மனங்கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்
வாயில், நைலெக்ஸ், நைலான் 644
ஷிபான், ஜார்ஜெட், பாலியெஸ்டர்,
பட்டு மற்றும்
வியப்பூட்டும்
பேரெழில் சேலைகளுக்கும்
இன்றே
விவியின் பிரத்யேக
புடவை பிரிவிற்கு
விஜயம் செய்யுங்கள்
பேஸ்மெண்ட்
ஷோரூம்
(ஏர்-கண்டிஷண்ட்)
வெங்கடேஷ் வஸ்த்ராலயா
பி. லிமிடெட்
ஸ்டேட் பாங்க் ஆப் மைசூர் பில்டிங்
ஹைகோர்ட் எதிரில்
சென்னை-600 001 போன் 20201/2

கருணையின் வண்ணம் சிவப்பு

காஞ்சி காமகோடி பரமாச்சார்யாள்

கரும்பு வில்லும் புஷ்ப பாணமும் தரித்து ஸமஸ்தலோகத்துக்கும் அநுக்ரகம் செய்கிற திவ்ய மாதாதான் காமாக்ஷி. சகல ஜீவராசிகளையும் இந்திரிய சேஷ்டையிலிருந்து விடுவிப்பதற்காகக் கரும்பாலான தனுசையும் தாங்கியிருக்கிறாள். இதில் வேடிக்கை என்னவென்றால், மன்மதனும் இதேபோல் கரும்பு வில்லையும், புஷ்பத்தாலான ஐந்து பாணங்களையும் தான் வைத்திருக்கிறான். அவனுடைய காரியமோ அம்பாளுடைய காரியத்துக்கு நேர் விரோதமானது. அவன் இந்த வில்லையும் அம்பையும் வைத்துக்கொண்டுதான் ஸமஸ்தப் பிராணிகளுக்கும் இந்திரிய விகாரத்தை - அடங்காத காம வேகத்தை — உண்டாக்கி வருகிறான்.

அதுவும் பராசக்தியான அம்பாளுடைய லீலைதான். அவள்தான் மன்மதனுக்கு இப்படிப்பட்ட சக்தியை அநுக்கிரஹம் செய்திருக்கிறாள். பிஞ்சு கசப்பாக இருந்து, பிறகு துவர்ப்பாகி, அப்புறம் புளிப்பாகி, கடைசியில் பரம மதுரமாக பழுக்கிற மாதிரி, ஜீவர்களும் படிப்படியாகப் பலவித அநுபவங்களில் முன்னேறி, முன்னேறி கடைசியில் பழமாகப் பழுக்கும் பக்குவம் பெற வேண்டும் என்றே, அம்பாள் பிரகிருதி நியதிகளை — இயற்கை வேகங்களை உண்டாக்கியிருக்கிறாள்.

ஒரேயடியாக இவை நம்மை அடிக்குச் செல்வதற்கு நாம் இடம் தந்துவிடக் கூடாது. ஒரேயடியாக எதிர்க்க எதிர்ப்பில் இந்த வேகங்களிலிருந்து தப்ப முடியாவிட்டால், அதற்காக வருத்தப்பட்டு, மனமுடைந்துவிடவும் கூடாது. அம்பாளைத் தஞ்சம் புகுந்தால் படிப்படியாக அவள் வழிகாட்டி விடுதலை தருவாள் என்ற நம்பிக்கையோடு, வேகங்களைக் குறைத்துக்கொள்ள அவளைப் பிரார்த்திக்கவேண்டும்.

சம்சாரம் என்பதில் ஈடுபட்டிருக்கும்போதே இதில் ஏதாவது ஸாரம் இருக்கிறதா என்றும் அடிக்கடி சிந்தித்து வரவேண்டும். இப்படி சிந்திப்பதே ஒரு ஸாரம்தான். அதனால்தான் சம்சாரத்திலிருந்து விடுபடுகிற விரக்தி உண்டாக்குகிறது. அந்தக் காலத்தில் அந்தந்தப் பிரகிருதி வேகங்கள்—இயற்கை உந்தல்கள் ஏற்பட்டாலும், அதனால் மனம் கலங்காமல் பராசக்தியைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தால் பிஞ்சு காயாகி, கனிதானே முற்றி மரத்திலிருந்து இற்று விழுந்துவிடு

வதுபோல், கடைசியில் சம்சார விருட்சத்திலிருந்து விடுபட்டு அம்பாளின் சரணாரவிந்தத்தில் விழுந்து அதோடேயே சேர்ந்துவிடுவோம்.

நம்மைப் போல எத்தனையோ பிராணிகள் ஏகப்பட்ட பூர்வகர்மாவைச் செய்து குவித்திருக்கின்றன. இந்தக் கர்மாவைக் கழித்துக் கொள்ள அவையெல்லாம் ஜன்மா எடுத்துத் தானாக வேண்டும் எடுக்கிற ஜன்மாவில் கர்ம மூட்டையை ஜாஸ்தியாக்கிக்கொள்ளலாம் அது எப்படியானாலும் கர்மாவைக் கழித்துக் கொள்ள வேண்டுமானால் ஜன்மா எடுத்து அதை கர்மவழியில் பிரயோஜனப்படுத்திக் கொள்வது தவிர வேறு வழியில்லை.

கடைசியில் கர்மம் முழுவதும் அழிந்தால் பிறப்பே இல்லாத நிலை அடைவோம் ஜீவர்களுக்கு ஜனன நிவிருத்தி உண்டாவதற்கே ஒரு பயிற்சிக்கூடமாக அவர்கள் ஜன்மம் எடுத்தாக வேண்டியிருக்கிறது. இவ்வாறு ஜீவர்களுக்கு ஜன்மம் ஏற்படுவதற்காகத்தான் அம்பாள் காமத்தை வைத்திருக்கிறாள். அதற்கு அதிகாரியாக மன்மதனை நியமித்திருக்கிறாள்.

ஆனால், எதுவும் தன் எல்லையறிந்து அடங்கி நிற்கவேண்டும். மன்மதன் பக்தர்களிடமும், ஞானிகளிடமும் தன் கை வரிசையைக் காட்ட விடமாட்டாள். இவள்தான் மகா ஞானியான பரமேஸ்வரனை மட்டும் தன்னிடம் பிரேமைகொள்ளுமாறும் செய்தவள். மன்மதன் அவரிடம் தன் கைவரிசையைக் காட்டப் பார்த்தான். அவர் நெற்றிக்கண்ணை திறந்து பஸ்மீகரமாக்கி விட்டார். அவர் அப்படியிருந்தால் அம்பாளுடைய பிரபஞ்ச லீலை எப்படி நடக்கும்?

எனவே, அவள் மன்மதனுடைய கரும்பு வில்லையும், புஷ்ப தனுசையும் தானே தன்கைகளில் எடுத்துக் கொண்டு பரமேசுவரன் முன்வந்தாள். மன்மதனைப்போல், அவரை ஜயிப்பேன் என்று அகங்காரத்தோடு வரவில்லை. அன்போடு அடக்கத்தோடு வந்தாள். உடனே பரமஞானியான பரமேசுவரனும் காமேசுவரனாக மாறி விட்டார்; இவள் அன்பு பொங்குகின்ற கண்களால் காமாட்சியாகி, காமேசுவரியாகி, அவரைப் பார்க்க அவரும் அன்பு மயமாகி காமேசுவரனாகி விட்டார்.

பிரம்மமாகச் செயலற்று இருந்த வஸ்துவுக்கு லோகாநுக்கிரகம் என்ற பரம கருணை உதிப்பதைத் தான் காமாட்சி என்று சொல்கிறோம். சுத்த ஸ்படிக ஸங்காசமாக நிறமில்லாதிருந்த பிரம்மம், அப்போது சிவப்பு நிறத்தை அடைகிறது.

அன்பு, கருணை இவற்றைச் சிவப்பாகவே சொல்வது வழக்கம் ராகம் (அன்பு), அநுராகம் என்பதில் இருந்தே (ரக்தம்) ரத்தம் என்ற பதம் வந்தது. தமிழிலும் மனச் செம்மை, செவ்விய உள்ளம் என்றெல்லாம் சொல்கிறோம்; இதுவே காமாட்சியின் சிவப்பு; கருணையின் வர்ணம்.

தொகுப்பு: ஏ.எஸ்.எம். சென்னை

எமது மனங்கனிந்த தீபாவளி திருநாள் நல்வாழ்த்துக்கள்

சாஸ்திரங்களைக் காப்பாற்ற வேண்டும்

ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபதி. ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

நமது பழைய சாஸ்திரங்களில் இல்லாத கலைகளோ, விஞ்ஞான விதிமுறைகளோ, மற்ற விஷயங்களோ இல்லை. போஜராஜன் செய்துள்ள ஸமராங்கண சூத்திரம் என்ற நூலில் பலவிதமான மிஷின்கள் செய்யும் முறைகள்கூட உள்ளன. அதில் ஆகாயவிமானத்தைப் பற்றிக்கூட வருகிறதென்றால் ஆச்சரியமாயிருக்கும்.

போஜன் இந்த விமானத்தைப் பற்றிய சித்தாந்த முறையை மட்டுமே சொல்லிவிட்டு, நடைமுறையும் இதைச் செய்யும் வழியை நான் சொல்லாததால் எனக்கு அது தெரியாது என்று நினைக்கவேண்டாம். நடைமுறையைச் சொல்லி, இந்த விமானம் செய்யப்பட்டால், ஜனங்களுக்கு சௌகரியத்தைவிட அசௌகரியமே அதிகமாகும் என்றே சொல்லவில்லை என்கிறார்.

ஆகாயவிமானம், அணுசக்திக் குண்டு இவற்றையெல்லாம் நடைமுறையில் கொண்டு வந்ததன் அனர்த்தத்தை நாம் உலகயுத்தத்தில் கண்கூடாகப் பார்த்துவிட்டோம். அது ஒருபுறம் இருக்கட்டும்.

போஜன் சொல்லியிருக்கிற ஆகாயவிமான 'தியரி'யைச் சில என்ஜினியர்களுடன் சேர்ந்துபடித்துப் பார்த்ததில், பலூன், ஜெட் டான் என்ஜின் போன்ற ஒரு முறையை போஜன் சொல்கிறார் என்று தெரியவந்தது.

பழைய காலத்தில் ஒவ்வொரு கலைக்கும் விஞ்ஞானத்திற்கும் தனித்தனி நூல்கள் இருந்தன. இந்த நூல்கள் ஒவ்வொன்றையும் டைஜஸ்ட் மாதிரி ஒரு அத்தியாயமாகச் சுருக்கி பிருஹத் ஸம்ஹிதை என்ற புத்தகத்தை வராஹ மிஹிரர் எழுதியிருக்கிறார். கிட்டத்தட்ட 1500 ஆண்டுகளுக்கு முன்பே எழுதப்பட்ட இந்நூலில் தாவர சாஸ்திரம், மிருக சாஸ்திரம், பட்சி சாஸ்திரம், தாது சாஸ்திரம் இப்படி சகலவிஷயங்களும் அடங்கியிருக்கின்றன.

பழங்காலத்தவர்களின் என்ஜினியரிங் ஞானம் இன்றுள்ள நிபுணர்களையும் ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறது.

இவற்றுக்கெல்லாம் ஆதார நூல்கள், சாஸ்திரங்கள், உள்ளன. ஆயிரம், பதினாயிரம் ஆண்டுகளாக தலைமுறை தலைமுறையாக ரட்சிக்கப்பட்டு நம் கைக்கு வந்துள்ளன இந்த நாள்போல அச்சு புத்தகம் போடத் தெரியாத காலங்களிலும் இதற்றை நம் முன்னோர்

கள் எப்படியோ காத்து நம்வரைக்கும் தந்துவிட்டார்கள். இப்படி யுகாந்திரமாக வந்த சாஸ்திரங்களையெல்லாம் நமக்குச் சகல வசதி இருந்தும், அடுத்த தலைமுறைக்கு காத்துத் தராமலிருக்கிறோம். ஆயிரம், பதினாயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்து வந்துகொண்டிருந்த இழையை அறுத்துவிடுகிற பாக்கியம் நமக்கே ஏற்பட்டிருக்கிறது.

குருடன் ஒருவன் கையில் லாந்தருடன் போய்க்கொண்டிருந்தானாம். எதிரில் வந்த ஒருவன், உனக்குத்தான் கண் தெரியவில்லையே? லாந்தர் ஏன் எடுத்துவருகிறாய்? என்று கேட்டான்.

அதற்குக் குருடன், எனக்குக் கண் இல்லாவிட்டாலும் உனக்குக் கண் இருக்கிறதல்லவா? அதற்காகத்தான் இதை எடுத்து வருகிறேன் இல்லாவிட்டால் இந்த இருட்டில் நீயே என்மேல் தடுக்கி விழுந்திருப்பாயே என்றானாம்.

அதுபோலவே, பழைய சாஸ்திரங்கள் நமக்குப் புரியாவிட்டாலும், எதிர்காலத்தில் யாருக்காவது புரியலாம். பயனாகலாம் என்பதனாலாவது அவற்றை நாம் ரட்சித்தாக வேண்டும். வசதியே இல்லாத காலங்களில் யுகாந்தரமாக ரட்சிக்கப்பட்ட சாஸ்திரங்களை நமக்கு முதல் தலைமுறையினர் எல்லா வசதியிருந்தும் காப்பாற்றாமல் அழித்து நம்மை வஞ்சித்துவிட்டார்கள் என்று வருங்கால தலைமுறையினர் குற்றம் சொல்ல இடம் கொடுக்கலாமா?

பழைய காலங்களில் சாஸ்திர ரக்ஷணம் அரசர்களின் பொறுப்பிலிருந்தது. இப்பொழுது ராஜாக்கள் இல்லை. மத்ய, மாநில சர்க்கார்கள் தாம் உள்ளன. அவற்றுக்கு நிம்மதியே இல்லை. ஒரு பக்கம் பாஷை சண்டை. ஒருபக்கம் எல்லைச் சண்டை. ஏகப்பட்ட பாலிடிக்ஸ், ஊழல், இப்படி பல கஷ்டங்கள்.

அந்த காலத்தில் ஒரு ராஜாவுக்கும், இன்னொரு ராஜாவுக்கும் சண்டை நடந்ததென்றால், இப்பொழுது ஒரு ராஜ்யத்துக்கும் இன்னொரு ராஜ்யத்துக்கும் சண்டை, ஒரு வர்க்கதாருக்கும் இன்னொரு வர்க்கத்தாருக்கும் சண்டை ஒரு கட்சிக்கும் இன்னொன்றுக்கும் மண்டை உடைகிறது.

எனவே, சாஸ்திர ரட்சணத் அரசாங்கத்தை எதிர்பார்த்து பிரயோஜனமில்லை. சுற்றுப்புறத்தில் எல்லாம் தொல்லை என்று நாம் தட்டிக் கழிக்கக்கூடாது,

வனவிலங்குகளைப் பாருங்கள்! சிங்கம் புலியை அடிக்கிறது புலி மானை அடிக்கிறது. இருந்தாலும் காட்டில் சிங்கக்குட்டி, புலிக்குட்டி, மான்குட்டி, வளர்ந்துகொண்டும் விளையாடிக்கொண்டும்தான் இருக்கின்றன. அப்படியிருக்க நாமும் பழகவேண்டும்.

எத்தனை இடையூறு இருப்பினும் நமக்கு எதிர்காலத்தினரிடம் உள்ள கடமையையும், பொறுப்பையும் உணர்ந்து பழைய சாஸ்திரங்களை ரட்சித்துத் தரவேண்டும்.

தொகுப்பு : சேது, சென்னை

இன்பமும் துன்பமும் உனது மனத்தினின்றும் உண்டாகின்றன; மனமே பந்தத்திற்கும் முத்திக்குங் காரணமாகின்றது, தீயமனம் நரகத்தைத் தருகின்றது. நன்மனம் பரகதியைத் தருகின்றது. மனத்தழுக்கு அற்றவரே பெரியார் மனத்துக்கண் மாசிலனாதலே எல்லா அறங்களுமாம் ஆதலினால் உன்மனம் பளிங்கு போல் இருக்கட்டும்.

—வகரியார்.

ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா

ADWAVE/LMC/2710

சேக்கிழாரின் சமுதாய நோக்கு

— தவத்திரு சுந்தர சுவாமிகள், சிரவை ஆதீனம் —

பெரியபுராணம் எல்லாத் துறைகளிலும் தலைசிறந்த நூல். மூன்றும் நூற்றுண்டு முதல் ஒன்பதாம் நூற்றுண்டு வரை தமிழகத்தின் தலைசிறந்த வரலாறு, நிலையுயர்ந்த பண்பாடு, தெருள் நிறைந்த அருளியல், பொருள் பொதிந்த அரசியல் மற்றும் தமிழ் மக்களின் அறிவாற்றல் மிக்க திறமையைக் காட்டும் தொழில்முறை ஆகிய எல்லாவற்றையும் எடுத்தியம்பும் தமிழிலக்கிய வரலாற்று சமயநூல், சேக்கிழார் பெருமான் அருளிச் செய்த பெரியபுராணம். ஆறு அல்லது ஏழு நூற்றுண்டுகளுக்குத் தமிழக வரலாற்றை எடுத்துக்கூறுகின்ற நூல் இது ஒன்றுதான், இப்போது.

நம் தமிழகத்தில் நாம் பிற மாநிலங்கள் மற்றும் அயல்நாட்டு வரலாறுகளைப் படிக்கிறோம். தமிழக வரலாற்றுக்காக சிலப்பதிகாரம் போன்ற நூல்களைப் படித்தாலும்கூட, அதைவிடச் சிறப்பாக, ஆறேழு நூற்றுண்டுகளுக்கு வரலாறாகவும், அரசியல் நூல் போலவும், தமிழ்ச் சமுதாயத்தின் அருமை பெருமைகளை எடுத்துக்காட்டும் பண்பாட்டு நூலாகவும், தொன்மை மிக்க நம் சமயப் பெருமைகளையும் எல்லாம்வல்ல இறைவனின் பெருங்கருணைத் திறத்தையும் விளக்கும் அருளியல் நூலாகவும் விளங்குகின்ற ஒரு பெருங்காப்பியமே பெரியபுராணம்.

பெரியபுராணத்தை சமுதாய நோக்கில் வைத்துக்காண அதனை இரண்டுவிதமாகப் பாகுபாடு செய்யலாம். நம் தமிழ்ச் சமுதாயத்தின் செயல் முறைகளையும் பண்பாட்டையும் சேக்கிழார் பெருமான் எவ்வாறு கூறுகின்றார் என்பதை முதலாவதாகவும், வணக்கத்திற்குரிய நம் அருளாளர்கள் சமுதாயத்தை எப்படிக் கண்டார்கள்? எங்கெங்கு சமுதாயக் குறைபாடுகள் உள்ளனவோ அங்கெல்லாம் சென்று அவர்கள் எப்படிச் சமுதாயத் தொண்டு செய்தார்கள் என்பதனை இரண்டாவதாகவும் காணலாம்.

திருநாவுக்கரசருடைய வரலாற்றில் திருநாவுக்கரசர் மருணீக்கியாராக இருந்தபோது, கல்வி கற்றுக்கொண்டிருந்த பருவத்தில், அவருடைய தந்தையாராகிய புகழனாரையும் தாயாராகிய மாதினியாரையும் வணங்கிக் கொண்டிருந்தார் என்ற செய்தியைச் சொல்கிறார். ஐம்புலன்களின் ஆசையினால் மனதில் தோன்றியிருக்கும் சுருளை நீக்கி அம்மனமானது இறைவன் திருவருளை நோக்கி என்றும் மலர்ந்திருக்கும்படியான கல்வியை - கலையை மருணீக்கியார் பயிலத் தொடங்கியதைக் கூறவந்த சேக்கிழார்,

> தந்தைதாய் களிமகிழ்ச்சி தலைசிறக்க முறைமையினால்
> சிந்தைமலர்ந்து எழும்உணர்வில் செழுங்கலையின் திறங்களெலாம்
> முந்தைமுறை மையிறப்பின்று முதிர அறிவு எதிரும்வகை
> மைந்தனார் மறுஒழித்த இளம்பிறைபோல் வளர்கின்றார்

என்று மட்டுமே அருளிச்செய்தார். மருணீக்கியாரின் தந்தையாராகிய புகழனுர் மேயவினை பயத்தாலே இவ்வுலகை விட்டகலத்திய அரும்பிணி யுழந்து விண்ணுலகு சென்றடைந்தார். அந்நிலையில் அவர் துணைவியார் மாதினியார், சுற்றத்தாரையும், திலகவதியாராகிய மகளையும் மருணீக்கியாராகிய மகனையும் துகளாகவே மதித்து, பெற்றிமையால் உடன் என்றும் பிரியாத உலகெய்தும் கற்புநெறி வழுவாமல் கணவனுர் உடன் சென்ருர். குணம்பேசிக் குலம்பேசி மணம் நேர்ந்த கலிப்பகையார். அவருக்கும் திலகவதியாருக்கும் மணம் நிகழும் முன்னரே போர்க்களம் சென்று உயிர்கொடுத்து புகழ்கொண்டார்.

இச்செய்தியைக் கேட்ட செம்மலர் திருவனைய திலகவதியார், என் தாயும் என்னை அவருக்குக் கொடுக்க இசைந்து மணவுறுதி செய்து கொண்டமையால் நான் அவருக்கே (கலிப்பகையாருக்கே) உரியவள். ஆகையினுல் இந்த உயிரையாவது அவரது உயிரோடு இசைவிப்பேன் எனக்கூறி உயிர்விடத் துணிந்தார்,

இந்த நிலையில் திலகவதியாருடைய அடிகளின்மேல் மருணீக்கியார் விழுந்து கதறுகிருர். இச்செய்தியினைக் கூறவந்த சேக்கிழார் பெருமான்,

அந்நிலையில் மிகப்புலம்பி அன்னையும் அத் தனும் அகன்ற
பின்னையும்நான் உமைவணங்கப் பெறுதலினுல் உயிர்தரித்தேன்
என்னையினித் தனிக்கைவிட்டு ஏகுவீர் எனில்யானும்
முன்னம் உயிர்நீப்பன் என மொழிந்து இடரின் அழுந்தினுர்

என்று கூறியருளுகிருர். அன்னையும் அத்தனும் இருக்கும்போது நான் அவர்களை வணங்கிக் கொண்டிருந்தேன்! என்பதனைச் சொல்லாமல் சொல்லுகிருர். எப்படி? அவர்கள் இவ்வுலக வாழ்வை விட்டு அகன்ற பின் நான் 'உங்களை (திலகவதியாரை) வணங்கப் பெறுதலினுல் உயிர் வாழ்ந்துகொண்டிருக்கிறேன் என்பது, அதற்குமுன் தாய் தந்தையரை வணங்கி வாழ்ந்துகொண்டிருந்தேன் என்ற குறிப்பை உணர்த்துகிறது.

அதுசரி? திருநாவுக்கரசருக்குப் பிறகு பல நூற்ருண்டுகள் கழித்துத் தோன்றிய சேக்கிழாருக்கு எப்படித் தெரியும்? சேக்கிழார் எந்தச் செய்தியையும் அகச்சான்று இல்லாமல் சொல்லமாட்டார். இதற்கும் சான்று இருக்கிறது. திருநாவுக்கரசரைச் சமணர்கள் சூழ்ச்சிசெய்து, கல்லினேடு பூட்டிக் கடலில் போடத் தம் வாக்கினுல் நெல்லு நீள்வயல் நீலக்குடி அரன் நல்ல நாமத்தைச் சொல்லிக் கரையேறிய திருநாவுக்கரசர் திருப்பாதிரிப்புலியூருக்கு வருகிருர். வந்து அத்தலத்தில் திருக்கோயில் கொண்டுள்ள பெருமானைப் பாடும்போது, ஈன்ருளுமாய் எனக்கு எந்தையுமாய் உடன் தோன்றினராய் என்ற தேவாரப் பாடலையும் துணையாய் என் நெஞ்சம் துறப்பித்தாய் நீ (என் உடன்பிறந்த துணையாகி என் நெஞ்சந்தை துறப்பித்தவனே! என்ற சான்றையும் வைத்துக்கொண்டே, சேக்கிழார் மருணீக்கியார் முன்பு தாய் தந்தையரை வணங்கி அவர்கள் மறைவிற்குப் பின், தம் மூத்த சகோதரியாரையும்

வணங்கிக்கொண்டிருந்தார் என்ற செய்தியினைத் தெரிவிக்கிறார். பெரியோர்களை வணங்க வேண்டுமென்ற சேக்கிழார் பெருமானின் சமுதாய நோக்கம் இதன்மூலம் நமக்குத் தெளிவாகின்றது.

அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராகிய காரைக்கால் அம்மையார் இளமை திருநாமம் புனிதவதி மருணீக்கியாரின் வாழ்க்கையில் திருப்பத்தை ஏற்படுத்தி அவரைத் திருநாவுக்கரசராக்கி நமக்களித்தவர் திலகவதியார். இருவருடைய திருப்பெயரும் ஐந்தெழுத்திலே அமைந்திருப்பது எண்ணத்தக்கது புனிதவதியாருடைய திருமணம் பணம் பேசி நடந்த திருமணம். திலகவதியாருடைய திருமணம் குணம் பேசி, குலம் பேசி நடந்த திருமணம். நீதிபதி மகனாகிய பரமதத்தனுக்கும், தனதத்தன் மகளாகிய புனிதவதிக்கும். இருவருக்கும் ஒத்தப் பெருஞ்செல்வம் இருக்கிறதென்பதனால் நடைபெற்றது திருமணம். மணமகனுக்கும், மணமகளுக்கும் ஒத்த குணங்கள் இருக்கிறதா? என்பதைப் பார்த்து இத்திருமணம் நடைபெறவில்லை.

> அளிமிடைதார்த் தனதத்தன் அணிமாடத் துள்புகுந்து
> தெளிதருநூல் விதிவழியே செயல்முறைமை செய்மைத்தித்
> தளிரடிமென் னகைமயிலைத் தாதவிழ்தார்க் காளைக்குக்
> களிமகிழ்சுற் றம்போற்றக் கலியாணம் செய்தார்கள்

சுற்றத்தார் போற்றவேண்டுமென்பதற்காகச் சிறப்புடன் திருமணம் செய்தார்கள் எனச் சேக்கிழார் கூறுகிறார்.

பின்னர் செஞ்சடையண்ணல் மெய்யடிமை விருப்புடைய கலிப்பகையார். ஆன்ற தவநெறியில் வைகுந்திலகவதியாரை மகட்கொள்ள வேண்டி எழுந்த பேரன்பினால், பூண்ட கொடைப் புகழனார்பால் சில முதியவர்களை அனுப்புகிறார் மணம்பேச வந்தவர்கள் தாங்கள் வந்த நோக்கத்தைத் தெரிவித்தார்கள் பின்னர் வந்த முதியவர்களும் புகழனாரும் கலிப்பகையாருக்கும், திலகவதியாருக்கும் குணநலன்களையும் ஒற்றுமைகளையும், குலச்சிறப்புக்களையும் பேசியபின் இருவருக்கும் திருமணம் நிச்சயம் செய்தார்கள்.

திருமணத்திலே பணம் பேசி செய்வதுமுண்டு; குணம் பேசிச் செய்வதுமுண்டு. திருமணத்தைச் சுருங்கிய அளவிலே முடிப்பதுமுண்டு. விரிந்த அளவிலே செய்வதுமுண்டு பெரியபுராண நாயகராகிய நம்பியாரூராரின் திருமணமும், திருவளர் ஞானத் தலைவராகிய திருஞான சம்பந்தரின் திருமணமும் முன்பே உறுதி செய்யப்பெற்றமையால் மிக விரிவாகச் செய்யப்பெறுகின்றன. அதே நேரத்தில் திருஞானசம்பந்தர், திருமருகலில் தன் அம்மான் மகளோடு போந்த வைப்பூர்கோன் தாமன் என்னும் வணிகன் மகளின் துயர்நீக்க, வாளரவு தீண்டி மாண்ட அவள் காதலனை தொழுதேத்தும் காழிவேந்தர் கருணையினால் உயிர்ப்பித்து தங்கையவள் தனைநயந்த நம்பியோடு நானிலத்தில் இன்புற்று வாழும் வண்ணம் மணம் புணரும் பெருவாழ்வு வகுத்து மிகச் சுருக்கமாக ஒரு திருமணத்தை முடித்து வைக்கிறார் மூன்றும் நூற்றாண்டிலிருந்து ஒன்பதாம் நூற்றாண்டு வரை திருமணங்கள் மிக விரிவாகவும், மிகச் சுருக்கமாகவும் நடைபெற்ற செய்திகளை சேக்கிழார் பெருமான் இக்கால சமுதாயத்தினர் உணரும் பொருட்டு எடுத்துகூறுகிறார்.



தீபாவளி
வாழ்த்துக்கள்
ஸ்பென்ஸர்ஸ்
ஹை-மில்க்
பிஸ்கட்டுகள்
ஸ்பென்ஸர்ஸ்
ஸ்பென்ஸர் & கம்பெனி
லிமிடெட்.
சென்னை மற்றும் கிளைகள்
FAME/S/1047A TAM

மணி - மந்த்ரம் - ஔஷதம்

— முடிகொண்டான் எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் —

மக்களுக்கு க்ஷேமமுண்டுபண்ண, மந்திரம் ஔஷதமென மூன்றும் ஆன்றோர்கள் கையாண்டனர். அம்முறையை விஷ்ணுபக்த சிரோமணி பான ஸ்ரீ குலசேகர ஆழ்வார் இகம்-பரம் (இம்மை-மறுமை) இரண்டுக் நம் உதவும் விதத்தில் ஸ்ரீகிருஷ்ணனருளை அபூர்வமாக வர்ணித்து கிருஷ்ணார்ப்பணம் செய்துள்ளார் மக்களுக்கு மிகவும் உதவக்கூடியது.

பக்தா பாய புஜங்க காருடமணி ஸ்த்ரைலோக்ய ரக்ஷாமணி
கோபீ லோசன சாதகாம்புத மணிஸ்ஸெளந்தர்ய முத்ராமணி:
ய: காந்தாமணி ருக்மணீ கநகுசத்வந்தைக பூஷாமணி:
ச்ரேயோ தேவசிகாமணி: திசதுநோ கோபால சூடாமணி:

மக்களின் துர்க்கதியாகிற சர்ப்பங்களுக்கு கருடமணியாய், மூன்று உலகுக்கும் ஒரு பாதுகாப்பு மணியாய், கோபிகைகளின் கண்களாகிற சாதகப் பக்ஷிகளுக்கு மேகமாகிற மணியாய், அழகு என்பதற்கு ஓர் அடையாளமான மணியாய், ருக்மணி தேவியின் ஸ்தனங்களிற்கு இன்றி அமையாத அலங்கார மணியாய் விளங்குமிந்த கோபால சிரோமணி,தேவ சிகாமணி நமக்கு வேண்டியவற்றைத் தந்தருளட்டும்.

த்ருச் சேதக மந்த்ரம் ஸகலமுபநிஷத்வாக்ய ஸம்பூஜ்ய மந்த்ரம்
ஸம்ஸாரோத்தார மந்த்ரம் ஸமுசிதஸமயே ஸங்கநிர்யாண மந்த்ரம்
ஸர்வைச்வர்யைக மந்த்ரம் வ்யஸந புஜக ஸந்தஷ்டஸந்த்ராண மந்த்ரம்
ஜிஹ்வே ஸ்ரீகிருஷ்ண மந்த்ரம் ஜபஜப ஸததம் ஜன்மஸாபல்ய மந்த்ரம்

ஹே நாவே ஸ்ரீ க்ருஷ்ண மந்திரத்தை இடைவிடாது ஜபம்செய்து கொண்டிரு. சத்ருக்களற்றுப்போகத் தக்க மந்திரம், உபநிஷத்தால் கொண்டாடப்பட்ட மந்திரம், ஸம்ஸாரத்தினின்று கரையேற்றும் மந்த்ரம், அக்ஞான இருளைப்போக்கும் மந்த்ரம், ஸர்வஸம்பத்துகளுக்கும் மூலமந்த்ரம், துயரென்னும் பாம்பால் தீண்டப்பட்டவர்களுக்கு உயிரைக் காக்கும் மந்த்ரம், ஜன்மமெடுத்தவர்களுக்குப் பயன் இம்மந்த்ரமே.

வ்யாமோஹப்ரசமௌஷதம் முநிமநோவ்ருத்தி ப்ரவ்ருத்யௌஷதம்
தைத்யேந்த்ரார்த்தி கரௌஷதம் த்ரிபுவநீ ஸஞ்ஜீவனைகௌஷதம்
பக்தாத்யந்த ஹிதௌஷதம் பவபய ப்ரத்வம்ஸனைகௌஷதம்
ச்ரேய: ப்ரார்த்திகரௌஷதம் பிப மந: ஸ்ரீகிருஷ்ணதிவ்யௌஷதம்

ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா

ஹே மனமே, ஸ்ரீ கிருஷ்ணனுகிற மருந்தைக்குடி, அது மயக்கங்களைத் தெளிவிக்கும் மருந்து, முனிவர்களின் மானசீக முறையை நல்ல விதமாகச் செய்யும் மருந்து, அசுரத் தலைவர்களையும் நேர்மை செய்யும் மருந்து, எல்லா உலகங்களுக்கும் புத்துயிர் உண்டாக்க அரியதோர் மருந்து பக்தர்களுக்கு உயர்ந்ததான மருந்து; பிறவி பயத்தைப் போக்கும் மருந்து. ஸர்வமங்களங்களையும் அளிக்கும் மருந்து இது ஒன்றே.

இந்த ஸ்ரீகிருஷ்ண மணியை தீபாவளி நன்னாளில் அணிந்துகொண்டு மந்த்ரத்தை ஜபித்து இம்மை மறுமை பயனையடைய பகவானைப் போற்றி பணிந்து வேண்டுகிறேன்.

யாசித்து, நெய்யும் பாலும் தயிரும் சேர்ந்த சிறந்த அன்னத்தை உண்பதைவிட, உழைத்து உண்ணும தண்ணீரும் சோறும் சிறந்தது.

வீரமும் புகழுமில்லாமல் மங்கி நெடுங்காலம் இருப்பதைவிட, வீரமும் புகழும் பெற்றுச் சிறிது காலம் வாழ்வது சிறந்தது.

உமிக்குவியல் நெடுநேரம் சாந்திக் கருகுவதைவிட, தைலமுள்ள மரம் ஜொலித்துச சிறிது நேரம் எரிவது சிறந்தது.

உன்னை யாராவது புகழும்போது மகிழ்ச்சியடையாதே, அதேபோல் பிறர் உன்னை இகழும்போது கவலையடையாதே; இகழையும் புகழையும் சமமாக கருது; அதனால் உன் மனது அமைதியாக இருக்கும் —வாரியார்.

கருமாரி திருக்கோயில் செல்லுங்கள்

கருமாரி திருக்கோயில் செல்லுங்களேன்—அந்த
கருநாக வடிவானைக் காணுங்களேன்
உருவாகும் இன்பநிலை பாருங்களேன்—அந்த
உலகாளும் உமையாளைப் பாடுங்களேன் (கருமாரி)

உள்ளமதில் உள்ளகுறை நீக்குகின்றவள்—என்றும்
கள்ளமிலா நல்லவழி காட்டுகின்றவள்
முன்னைவினை தன்னையுடன் போக்குகின்றவள்—நம்
எண்ணமதை என்றும் நிறைவாக்குகின்றவள் (கருமாரி)

வேப்பிலையின் நாயகியாய் வாழுகின்றவள்—நாம்
கூப்பிடுமுன் காத்திடவே தேடுகின்றவள்;
முல்லைமலர் வாசமதில் நிறைகின்றவள்—என்றும்
எல்லையிலா அன்புமழை பொழிகின்றவள். (கருமாரி)

—T. ஆமருவியப்பன்

ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா

எல்லோரும்
கங்கா ஸ்நானம்
பண்ணியாச்சு!
எல்லோருக்கும்
நரசுஸ் காபி
ரெடியா இருக்கா?
நரசுஸ்
அளிக்கும்
இனிய
தீபாவளி
வாழ்த்துக்கள்!
ஜீவனுள்ள ஒரே காபி
நரசுஸ் காபி
நரசுஸ் காபி
கம்பெனி
சேலம் 636 007
கிளைகள், தமிழ்நாடெங்கும்.
ADWAVE/NCC/2747



ஆவிக்குமோசம் வருமாறு அறிந்து உன்அருட்பதங்கள்
சேவிக்கஎன்றும் நினைக்கின்றிலேன் வினைதீர்த்து அருள்வாய்
வாவி தடவயல்சூழும் திருத்தணிமாமலை வாழ்
சேவல்கொடி உடையோனே அமரசிகாமணி

—அருணகிரியார்.



தணிகை முருகனிடம் ஒரு நாள்

இவ்வாண்டு அக்டோபர் மாதம் குண்டூசிக்கு 38-வது வயது ஆரம்பமாகிறது. சுமார் 28 ஆண்டுகள் திரை உலகில் சிறந்த சேவை செய்து, சினிமா பத்திரிகை உலகிற்கே வழிகாட்டியாக தொண்டாற்றி வந்து, சுமார் பத்து வருடமாக, காஞ்சி காமகோடி பீடம் பரமாச்சார்யாள் (பெரியவர்கள்) அருளாணைப்படி தெய்வீகப் பத்திரிகையாக செயல்பட்டு வருகிறது.

அப்பெரியவரின் அருளாசியுடன் மலரும் இவ்வாண்டு தீபாவளி மலரில் என் அன்பு நேயர்களை திருத்தணிகை முருகப்பெருமானை சந்திக்க அழைத்துச் செல்கிறேன்.

முன்பு சினிமா பத்திரிகையாக இருந்த சமயம் அந்தக் கால பிரபல "நட்சத்திரங்களுடன் ஒருநாள்", என்றசிறப்புப் பகுதியை பத்திரிகை உலகிலேயே 'அங்குசம்' என்ற புனைப்பெயரில்முதன்முதலாகஎழுத ஆரம்பித்தேன். முதலில் ஜெமினி கணேசனுடன் ஒருநாள், என்ற இப்பகுதியை தொடர்ந்து சுமார் எண்பது நட்சத்திரங்களுக்கும்

திரு. ராமச்சந்திரன், PRO கொண்டல் ராஜு, மன்னூர் குருக்கள் ஓதுவார் கிருஷ்ணமூர்த்தி ஆகியோருடன் ஆசிரியர்.



தேவர் பிலிம்ஸ் அதிபர் தண்டாயுதபாணி அளித்த யானை.
யானைப் பாகன் ஸ்ரீநிவாசநேடு.

மேலாக (அதாவது நடிகை, நடிகர்கள்) எழுதினேன். சிவாஜியுடன் ஒருநாள் தான் கடைசியாக அமைந்தது. அன்று உயர்ந்த மனிதன் படப்பிடிப்பு. அவர் நடப்பும் இமயம்போல் உயர்ந்து வருகிறதல்லவா?

இவர்களில், எம். ஜி. ஆர்., என். டி. ஆர். இருவர்களும் இன்று மாநில முதல்வர்களாக இருக்கிறார்கள்.

தற்பொழுது இந்த ஒருநாள் பகுதி, நம் பாரதப் பிரதமர் இந்திராஜி அவர்களுடன் ஒருநாள் என்றுகூட ஒரு பத்திரிகையில் இடம்பெற்று விட்டது.

நீண்ட நாட்களாக பக்திமணக்கும் குண்டூசியில் இந்தப் பகுதியை ஏன் ஆரம்பிக்கக்கூடாது என்று எண்ணிவந்தேன்.

ஆண்டவன் சன்னதியில் பகவானிடம் ஒருநாள் என்று ஏன் ஆரம்பிக்கக் கூடாது? என்றுதான்.

எனது அருமை நண்பரும், திருத்தணிகை தேவஸ்தான உதவி ஆணையரும், நிர்வாக அதிகாரியுமான திரு. என். எஸ். ராமச்சந்திரன் அவர்களிடம் என் அவாவை தெரிவித்தேன்.

மிகவும் மன மகிழ்ச்சியுடன் தாராளமாக வாருங்கள். நான் எல்லா ஏற்பாடுகளையும் செய்து தருகிறேன் என்று உற்சாகமூட்டினார்.

சென்ற மாதம் 30-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை தினம் தணிகை முருகனிடம் ஒரு நாள் அவன் சன்னிதியில், தணிந்து தனித்து நிற்கும் முருகப்பெருமானை தரிசிக்க சனிக்

கியூ வரிசையில் புஷ்பக் காவடியுடன் பக்தர்கள் கூட்டம்

கிழமை இரவே தணிகை போய் சேர்ந்துவிட்டேன்.

எனது ஆன்மீக அன்பு நேயர்கள் மானசீகமாய் என்னுடன் சேர்ந்து கொள்ளுங்கள். அன்று ஞாயிற்றுக்கிழமையானதால் விஸ்வரூப தரிசனம் அதிகாலை நாலரை மணிக்கே கிடைத்தது சாதாரண நாட்களில் காலை 6 மணிக்கு. பிறகு காலசந்தி அபிஷேகமும், உச்சி கால அபிஷேகமும் நடக்கிறது. அன்பு நேயர்கள் கண்டு களியுங்கள்.

தணிகை முருகனுக்கு எண்ணை காடபு கிடையாது. பால், பன்னீர், சந்தனம், தேன், பஞ்சாமிர்தம், விபூதி போன்றவைகள் மட்டுமே. கே.எஸ்.நாகராஜ குருக்கள் நிதானமாய் அபிஷேகம செய்கிறார். ஓதுவார் திரு கிருஷ்ணமூர்த்தி அவர்கள் திருப்புகழ் பாமாலையை கணீரென பாடுவது பரவசமாயிருந்தது.

நிர்வாக அதிகாரி திரு. ராமச்சந்திரன் அவர்கள், மக்கள் தொடர்பு துறை அதிகாரி திரு. கொண்டல் ராஜு அவர்களை அறிமுகம் செய்து வைக்கிறார்.

இனி மாலை அபிஷேகம்தான் 3 மணிக்கு ஆரம்பமாகப்போகிறது. ஒருநாளைக்கு மூன்று அபிஷேகம் தான், ஆறுகால பூசை. யார் அபிஷேகம் செய்வதானாலும் இந்த மூன்று கால அபிஷேகத்துடன் தான் சேர்ந்து செய்யவேண்டும்


ஐராவதம் என்னும் யானை திரும்பி நிற்கும் காட்சி

கல்லாத் தீர்த்தம்

அன்று ஞாயிற்றுக்கிழமையான தால் பக்தர்கள் கூட்டம் வந்து கொண்டேயிருக்கிறது. பால்காவடி புஷ்பக்காவடி இப்படி பலவித முருக பக்தர்கள் கூட்டம்.

அபிஷேக அலங்காரம் முடிந்து தீபாராதனை நடக்கிறது. தணிகேசனை மனநிறைவுடன் தரிசித்துக் கொள்ளுங்கள்.

காலை மணி எட்டுக்கும் மேலாகிறது. எனது நேயர்களுக்கும் தற்போது என்ன தேவை என்று தெரிகிறது. இதோ தேவஸ்தான வேன் ரெடி. கீழே தணிகை இல்லம், காட்டேஜுக்குப் போகலாம்.

தங்கத் தேர்

திரு. ராமச்சந்திரன் அவர்கள் உத்தரவுப்படி அவருடைய P A. திரு. மோஹன் எல்லா ஏற்பாடுகளும் செய்துள்ளார். சூடாக ஆவி பறக்கும் மத்தாப்பு இட்லி, வெண் பொங்கல், மெதுவடை சகிதம்காலை உணவு கனகச்சிதமாய் இருந்தது. திருப்திதானே?

முருகனைக் கண்டு, மனம்நிறைவு பெற்று, வயிறும் நிரம்பி மறுபடியும் மேலே செல்கிறோம்.

இந்த இடைவேளையில் இத்திருக் கோவிலைப்பற்றிய விளக்கங்களை திரு. ராமச்சந்திரன் அவர்கள் சொல்வதைக் கேட்போம்

முருகப்பெருமான் வள்ளியம்மையை திருமணம்செய்துகொண்டு ஆட்சி புரியும் திருத்தலம் தணிகையம்பதி. சுமார் 1200 ஆண்டுகளுக்கு முன்பே திருநாவுக்கரசர் "கல் மலிந்தோங்கும் கழுநீர் குன்றம்" எனப் பாடியுள்ளார். 600 ஆண்டுகளுக்கு முன்பு அருணகிரிப் பெருமானும் 63 பாடல்களில் தணிகைமுருகனைப் போற்றி புகழ்ந்துள்ளார். இத்தலத்திற்கு கழுநீர் குன்றம், செங்கல்வகிரி, உற்பலகிரி என்றும் பல பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளது இம் முருகனுக்கு செங்கல்வராயன் என்ற திருநாமமும் உண்டு.

கச்சியப்ப சிவாச்சாரியார் 'வரை இடங்களில் சிறந்தது தணிகைமால் வரையே' என்றும் புகழ்ந்து பாடியுள்ளார்.

வடலூர் இராமலிங்க சுவாமிகள் முதலில் தணிகை முருகனைத்தான் தன் ஒன்பதாவது வயதிலேயே பாட ஆரம்பித்து கண்ணாடியில் இம்முருகனைக் கண்டாரென்றும் சொல்லப்படுகிறது.

இத்திருக்கோவில் மலைமேல் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. மலை அடிவாரத்தில் உள்ளதுகுமார தீர்த்தம் என்ற திருக்குளம் உள்ளது. ஆடி கிருத்திகை சமயம்

மூன்றுநாள் தெப்ப உற்சவம் இத் திருக்குளத்தில்தான் நடைபெறும்.

சிவபெருமான் கயிலைமலையை விரும்பி அங்கு அமர்ந்துள்ளது போல், குமரப்பெருமான் இத்திருத் தணிகை மலையையே பெரிதும் விரும்பி மகிழ்ச்சியுடன் நின்ற திருக் கோலத்தில் இரண்டு கைகளுடன் அருள்பாலித்து வருகிறன்.

ஆயிரம் ஆண்டுகளுக்கும் முன்னமேயே பல்லவர், சோழர்முதலிய தமிழ்நாட்டுப் பேரரசர்களால் போற்றப்பட்ட பெருமை வாய்ந்த தலம் தணிகை.

5000 ஆண்டுகளுக்கும் முன்பே தொல்காப்பியர் நூலில் முருகன் வழிபாடு பற்றி சொல்லப்பட்டு உள்ளது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முன்பு நக்கீரப்பெருமானுல் இம் முருகனை குன்றுதோருடல் என்று அறுபடைவீடுகளில் தணிகையை யும் குறிப்பிட்டுச் சொல்லியுள்ளார் கள்.

மேலும் இத் திருக்கோவிலைப் பற்றிய விபரங்களும், முக்கியமான பல விஷயங்களும் இங்கு முருகப் பெருமானுக்கு சேவை புரிந்துவரும் ஸ்தானீகம், மன்னூர் குருக்கள் என்று அன்புடன் அழைக்கப்படும் திரு. வெங்கடசுப்பு குருக்கள், வயதில் மூத்தவர், நன்கு விஷயம் தெரிந்தவர், அவரை வரச் சொல்லி யிருக்கிறேன்.

அதற்குள் பகல் உணவருந்திக் கொள்ளலாம் என்று திரு. ராமச் சந்திரன் அவர்கள் அழைக்கிருர் கள். அன்பு நேயர்கள் புறப்படுங் கள். தணிகை இல்லத்தில் நுனி வாழை இலைபோட்டு பலவகைப் பொரியல், சாம்பார், ரசம், தயிர், அப்பளம் உள்பட முருகப்பெரு மான் பிரசாதமாக ஏற்பாடு செய் துள்ளார். ஒரு கை பாருங்கள். உண்ட மயக்கம் தொண்டருக்கும் உண்டு-உண்மைதான்.

பள்ளி அறையில் வள்ளியுடன் முருகன்

மூன்று மணிக்கு மாலை அபிஷேகம் ஆரம்பமாகிவிடும். அதற்குள் மலைக்குப் போய் ஸ்ரீ மன்னூர் குருக்களை சந்திக்கலாமல்லவா?

ஸ்ரீ மன்னூர் குருக்கள் அவர்களை அறிமுகம் செய்து வைத்துவிட்டு திரு. ராமச்சந்திரன் அவர்கள் தன் பணியைக் கவனிக்கப் புறப்படு கிருர்.

ஸ்ரீ மன்னூர் குருக்கள் அவர்கள் மிகவும் நிதானத்துடன், நீண்ட பல நினைவுகளுடன் சொல்வதைக் கேட்போம்.

இத்தணிகை முருகனை பிரம்ம தேவன், திருமால், சிவபெருமான்

ஆகிய மும்மூர்த்திகளும் வழிபட்டு உயர்ந்த வரலாற்றை, "சிலைமகள் நாயன்—கலைமகள் நாயன்—திருமகள் நாயன் தொழும் வேலா" என்று அருணகிரிநாதர் திருப்புகழ் பாடிப் போற்றியுள்ளார்.

மலைக்கோவில் தெற்கு வாயிலுக்கு 'நேராக 'கல்லார தீர்த்தம்' என்ற சுனைநீர்த்தேக்கம் உள்ளது. சூரபத்மனிடம் தன் செல்வங்களைப் பறிகொடுத்த இந்திரன் இச்சுனை நீரில் நீலோத்பல மலர் கொடியை நட்டு வளர்த்து அதன் மலர்களை காலை, நண்பகல் மாலை மூன்று வேளைகளிலும் முருகனுக்கு சமர்ப்பித்து பூசித்து வந்தான் அப்பொழுது இந்திரனால் ஏற்படுத்தப்பட்டு வணங்கிய விநாயகருக்கு செங்கழநீர் விநாயகர் எனப் பெயர் ஏற்பட்டது. இவ்விநாயகரையும் சேவித்துக் கொள்ளுங்கள். மிகவும் சக்தி வாய்ந்தவர் என இந்திரனாலேயே போற்றப்பட்டவர். இந்த புனித தீர்த்தத்திற்கு நீலோற்பலசுனை, இந்திர நீலச்சுனை எனவும் பெயர்கள் உண்டு.

இந்த சுனை நீரைத்தான் முருகப்பெருமானுக்கு மூன்று வேளை அபிஷேகத்திற்கும் பல்லாண்டுகளாய் உபயோகித்து வந்தார்கள் இந்திரன் மூன்று வேளை பூசித்ததால் தானோ என்னவோ, முருகனுக்கு இன்றும் மூன்றுகால அபிஷேகம் தான் நடைபெறுகிறது.

சமீப ஆண்டுகளாய் இந்தச் சுனைநீர் தேங்கியுள்ள புனித இடம் மிகவும் அசுத்தப்படுத்தப்பட்டும் உபயோகிக்கப்படாமலும் உள்ளது வெகு விரைவில் இதை நல்லமுறையில் சீர்படுத்தி இன்னும் சிலமாதங்களில் வழக்கம்போல் முருகப்பெருமானுக்கு அபிஷேகம் செய்ய ஏற்பாடுகளை தீவிரமாய் எங்கள் AC திரு.ராமச்சந்திரன் அவர்கள்செயல் பட்டு வருகிறார்கள் என்கிறார் திரு. மன்னார் குருக்கள்.

விஷ்ணு தீர்த்தம், நந்தி ஆறு, ஆதிசேட தீர்த்தம், அகத்திய தீர்த்தம், நாரத தீர்த்தம் இப்படி அவர்களால் நிர்மாணிக்கப்பட்ட புனித தீர்த்தங்கள் உள்ளன. இவைகளில் எந்தக் காலத்திலும் சுனைநீர் வற்றியதே கிடையாது.

இத்திருக்கோவிலில் விசேஷமாக உள்ளவற்றையும், பெருமானுக்குரிய சிறப்பான ஆபரணங்களைப் பற்றியும் சற்று தெளிவாகச் சொல்லுங்கள் எனக் கேட்கிறோம்.

திரு மன்னார் குருக்கள் அவர்கள் மாலை அபிஷேகம் ஆரம்பமாவதற்குள் கோவிலை ஒரு சுற்று வந்துவிடலாம் வாருங்கள் என்று அழைத்துச் செல்கிறார். அவர் கூடவே பரமேசுவர குருக்கள் அவர்களின் திருக்குமாரன் இளைஞர் திருஞானசம்பந்தமும் உதவியாக கூடவே வருகிறார் என் அன்பு நேயர்களும் சேர்ந்துக்கொள்ளுங்கள்.

இத்திருக்கோவிலுக்கு மூன்று பிரகாரங்கள். கிழக்குப் பிரகாரத்தில் கோவிலின் உட்புறம் கொடிக்கம்பம் உள்ளது அதன் இருபக்கம் உள்ள கொடிக்கம்ப விநாயகரும், மத்தியில் உள்ள ஐராவதம் என்ற யானை முருகனை நேராகப் பார்க்காமல் பின்புறம் திரும்பியுள்ளது.

இதன் பொருள் என்னவென்று திரு. மன்னார் குருக்களைக் கேட்கிறோம்.

முருகனை நேராகப் பார்க்காமல் கிழக்கு நோக்கி உள்ளதற்கு காரணம்; ஐராவதம் இந்திரனுக்குரிய

நல்லி
சின்னசாமி செட்டி
பனகல் பார்க், சென்னை

வாகனம். தெய்வயானையின் திருமணத்தின்போது சீதனப் பொருளாக இந்திரனால் கொடுக்கப்பட்டது. தன் செல்வம் குறைந்துவிடுமென்று முருகனை பூஜித்து சீதனமாய் கொடுத்ததை திரும்பப் பெறகூடாது என்றும், ஐராவதம் தங்களுக்கு வாகனமாக இங்கேயே இருக்கட்டும். ஆனால் கிழக்கேயுள்ள என் பட்டணத்தைப்பார்த்த வண்ணம் இருந்தால் என் செல்வம் குறையாமல் இருக்கும் என இந்திரனால் வேண்டப்பட்டு, முருகனும் அப்படி இருக்கும்படி அநுக்கிரகம் செய்தாரென்றும் புராண வரலாறு கூறுவதாகவும், இம்மாதிரி யானை வாகனம் ஆறுபடை வீடுகள் எதிலும் கிடையாது. மயில் வாகனம் தான் இருக்குமென்றும் விளக்கும் தந்தார்.

அடுத்து தெற்கு பிரகாரத்தில் கோவிலினுள் உள்ள ஆபத்சகாய விநாயகர். அருகிலுள்ள வீரபாகு முதலிய ஒன்பது வீரர்கள், ஷண்முக சுவாமியையும் தரிசித்துக்கொள்வோம்.

தெற்குப் பிரகாரம் வழியாகச் செல்லுகிறோம். அங்கு பிரசன்ன காதர் ஈசுவரர் என்னும் சிவசந்நிதி உள்ளது. தனக்கு ஏற்பட்ட கஷ்டம் நீங்கியதால் காதர் என்னும் பெயருடைய நவாப் ஒருவரால் இந்த சந்நிதி ஏற்பட்டதாம். இங்கு நவாப் அவர்களால் ஏற்படுத்திய நவாப் வாத்திய மண்டபம் ஒன்றும் உள்ளது.

இரண்டாவது பிராகாரத்தில் யாகசாலைகளுக்கு எதிரில் முருகனுக்குப் பயன்படுத்த இந்திரனால் தன் மகளுக்கு சீதனமாக அளிக்கப்பட்ட தொன்மை வாய்ந்த சந்தனகல் உள்ளது.

ஆயிரமாயிரம் ஆண்டுகளாகப் பயன்படுத்தி வந்தும் இந்தப் புனித கல் தேய்வு பெறுமல் அப்படியே உள்ளது இது சன்னமாக இராமல் இருக்கிறது. நவரத்தின கற்கள் பதிக்கப்பட்டது என்றும், இதில் இருந்து எடுக்கப்படும் சந்தனம் தான் முருகனுக்குச் சாத்தப்படுகிறது. அப்புனித ஸ்ரீபாத சந்தனம் தான் பக்தர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. இது எல்லாவிதமான நோய் நொடிகளும் தீருகிறதென்று நம்பிக்கையுடன் பக்தர்கள் மகாபிரசாதமாகப் பெற்றுக்கொள்கிருர்கள்.

அந்தக் கல்லில் இரண்டு பள்ளங்கள் உள்ளது அதில் கொஞ்சம் சந்தனம் உள்ளது. என் அன்பு நேயர்களுக்கு அதில் கொஞ்சம் கொஞ்சம் கொடுக்கிறேன் மானசீகமாய் பெற்றுக்கொள்ளுங்கள்.

அடுத்து வடமேற்கு மூலையில் ஷண்முகசுவாமியின் அபிடேக மண்டபம் உள்ளது. ஆறுமுக சுவாமியை தரிசித்துவிட்டு அப்படியே அங்குள்ள ஒரு தூணின் பக்கத்தில் நின்றுமேல்புரமாகசாய்ந்து ஒரு துவாரத்தின் வழியாக பார்த்தால் மூலவர் மேல்விமானத்தை தரிசிக்கலாம் இங்குள்ளமுருகனுக்கு கல்யாண முருகன் என்ற பெயரும் உண்டு.

வடகிழக்கு மூலையிலுள்ள உருத்திராக்ஷ விமானத்தில் முதன்மையான பெரிய உத்ஸவ மூர்த்தி அமர்ந்து அருள்பாலிக்கிருர். விமானம் மேல்பாகம் பூராவும் உருத்திராக்ஷத்திளுல் அமைந்துள்ளது. இங்குள்ள உத்ஸவ மூர்த்தியை தரிசித்தாலே எல்லா நன்மைகளும் ஏற்படும்.

அருகில் உள்ள பஞ்சாக்ஷரப்படியின் ஐந்துபடிகள் வழியாக ஞானசக்திதரர் என்னும் தணிகைப்பெருமானை கர்ப்பக்கிரகத்தில் தரிசிக்

எல்லோருக்கும் எமது தீபாவளி தின நல் வாழ்த்துக்கள்

பூங்கா ஏஜன்ஸீஸ்

(FLAT BUILDERS)

17, ராஜா தெரு, தி. நகர், சென்னை-600 017.

*

மலர்கொடி மேன்ஷன்

(BACHELOR ROOMS ACCOMODATION)

5-1, லக்ஷ்மிகாந்தன் தெரு, பாண்டிபஜார், சென்னை-17

(ராஜகுமாரி தியேட்டர் பின்புறம்)

*

செழியன் மேன்ஷன்

(BACHELOR ROOMS ACCOMODATION)

18, ராஜா தெரு, தி. நகர், சென்னை-600 017.

*

பூங்கா கல்யாண மண்டபம்

(அனைத்து வசதிகளும் நிறைந்தது)

18, ராஜா தெரு, தி. நகர், சென்னை-600 017.

HAPPY DEEPAVALI GREETINGS

OM

MANI'S MODERN MART

(ESTD. 1947)

Dealers for DUNLOP and MRF TYRES OF ALL SIZES.

14, GENERAL PATTERS ROAD
MADRAS-600 002.

Phone–Office: 849829 Resi: 81829

[illegible]ரும். முருகனுக்குப் பதினாறு வகை திருஉருவங்கள் உண்டு. அவைகளில் இந்த ஞானசக்திதரர் என்னும் நின்ற திருக்கோல நிலை. இரண்டு திருக்கைகளுடன் ஒரு கையில் வேலேந்தி (இதற்கு சக்தி ஹஸ்தம் எனப் பெயர்) மற்ற திருக்கையை தொடையில் அமர்த்திக் கொண்டு மயில் வாகனம் இல்லாமலேயே தனியே நிற்கிறார் தணிகைப்பெருமான்.

மாலை அபிஷேகம் மூன்று மணிக்கே ஆரம்பமாகியது பால், இளநீர், சந்தனம், விபூதி, பஞ்சாமிருதம், கண்கொள்ளா காட்சியாக உள்ளது. முருகா, முருகா என பக்தர்களின் புனிதகோஷம் மெய் சிலிர்க்கவைக்கிறது.

அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை நடைபெறுகிறது. அன்பு நேயர்கள் கந்தப் பெருமானை, குமாரப்பெருமானை, வேலாயுதனை கண்டு ஆனந்தமடைந்து அருள் பெற்று நல்வாழ்வு பெறுங்கள்.

மூலவர் பின்புறம் வடக்குமூலையில் இச்சாசக்தியாகிய வள்ளியம்மை போகசக்தியாகவும், இடது புற மூலையில் கிரியாசக்தியாகிய தெய்வானை யோகசக்தியாகவும் பஞ்சலோக சிலாவடிவில் நின்ற திருக்கோலத்தில் இருக்கிறார்கள். முருகனுக்கு ஆத்மார்த்தயாக உள்ளவர்கள். இவர்களுக்கு அபிஷேகமோ மற்றும் எதுவும் கிடையாது இவர்களை யாரும் பார்த்திருக்க முடியாது. மூலவரின் பக்கத்தில் நின்று கற்பூரம் காட்டினால் மட்டும் பார்க்கமுடியும். எனது நேயர்களுக்காக தனிப்பட்ட முறையில் குருக்கள் தரிசனம் செய்து வைத்தார்.

இங்கு சண்டிகேசருக்குப் பதி சுமதீஸ்வர் சன்னிதிதான். பக்கத்தில துர்கை.

முருகனுக்குப் பச்சைக் கல்லால் செய்யப்பட்ட ஷட்கோண பதக்கம் என்ற சிறப்பான மாலை உள்ளது. 1008 வில்வதலங்கள் கொண்ட தங்கத்தால் செய்யப்பட்ட மாலை உள்ளது. இதன் எடை சுமார் ஆறு கிலோ உள்ளதாம் இது மிகவும் விசேஷ காலங்களில் முருகனுக்கு அணிவிக்கப்படும்.

முருகன் திருப்பாதங்களுக்கு அடியில் வெள்ளியினால் செய்யப்பட்ட மகாயந்திரம் உள்ளது. இந்த ஷஷ்டி ஆறுநாளும் விசேஷபூஜை நடைபெறும். இங்கு ஷஷ்டி விழாவில் சூரசம்ஹாரம் கிடையாது.

இத்திருக்கோவிலில் தங்கரதமும் வெள்ளிரதமும் உள்ளது.

இத்திருக்கோவிலுக்கு தேவர் பிலி ஸ் அதிபரால் காணிக்கையாகக் கொடுக்கப்பட்ட யானை உள்ளது.

AC திரு. ராமச்சந்திரன் அவர்களால் ஏற்பாடு செய்து தந்த பாலாஜி ஸ்டுடியோ இளைஞர்கோபி அவர்களால் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் உள்ளது. அவைகளைப் பார்த்துக்கொள்ளுங்கள்.

இரவு ஒன்பது மணிக்கு அர்த்த ஜாம பூஜைமட்டும்தான் அபிஷேகம் கிடையாது இந்த பூஜை தரிசனம் மிகவும் விசேஷம்.

பள்ளி அறை கண்ணாடியால் நன்கு அலங்கரிக்கப்பட்டுள்ளது. இரவில் முருகனுக்கு ஒருநாள் வள்ளியம்மையும், ஒருநாள் தெய்வயானை அம்மையுமாக பள்ளியறை

யில் வைப்பார்கள். அன்றைய தினம் நாம் பள்ளியறையில் வள்ளியம்மையுடன் முருகனை சேவிக்கிறோம். அர்த்தஜாம பூஜைமுடிந்து இந்த பள்ளியறை பூஜை நடைபெறுகிறது.

நேயர்களை இத்துடன் தணிகை முருகனை தரிசித்துக்கொண்டு, உங்கள் சார்பாக, A.C ராமச்சந்திரன், மன்னூர் குருக்கள் மற்றும் கோவில் சம்பந்தப்பட்ட PRO இவர்களிடமும் நன்றிகூறி விடைபெறுகிறோம்.

இத்திருக்கோவிலுக்கு விரைவில் கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. இத்திருக்கோயில் தக்கார், பேரம்பாக்கம், தமிழக சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர். ஷண்முகம் அவர்களின் பெருமுயற்சியால் திருப்பணிக்குழு அமைக்கப்பட்டு சுமார் ஐம்பது லட்ச ரூபாய் செலவில் திருப்பணி வேலைகள் ஆரம்பமாக உள்ளது,

ஆன்மீக அன்பர்கள், குறிப்பாக முருக பக்தர்கள் தங்கள் காணிக்கைகளை வாரி வழங்கி இப்புனிதப் பணி நிறைவேற ஒத்துழைக்க வேண்டுமென்று திரு. ராமச்சந்திரன் அவர்கள் பெருமையுடன் சொல்லுகிறார்,

இப்புனித தீபாவளி திருநாளில் அன்பர்கள் ஒருநாள் பூராவும் தணிகைப் பெருமானிடம் கூடவேயிருந்து எல்லா கால பூஜைகளையும் பார்த்து பரவசமாகி அவன் அருளால் எல்லா நன்மைகளும் பெற்று பெருவாழ்வு வாழ என்

திருக்கோவில தககார்
பேரம்பாக்கம் ஆர். ஷண்முகம், M. L. A.

திரு. ராமச்சந்திரன் அவர்களிடம்
ஆசிரியர் விடைபெறுதல்

அன்பு தெய்வமான குமாரப்பெருமானை வேண்டி என் அன்பு வாழ்த்துக்களை சமர்ப்பிக்கிறேன்.

—குண்டுசி ராதாகிருஷ்ணன்

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

அனைவருக்கும்
மன நிறைவு தரும்
சுவைமிகு
ஊறுகாய்
கோகுல்
மாங்காய் ஊறுகாய்
டி.எஸ்.ஆர் & கோ
கோகுல் கார்டன்ஸ்,
கும்பகோணம்.

பணிவால் உயர்ந்த பலி

பி. எஸ். பரமேஸ்வரன், பி.ஏ., பி.எல்., சென்னை

பகவானின் லீலா விசேஷங்களைக் கூறுவதால் மனிதனின் தாபத்ரயங்களால் ஒடுக்கப்பட்ட மனித ஆத்மா விகஸிக்கிறது. அவன் பெருமைகளைக் கூறுவதும், கேட்பதும் பாவம் செய்தவனையும் உய்விக்க வழிகோலுகிறது. அவனது லீலாமிருத விசேஷத்திலேயே தோய்ந்து வாழ்வு பெறுகின்றனர் மகான்கள் என்பது கோபிகைகளின் கூற்று. இந்த உண்மையை விளக்கும் ஒரு லீலையே நாராயணன் அந்தணச் சிறுவனின் உருக்கொண்டு, பலி என்ற அசுரவேந்தன் அசுவமேதம் செய்கிறான் என தெரிந்து அவ்விடம் வந்தான்.

முப்பிரி நூலினன், முஞ்சியன்
விஞ்சை கற்ப தோர் நாவன்,
அனற்படு கையன்
அற்புதன, அற்புத ரே அறியுந்தன்
சிற்பதம் ஒப்பதோர் மெய்கொடு
சென்றான்

என்கிறார் கம்பநாட்டாழ்வார்.

நர்மதை நதிக்கரையில் அமைக்கப்பட்ட யாகசாலையை மாய மாணுக்கனான வாமனன் அடையும்போது அவருடைய தேஜஸ் மற்ற எல்லாவற்றையும் மங்கச் செய்தது. சூரியனே, அக்னியோ என ஐயுற்று அந்தணரை வரவேற்றனர் பலி அவரை அமரச்செய்து கால்களை அலம்பி தகுந்த உபசாரங்கள் புரிந்தான்.

என் கால் அளவால் மூன்றடி நிலம் போதும் என்று தானம் கேட்ட சிறுவனை, பலி உன் வாழ்வுக்கு வேண்டிய நிலம் தருவேன் எனக்கூறியும் வாமனர் ஒப்பவில்லை. மூன்றடி போதாதவனுக்கு நாடெல்லாம் கொடுப்பினும் போதாது. ஆசை வளர்ப்பது பிறவிக்குக் காரணம். போதாதென பரிதவிக்கும் பிராம்மணின் பெருமை தணைந்த நெருப்புபோல் நசிக்கும் என்கிறார்.

தானம் வேண்டி நின்றவர் இவ்வாறு கூற, பலியின் குருவாகிய சுக்கிராச்சாரியார் அவனைப்பயமுறுத்துகிறார். உன்னால் வாக்கைக் காப்பாற்ற முடியாமல் ஹரியிடம்மயங்கி பாபத்துக்கு ஆளாவாய் எனக்கூறி தற்காப்புக்காக பொய்மை கூறுவதில் தவறில்லை என போதிக்கிறார்.

நீ கேட்டதைக் கொடுப்பேன் எனக் கூறிய பலி தன் ஆசிரியரின் வார்த்தைகளை மீறி, அரசனாகிய நான் பொருளாசை மேலிட்டு கொடுத்த வாக்கை மறுப்பது சரியன்று. மறைந்துபோகும் உடலோடு செல்வம் வருவதில்லை. ஆகவே வந்திருக்கும் இவர் விரோதியாயினும், விஷ்ணுவாயினும் கேட்ட பூமியைக் கொடுத்து விடுவதுதான் முறை என்று மறுத்துப் பேசினான். இதனால் சுக்கிரர் பலியைச் சபித்தார் நீ பதவியினின்றும் நழுவி துயருறுவாய் என.

பலியின் மனைவி விந்தயாவளி நீர்கொண்டு வர பலி அந்தணரின் காலைக் கழுவி அந்த நீரை தலைமேல் தெளித்துக்கொண்டான். பின் பூமியைத் தானம் கொடுக்க

இந்த தீபாவளிக்கு சாரதா'ஸ்
பரவசமூட்டும் வசீகரமான டிசைன்
களில் காஞ்சிபுரம் பட்டு புடவைகளை
உங்களுக்கு
அளிக்கிறது
பனாரஸ் புடவைகள்
புதிய டிசைன்களில்
வந்துள்ளன.
சாரதா'ஸ்
(முகூர்த்தப் பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்)
தன் பில்டிங்
மவுண்ட் ரோடு
சென்னை-600 002
போன் : 87177
N.S.B. ரோடு
திருச்சி-620 002
போன் : 27077
தீபாவளி முடிய ஞாயிற்றுக்கிழமை விற்பனை உண்டு
SARATHA'S
MADRAS & TRICHY

றான். குறுகி நின்ற எம்பெருமான் திருவிக்கிரமனாக வளர்ந்தார்.

ஓரடியால் புவியை அளந்தார். இரண்டாவதடிக்கு விண்ணுலகே போதவில்லை. மூன்றாவதடிக்கு இடம் கேட்ட வாமனரிடம் மனம் கோணாமல், நான் கொடுத்த வாக்கைக் காப்பவன். மூன்றாவது அடியை என் தலைமீது வையுங்கள் என்றான் ஆனால் தீயவன் எனக் கூறுதீர்கள் என வேண்டினான் பலி.

செருக்கெய்திய என்னை என் பாட்டனாகிய பிரஹலாதனின் நற்பயனே உம்மிடம் அண்ட வைத்திருக்கிறது என்றும் கூறி தலை வணங்கி பக்தியோடும் பணிவோடும் நின்றான் பலி.

பலியின் மனைவி விந்தியாவளி பகவானிடம் விளையாட்டாக மூவுலகை படைத்தீர். உமது மாயையால் மயங்கியவர் மதியீனத்தினால் தாம் விரும்பியவாறு நடக்க திறம் உண்டென்றெண்ணுவர். உமக்கு நாங்கள் எதைத் தரமுடியும் என்று பணிந்தாள்.

பிரஹலாதனும் பிரமனும் பலியைக் காக்க வேண்டினர்.

பகவான் தனது உண்மை மனப்போக்கை எல்லோரிடமும் அப்போது வெளியிட்டார். பிரம்மனே! என் பக்தனொருவன் என் அருளை விரும்புவானாகில் அவன் செல்வத்தைப் பறித்து விடுவேன். செல்வம் இருந்தால் அவன் செருக்குண்டு என்னை மறப்பான். தணிந்திருப்பவன் என் அருளை எந்நாளும்பெறுவான்.

பலி இந்நிலையைத் தாண்டியவன் அதனால்தான் இழுக்குற்றபோதும் துன்புறாது அமைதியுடன் விளங்குகிறான் சுற்றமும் ஆசிரியனும் அவமதித்தபோதிலும் தன் வாக்கை மாற்றவில்லை. உண்மையை உதறாத உத்தமன். போலி தர்ம உபதேசத்தை உதறினான். தேவருக்கு கிட்டாத நிலையை இவனுக்கு அளிப்பேன் என்றார் மஹா விஷ்ணு.

சுதலத்தில் பலியை ஆட்சி செய்யும்படி கூறி, தனது சுதர்சனத்தை அவன் மெய்காப்புக்கு அளித்து, தானே கதை ஏந்தி வாயிலில் நிற்பதாக வாக்களித்தார் பகவான்.

பலி தன்னிலையும், பரமனின் அருளும் கேட்டு கண்ணீர் மல்க கைகூப்பி அவரைப் பணிந்து வணங்கினான். பரமனது வாக்கால் பிரஹலாதன் பரவசமடைந்தார்.

என்சாணுடம்புக்கு சிரமே சிறந்தது. அத்தகைய தலைக்கு வைக்கும் அணையை (தலையணையை) சாணியென்றும் சந்தனமென்றும் அறியாத காலுக்கு வைத்துப படுக்காதே. அவசியமானால காலுக்குத் தனியாக ஒன்றை அடையாளத்துடன் வைத்துக்கொள

—வரரியார்.

எமது மனங்கனிந்த தீபாவளி திருநாள நல்வாழ்த்துக்கள்



ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா

எமது மனமார்ந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்

தங்களின் ஒரு முறை விஜயம்
திருப்தியை அளிக்கும்

SREE MAHALAKSHMI STORES

106, Veeraperumal Koil Street,
MYLAPORE, MADRAS-600 004
Grams: MALLI APLAM
Phone: p. p. 72395

எங்களிடம் உயர்தர அப்பளம் வடாம், வத்தல், ஊறுகாய்கள். சிப்ஸ், இனிப்பு, காரவகைகள், சாம்பார், ரசம் பொடிவகைகள் குழந்தை உணவு வகைகள்கிடைக்கும் கல்யாண ஆர்டர்கள் சிறப்பாகவும் காலத்தோடும் செய்து தரப்படும்

VISIT ONCE—SATISFY YOURSELF

பெருநகரங்களில் விநியோகஸ்தர்கள் விண்ணப்பிக்கவும்.

SRI RAGHAVAN TRANSPORTS

(Props: SRI RAM TRADING and TRANSPORT PRIVATE LTD.)

Head Office: Third Floor, 145, LINGHI CHETTY STREET,
MADRAS-600 001

Phone: Office-24700 - 22949 Godown - 511913

Associates for Andhra Pradesh
Commercial Goods Transports

BRANCH OFFICE

MADRAS Delivery & Booking
221, Linghi Chetty Street
Madras-600 001
Phone: 511913

BANGALORE
116, Fifth Cross,
Kalasipalayam New Extn.,
Bangalore-560 002
Phone: 221191

Coimbatore; Madurai, Nagercoil, Erode, Salem, Pondicherry
Tirunelveli, Trichy, Tuticorin, Tirupur

18683

காலடி தந்த காவியமே
காலமெல்லாம் பூத்திருக்கும் கற்பகமே
காமகோடி வம்சத்தின காவலனே—நின்
நாமத்தைச் சொன்னாலே க்ஷேமம்தானே

கலவையில் குருவாய் உருவெடுத்து
கற்பகமாய் கனிந்து நிழல்கொடுத்து
காஞ்சியில் தவமிருக்கும் அருள்முனியே—நின்
காலடி பற்றிதினம் வணங்குகிறோம்.

இருள்நீக்கித் தந்த அருட்சுடரே
இருள்போக்க வந்த குருவருளே
இனிதாகப் பேசும் தவமணியே
பொன்போல ஜொலிக்கும் ஜயேந்திரரே

ஆதிகுரு சங்கரசின் வழிவந்த
ஆன்மீகச் சுடரொளியே கண்மணியே
ஆன்றோரின் பாதைக்கு வழிகாட்டும்
ஆசானே அருள்பரப்பும் இளங்கன்றே

இல்லங்களை அழகு செய்து வாங்குவோர் உள்ளங்களை மகிழ்விப்பது

ஷோரூம்கள் :

- 110, கச்சேரி வீதி, மயிலாப்பூர், சென்னை-600 004
- 23, வடக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-600 004
- 10, பி.வி.கே. அய்யங்கார் ரோடு, பெங்களூர்-560 053
- 7-3-130, மெயின் ரோடு, இந்துப்பூர் (ஆந்திரா)
- 231, நாயக்கர் புதுவீதி, மதுரை-1,
- 77A, கிழக்கு ரத வீதி, திருநெல்வேலி-6
- 2A, காமராசர் தெரு, டவுன், சேலம்-1.
- 23, பஞ்சவர்ணசுவாமி கோயில்தெரு, உறையூர், திருச்சி-3
- 186, எம்.ஜி. கிளாத் மார்க்கெட், சிராளா (ஆந்திரா)
- காலேஸ்வரராவ் ரோடு, கவர்னர்பேட், விஜயவாடா-2 (ஆந்திரா)

ஈரோடெக்ஸ்

கைத்தறி ஆடைகள்

பெட சீட்டுகள், டவல்கள், தலையணை உறைகள், அலங்காரத் துணிகள், லுங்கிகள் மற்றும் நேப்கின்கள்

ஈரோடு நெசவாளர் கூட்டுறவு சங்கம், லிட்.,

"ஜெகநாத நிலையம்"

218, நேதாஜி ரோடு, ஈரோடு-638 001

போன் : 74170 & 75568 தந்தி : "ஈரோடெக்ஸ்"

ஜெ சுத்தானந்தன் தலைவர்

தாலிபாக்கியம்

சிறுவன் முருகனின் கண்கள் சொருகிப் போய்விட்டன. வாசலுக்கும், உள்ளுக்குமாக தாயார் கமலா ஓடிக்கொண்டிருந்

ராஜா

தான். இன்னும் கணவன் ரத்னம் வந்தபாடில்லை.

முருகனை டாக்டர் வீட்டுக்குத் தூக்கிப் போகவேண்டுமென்றால் அதற்குப் பணமவேண்டும். கையில் பணமோ, அடமானம் வைக்கக் கூட ஒரு பொட்டுத் தங்கமோ, ஒரு பித்தளை பாத்திரமோ இல்லை.

அதற்காகத்தான், கண்ணீர் ததும்ப, கணவனுக்காக காத்திருந்தாள் அவள் எங்கு போகிறானோ? எப்பொழுது வருவானோ? அவன் பார்க்கும் வேலையோ நிரந்தரமில்லை. சாயங்காலமாகிவிட்டது.

ரத்னம் சாராயம் குடித்துவிட்டு, வீட்டிற்குள் ஒரு சினிமா பாட்டை பாடிக்கொண்டே நுழைந்தான்.

நம்ப முருகனைப் பாருங்க. கண்ணைத் திறக்கவேயில்லை, உடனே டாக்டரிடம் போகணும். கையிலே காசில்லை பணம் கொடுங்க, என்ருள் கமலா அழுதுகொண்டே.

என்கிட்டே ஏது காசு? உன் தாலியை மார்வாடி கடையிலே கொண்டு வச்சி, பணம் வாங்கி, டாக்டரிடம் பிள்ளையை தூக்கிட்டு போ எனக்கு வெளியிலே அவசர வேலை இருக்கு. ராத்திரி வீட்டுக்கு வரமாட்டேன், என் தோஸ்துகள் எல்லாரும் காத்துகிட்டு இருப்பாங்க. தாலியிலே இருக்கிற தங்கம் இன்னைய விலைக்கு நூறுரூபாய் பெறும், என்றுசொல்லிக்கொண்டே வெளியே புறப்பட்டுப் போனுன் ரத்னம்.

மஞ்சள் கிழங்கை தாலி கயிற்றில் கட்டிக்கொண்டு, தாலி தங்கத்தையும், பிள்ளை முருகனையும் தூக்கிக் கொண்டு போனுள். தங்கம் மார்வாடி கடைமூலம் ருபாய் நூருக மாறியது. ரத்னம் அதெல்லாம் மதிப்பு கரெக்டாகப் போடுவான்.

முருகனை டாக்டரிடம் கொண்டு போனுள். என்னம்மா! இவ்வளவு

ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா

சீரியஸ்ஸாகக் கொண்டு வந்திருக்கீங்க என்று கோபித்துக்கொண்டே ஊசிபோட்டு, நாற்பது ருபாய்க்கு மருந்துகள் எழுதி, கடையில் வாங்கிக்கொள்ளும்படி சீட்டு கொடுத்தார்.

ஊசி மருந்து கையிலேற்றியவுடன், முருகன் முகத்தில் சிறிது தெளிவேற்பட்டது. கடையில் மருந்துகளை வாங்கிக்கொண்டு வீடு வந்து சேர்த்தாள். கமலா இரவு முழுவதும் விழித்திருந்து நான்கு மணிக்கொருதரம் மருந்தைக் கொடுத்தாள்.

பொழுது விடிந்தது. அம்மாவென்று முருகன் கூப்பிட்டது கமலாவுக்கு ரொம்ப ஆறுதலாயிருந்தது.

இது ரொம்ப அற்ப சந்தோஷமாகப் போகுமென்று அவள் நினைக்கவேயில்லை.

காலை எட்டு மணி, இரண்டு போலீஸ்காரர்கள் வந்து, ரத்னம் வீடு தானேம்மா இது? என்றுகேட்டார்கள்.

ஆமாம் என்றாள், அவளுக்குப் பக் என்றது.

நீதானே அவன் பெண்சாதி. எங்களோடு புறப்படு என்று கமலாவை கூட்டிக்கொண்டு பஜாருக்குப் போனார்கள். ஹரிராம் சேட் வட்டிக்கடை முன்பு ஒரே கூட்டம்,

நான் நேற்று தாலியை அடகு வைத்து பணம் வாங்கியது இந்தக் கடைதானே? என்று கமலா தனக்குத்தானே கேட்டுக்கொள்கிறாள்.

கூட்டத்தை விலக்கிக்கொண்டு கடைக்குள் சென்றாள். ரத்னம் ரத்த வெள்ளத்தில் கிடந்தான். உங்களுக்கா இந்த நிலை? என்று அவன்மேல் விழுந்து அழுதாள். அவன் பக்கத்தில் ஒரு துணிமூட்டையில் நகைகள் கிடந்தன

கமலாவைக் கண்டவுடன் கண்களை முழித்துப் பார்த்தான். அவன் ஒரு கையை மூடிக்கொண்டிருந்தான்.

திருட்டுக் கழுதைக்கு என்னடா பாசம்? போலீஸ் இன்ஸ்பெக்டர் கத்தினார்.

ரத்னம் மூடிய கையை கமலாவிடம் நீட்டினான். அவள் கையைத் திறந்து பார்த்தபோது, நேற்று அடகுவைத்த தாலி இருந்தது.

என்னடா கையிலே வேறே தங்கமா? என்று இன்ஸ்பெக்டர் அதை பிடுங்கிக்கொண்டார்,

போலீஸ்வேன் வந்துவிட்டது. கமலாவிடம், நீ தள்ளும்மா, இது உன் புருஷன் தானே? அது போதும் ஜெனரல்ஆஸ்பத்திரியில் அட்மிட் பண்றோம். உன் தாலிபாக்கியம் நல்லா இருந்தா பொழைப்பான். இல்லையானால் அவன் பாடி தான் கிடைக்கும். போ போ என்று அவளைத் தள்ளிவிட்டு, ரத்னத்தை தூக்கிப் போலீஸ்வானில்போட்டுக் கொண்டு ஆஸ்பத்திரியை நோக்கி விரைந்தனர்.

கூட்டத்தினர் பேசிக்கொண்டனர். என்னய்யா, அநியாயம், அதிகாலை மூனு மணிக்கு கொள்ளையடிச்சிருக்காங்க. அந்த நேரத்திலே ரோந்து போலீஸ்காரங்க அந்தப் பக்கமா வந்திருக்காங்க. அதைப் பார்த்துவிட்டு நாலு கொள்ளைக்காரங்க ஓடிட்டானுங்க. உள்ளேயிருந்த ரதனம்தான் மாட்டிக்கிட்டான். இவனும் போலீஸ்காரங்களை கத்தியால குத்த வந்திருக்கான். போலீஸ்காரங்க விடு

அனைவருக்கும் எங்களது தீபாவளி நல் வாழ்த்துக்கள்

தோன்றிவிட்டால் போதுமா!

காக்கையும் குயிலும் ஒரே கூட்டிலே பிறந்தாலும்

காக்கைதான் பாடிடுமா?

வேம்பும் கரும்பும் ஒரே மண்ணிலே வளர்ந்தாலும்

வேம்புதான் இனித்திடுமா?

நத்தையும் முத்தும் ஒரே நீரிலே தோன்றினாலும்

நத்தைதான் ஜொலித்திடுமா?

சகல பொடிகளும் பட்டணத்திலே தயாரானாலும்

'ரத்தினம்' பொடியைப்போல்

கவர்ந்திடுமா, மணந்திடுமா, ஜொலித்திடுமா

T·A·S·ரத்தினம்

பட்டணம் பொடி

தபால் பெட்டி 1151, சென்னை-21

S.R. ஞானம் பட்டணம் பொடியும் எமது தயாரிப்பே

வாங்களா? கடைசியிலே ஷூட் பண்ணிட்டாங்க.

இடது கையிலே தானே? இப்படி ஒருவர்.

நெஞ்சிலேல்ல சுட்டிருக்கனும். இப்படிச் சொன்னார் ஒரு இதயமில்லாதவர்.

கமலா இதையெல்லாம் கேட்டுக் கொண்டே வீடுபோய்ச் சேர்ந்தாள்.

முதல்நாள் மகனுக்காக கண் விழித்தாள். அடுத்தநாள் கணவனுக்காக ராத்திரியை சிவராத்திரியாக்கினாள்.

போலீஸ் காவலில் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறும் ரத்னத்தைப் பார்க்க, கமலா போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் அனுமதி பெறவேண்டியிருந்தது. மூன்றுவது நாள்தான் அனுமதிகிடைத்தது.

ரத்னத்தின் உயிருக்கு ஆபத்தில்லை. ஆனால் அவன் இடதுகையைத்தான் எடுத்துவிட்டார்கள்.

இதைக் கண்டு கமலா கதறி அழுதாள். அழாதே கமலா! உன் தாலி பாக்கியத்தால்தான் ஒருகைபோனதோடு பிழைத்தேன், முருகன் எப்படியிருக்கான்? என்று கேட்டான் ரத்னம்,

நல்லா இருக்காங்க. அதுவும் உங்க தாலிபாக்கியம் தானுங்களே.

சிரித்தான்,

கமலா! சிகிச்சைமுடிந்து,கோர்ட் தண்டனையும் அனுபவித்துவிட்டு புது மனிதனாய் வருவேன். இனி தப்புதண்டா எதுக்கும் போகமாட்டேன் என்று சொல்லி அழுதான்.

அழாதீங்க! புது மனிதனாய் வந்தால் அதுபோதுங்க!

ஏய்! இன்னும் என்ன செய்றே. டயமாயிடுத்து, ஒரு கான்ஸ்டபிள் விரட்டினான்.

என் உடம்பைப்பற்றி உன்னைவிட .போலீசுக்குத்தான் ரொம்ப அக்கறை. ஜாக்கிரதையா பார்த்துக்குவாங்க. நீ முருகனை ஜாக்கிரதையா பார்த்துக்க,

அந்த முருகன்தான் நாம எல்லாரையும் பாத்துக்கறான் என்று கண்ணீர் ததும்ப சொல்லிவிட்டு, ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறினாள்.

எல்லோருக்கும் எமது தீபாவளி தின நல் வாழ்த்துக்கள்

சுவையுள்ள ரொட்டி, பன், பிஸ்கட், கேக் தினுசுகள் யாவும் உங்கள் விருப்பத்திற்கேற்றபடி எப்பொழுதும் புத்தம் புதிய பொலிவுடன் கிடைக்குமிடம்

அய்யர் & கம்பெனி

134, ராஜ வீதி, கோயமுத்தூர்-640 001.
போன்: கடை - 23572 வீடு; 25268

எமது சார்பு நிறுவனம்:

அய்யர் & கம்பெனி

ஸ்ரீராம் பில்டிங்ஸ், ஸ்டேட் பாங்க் வீதி, கோவை-641 018.

ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா

அன்புமிக்க பங்குதாரர்களுக்கும்
சந்தாதாரர்களுக்கும் அன்பர்களுக்கும்
ஏனைய பொதுமக்களுக்கும்

எமது இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

பாலக்காடு பர்மனேனன்ட் பண்டு லிட்.
பாலக்காடு சிட்பண்ட்ஸ் (பி) லிட்.
பாலக்காடு கிரேடிட் கார்போரேஷன்

16, நாநா தெரு, தியாகராயநகர்,
சென்னை-600 017

மற்றும் கிளைகள்

படை வீட்டுப் பஞ்சகம்

அருள்மொழி அரசு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்

ஞாயிற்றுக்கிழமை—திருப்பரங்குன்றம்

தாயினும் இனிமை யாகத் தண்ணருள் புரிவாய் போற்றி
சேயெனை யாள்வாய் ஞானத் திருமுரு கேச போற்றி
மீயுயர் பரங்குன் றத்தில் மேவிய வேலா போற்றி
ஞாயிறு வாரம் வந்து நலமெலாம் அருள்வாய் போற்றி

திங்கட்கிழமை—திருச்செந்தூர்

துங்கத் தமிழால் உனைத்துதித்துத் தொழுவோர்க் கருள்வாய்போற்றி
சிங்க முகனை வதைத்த அருட் செல்வத் திருநா யகபோற்றி
சங்கப் புலவர் தமக்கெல்லாந் தலைவா! சிவதே சிகபோற்றி
திங்கட் கிழமை வந்தருள்வாய் செந்தில் பதி நின்பதம் போற்றி

செவ்வாய்க்கிழமை—பழனி

செவ்வான் அனைய திருமேனிச் சேயே! நாயேன் துயர்தீராய்
எவ்வா னவரும் ஏத்துகின்ற இறைவா இனம்பூ ரணபோற்றி
தெவ்வா தனையி லாதபர சிவயோ கியர்தே சிகபோற்றி
செவவாய்க் கிழமை வந்தருள்வாய் செல்வப் பழநிக் குகபோற்றி

புதன்கிழமை—திருவேரகம்

மதவா ரணமா முகத்தோன்பின் வந்த கந்தா! சிவயோகப்
பதவாழ் வருள்வாய் பன்னிருகைப் பரனே! அரனார் பாலகனே!
உதவாக் கரையாம் அடியேற்கும் உண்மைப் பொருளை உரைத்திடவே
புதவா ரமதில் வந்தருள்வாய் பொருவில் திருவே ரகபோற்றி

வியாழக்கிழமை—குன்றுதோருடல்

மயான முறையும் இறையான மகேசன் பெற்றா் குகேசனெனத்
தியானப் பொருளாம் திருமுருகா! தேவே மாவே தியபோற்றி
தயான சீலா! தணிகைமுதல் தவர்வாழ் குன்றுதொறும் வாழ்வாய்
வியாழக் கிழமை வந்தருள்வாய் வேலா கோலா கலபோற்றி

வெள்ளிக்கிழமை—பழமுதிர்சோலை

அள்ளி வழங்கும் ஆறுமுகத் தரசே! விரைசேர் கடம்பணிந்த
வள்ளிக் கணவா! வடிவேலா! வரதச் சரதப் பெருவாழ்வே
வெள்ளி மலைநேர் வியன்ஞான மேவு பழமார் சோலையனே
வெள்ளிக் கிழமை வந்தருள்வாய் வேத நாத பதம் போற்றி

சனிக்கிழமை—வயலூர்

கனிவாய் வள்ளி தெய்வானை கணவா! உணர்வார் கதிர்வேலா
முனிவாயெனில் யான் எங்கடைவேன்? முக்தா அருணை முனிக்கரசே
இனிவா தனையால் அடிநாயேன் என்றும் குன்று வணம் வாழ
சனிவா ரமதில் வந்தருள்வாய் தயவார் வயலூர்ப் பதிபோற்றி

கரூர் வைஸ்யா வங்கியின் தீபாவளி வாழ்த்துக்கள்

கரூர் வைஸ்யா பாங்க் லிமிடெட்

பதிவு & மத்திய அலுவலகம் கரூர்-639 002

அன்னியச செலாவணியில வாத்தகம் புரிய அங்கீகாரம் பெறறவாகள

பெருமை மிகு மரபு - அத்துடன்
புதுமை மிகு கண்ணோட்டம்

சேர்மன்:
G வெங்கடேசம்

ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா

நிம்மதி நல்கும் நிதானம்

—பொன். பரமகுரு—

சமன்செய்து சீர்தூக்குங் கோல்
போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி.

முன்னே தான் சமமாக இருந்து, பின்பு பொருளைச் சீர்தூக்கும் கோல்போல் அமைந்து, ஒரு பக்கமாகச் சாயாமல் நடுவுநிலைமை போற்றுவது சான்றோர்க்கு அழகாகும் என்கிறார் திருவள்ளுவர். எதிலும் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இன்றி நடுவாகவே இருப்பது சாலச் சிறந்தது. அது போல் வேகமோ, தாமதமோ இன்றி நிதானம் கடைபிடிப்பது சீரிய நன்மை பயக்கும், நிம்மதி நல்கும்.

எல்லா தானத்திலும் நிதானம் மேல், என்பார்கள் என் தெய்வத் திரு தந்தையார் பொன்னையா சுவாமிகள். ஆம். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு. அதி வினயம் தூர்த்த இலட்சணம், அளவிலா வேகம் ஆபத்து. முயல்—ஆமை ஓட்டப்பந்தயக் கதையை நாம் அனைவரும் அறிவோம். ஆகவே, நிலையான நிதானமே நிச்சயமாய் வெல்லும்.

பொதுவாய் எதையும் அத்துமீறி அதிகப்படியாகச் செய்வதே மனித இயல்பு. தன் மனத்திற்கு ஏதாவது ஒன்று நல்லதெனத் தோன்றினால் அதனையே அதிகமாக வேகமாகச் செய்யவே முற்படுகிறான். அது சரியோ தப்போ என சீர்தூக்கிப் பார்ப்பதே கிடையாது. அச்செயலுக்கு அவன் அடிமையாகி விடுகிறான். அதனால் நாளடைவில் அவனுக்கு விளைவது பெருந் தொல்லையே.

ஒரு சிறு உதாரணம். ஒருவன் பகல் முழுதும் உழைத்துவிட்டு மாலையில் களைப்பால் சோர்ந்து இல்லம் திரும்புகிறான். ஓய்வெடுக்க எண்ணி ஒரு நாற்காலியில் அமர்ந்து தன் கால்களை மேஜை மீது தூக்கிப் போட்டுச் சுகம் காண விழைகிறான் ஆனால், அவ்வாறு இருக்கையில் அமர்தல் உடலுக்கு நல்லதல்ல அவ்விதம் சாய்ந்து சரிவாக உட்காருவது உடல் நலத்தை பாதிக்கும் என்பதை அவன் அறிவதில்லை, தற்கால சுகத்தை எண்ணி தனக்கு நிரந்தரமாயேற்படும் மூளை பாதிப்பைக்கூட கருதுவதில்லை. அப்பழக்கத்தால் நரம்புகளில் ரத்த ஓட்டம் பாதிக்கப்பட்டு மூளையில் மந்தத் தன்மை விளைகின்றது. அதனை ஆரம்பத்திலேயே உணர்ந்து, அப்பழக்கத்தை தவிர்த்தால் மூளை பாதிப்பைத் தடுக்கலாம். ஆனால், அவ்விதம் செய்வதில்லை. தன்னுள் ஊறிப்போன ஒரு பழக்கத்தைக் கைவிடுதல் கடினந் தான்.

எளிதில் ஒருவன் ஒரு பழக்கத்திற்கு அடிமையாகி விடுகிறான். எந்த ஒரு பழக்கமும் அதன் முத்திரையை, பாதிப்பை மூளையில் தவறாது பதிய வைக்கிறது. நாளடை

பண்டிகை நாட்களில் விரும்பி அளித்திட
வேண்டுமட்டும் சுவைத்திட
தித்திக்கும் படைப்புகள்
தெவிட்டாத இனிப்புகள்.
ராமகிருஷ்ணாவின் இனிப்புகளே!



ராமகிருஷ்ணா லஞ்ச் ஹோம்

223, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் சாலே,
சென்னை-600 001. போன்: 22154

ELEGAN

வில் அப்பாதிப்பு அதிகமாக வளர்கிறது அது அவனுள் ஓர் ஆலமரம் போல் வேரூன்றிப் படர்ந்து அவனை பல சோதனைக்கும் வேதனைக்கும் ஆளாக்குகிறது எனவே, எதிலும் தீவிரக் கவனமும், நிதானமும்மிகத் தேவை.

மனிதனுக்கு அன்றாடத் தேவை நெருப்பு. அது அளவோடு எரிந்தால் சமையல் செய்ய, குளிர்காய, ஒளிதர. இன்ன பல ஆக்கக் காரியங்களுக்குப் பயன்படும். ஆனால் அதே நெருப்பு அத்துமீறி அளவு கடந்து எரிந்தால் தம்மையும், நம் வீட்டையும். ஏன், நம் ஊரையுமே கொளுத்திவிடும். ஆகவே, எதிலும் சமநோக்கும் நிதானமும் நாம் கடைபிடித்தால் நன்மை பயக்கும்.

தனக்குப் போகத் தானம் என்பார்கள். எனவே தானம் செய்வதிலும் நிதானம் வேண்டும். நிதானம் தவறினால் நீங்காத் தொல்லைதான் விளையும். ஒரு பெரியவர் இது குறித்து ஒரு கதை சொல்வார்.

ஒரு ஊரில் ஒரு தனவந்தர் இருந்தார். அவர் கொடைவள்ளல், கர்ணன் வழி நடப்பவர். ஆகவே, அவர் அன்றாடம் அன்னதானம் செய்துவந்தார். பல ஆண்டுகளாக இத்தானம் நடந்து வந்தது. தனது அன்னதானம் சிறக்க வேண்டும், அனைவரும் அதைப் புகழ்ந்து பாராட்ட வேண்டுமென்பதற்காக சாப்பிடவரும் ஒவ்வொருவருக்கும் அவரவர் தேவைக்கு அதிகமாகவே அன்னத்தைப் படைக்கச் செய்வார். அதனால் சாப்பிட்ட இலைகளில் சாதம் வீணே மிகுந்து வெளியே தூக்கி எறியப்படலாயிற்று இவ்விதமாக உணவு வீணாய் விரயமாகிறது. நாளடைவில் அவரது தனம் கரைந்து. அவரது செல்வமும் அவரை விட்டகன்று சென்றது. வறுமை அவரைப் பற்றிக் கொண்டது. அளவிலா அன்ன தானம் வழங்கிய அவர் நாளடைவில் ஒரு வேளை அன்னம்கூட கிடைக்காது அல்லல்பட்டார்.

இறைவா! இதென்ன சோதனை? அன்றாடம் அளவிலா அன்ன தானம் செய்த எனக்கேன் இக்கொடிய வேதனை? என இறைவனை தினமும் மன்றாடி வேண்டினார்.

ஒரு நாள் அன்னலட்சுமி அவரது கனவில் தோன்றி, அத்துமீறி நீ அன்னதானம் செய்தாய், அதனால் பெருவாரியான அன்னம் வீணே வீசி எறியப்பட்டது. இவ்விதம் நிதானம் தவறி அன்னமளித்து, என்னை அலட்சியப்படுத்தியதின் விளைவுதான் நான் உன்னை விட்டகன்றேன். ஆகவே, நீயும் இப்போது அன்னம் கிடைக்காது வாடுகின்றாய். உன்வினை உன்னையே சுடுகிறது. எதிலும் நிதானம் வேண்டும். நினைவிருக்கட்டும், என அறிவுரை கூறி மறைந்தாள் நாமும் அந்த உண்மையை மனத்தில் பதியவைத்துக் கொள்ளவேண்டும்.

நாம் வாழ்வில் நிதானத்தைக் கடைபிடித்தால் நம் வாழ்வு சிறக்கும். நிதானம் வசந்தகாலம் போன்றது இளவேனில் காலமானவசந்த காலத்தில் அழகிய நீலவானில் ஆங்காங்கே திட்டுதிட்டாக வெண் முகில் கூட்டங்கள் ஒயிலூட்டிக் கொண்டிருக்கும். மெல்லெனத் தென்றல் சில்லென வீசும். கதிரவன் மிதமானவெப்பத்துடன் இளம் வெயிலாய் இதமாய்க் காய்வான். அதனால் சுற்றுபுறச் சூழ்நிலை அதிக வெப்பமோ, அதிக குளிரோ இன்றி மிக இங்கிதமாய், இன்பமாயிருக்கும். பூங்காவில் பூக்கள் பூத்துக் குலுங்கும். இயற்கை எழில் பொங்கி நறுமணம் வீசி யாவும் மனத்திற்கு மிகவும் ரம்யமாய் விளங்கும்.

எமது மனங்கனிந்த தீபாவளி திருநாள் வாழ்த்துக்கள்

ஆனந்த நிலை தோன்றும். அதே போல் வாழ்வின் வசந்தகாலம் நிதானத்தால் உருவாக்கப்பட்டு, பெருத்த நிம்மதியை உண்டுபண்ணும். அதனால் நம் உள்ளம் பூரிக்கும், சித்தனை பெருகும், செயல் சிறக்கும்.

அதிகமாக உண்பவனுக்கோ அல்லது கடின உண்ணுநோன்பு மேற்கொள்பவனுக்கோ, அதிகம் தூங்குபவனுக்கோ அல்லது தூங்காமலே இருப்பவனுக்கோ யோகம் கைகூடாது. உணவிலும், கேளிக்கையிலும், உழைப்பிலும் உறக்கத்திலும் எவன் நிதானத்தைக்கடைப்பிடிக்கிறானோ அவனுக்கே துன்பம் போக்கி இன்பம் நல்கும், யோகம் கைகூடும் என்றருளினார் பகவான் கிருஷ்ணன் கீதையில்.

ஆன்மிக மார்க்கத்திலும் நிதானம் வெகு அவசியம். தன்னை அறிய உள்முக நோக்கில் தியானம் புரிவதை, சிறுகச் சிறுக, படிப்படியாக, நிதானமாக மேற்கொள்ளவேண்டும் அதின்றி அவசரப்பட்டு,விரைவில் உண்மையை அறிந்து உணர வேண்டுமென்ற ஆத்திரத்தில் அத்துமீறி காலவரம்பில்லாது தியானத்தில் ஈடுபட்டால் உள்ளத்தில் சலிப்பும், உடலில் கோளாறும்தான் விளையும். சீரான நிரந்தர பலன் கிட்டாது அன்றாட வாழ்க்கை நெறியோடு நிதானமாக யோகாப்பியாசமும், தியானமும், வேதபாடமும், மந்திரம் ஓதுதலும் கையாள வேண்டும். அவ்விதம் கையாண்டால் திண்ணமான முறையான ஆன்மிக முன்னேற்றம் கிட்டும்.

புத்தர் வாழ்க்கையில் நிகழ்ந்த ஓர் அற்புத நிகழ்ச்சியை நாம் நினைவிற்கொள்வது நல்லது தமக்கு ஞானஒளி கிட்டுமுன் புத்தர்பிரான் ஆன்மிக சாதனைகளில் வெகுதீவிரமாக ஈடுபட்டுக்கொண்டிருந்தார்.

அதுசமயம் மூன்று கிராமியநாட்டியக்காரர் மூலம் அவர் ஒரு மாபெரும் உண்மையை உணர்ந்தார். அவர்முன் ஆடிப்பாடிய அம்மூன்று நாட்டியக்காரரும் பின்வரும் கருத்தைத் தரக்கூடிய பாடலைப் பாடினர்.

உங்கள் வீணையைச் சுதி சேர்க்கும்போது அதன் தந்தி கம்பிகளை மிகவும் இறுக்கமாக முறுக்கி விடாதீர்கள், கம்பிகள் அறுந்து விடும்; மாறாக தந்திக் கம்பிகளை மிகவும் தளர்ச்சியாயும் விடாதீர்கள், இன்னிசை வாசித்தல் இயலாது; ஆனால் மிகவும் இறுக்கமாகவோ அல்லது மிகவும் தளர்ச்சியாகவோ இல்லாது, நடுவு நிலையாக நிதானமாக தந்தி கம்பிகளை முறுக்கி சுதி சேர்த்தால் அருமையான இன்னிசையை வாசிக்கலாம்.

இப்பாடலைக் கேட்ட புத்தர் தம் ஐம்பொறிகளையும், ஐம்புலன்களையும் அளவு மீறி வருத்தினால் உயிர்க்கே ஆபத்தாகிவிடும்; அதில்லாது அவைகளைக் கட்டுபாடின்றி, அலையவிட்டால் எல்லாமே கெட்டுவிடும்; ஆனால் அவைகளை சரிவர நிதானப்படுத்தி அடக்கிக் கையாண்டால் ஞானஒளி கிட்டுமென்பதை உணர்ந்தனர்.

அதே நேரத்தில் நாம் ஒன்றை நினைவில் வைக்கவேண்டும். நிதானம், நிதானம் எனக் கூறி கடமையாற்றும்போது நம் முயற்சிகளைத் தளர்த்தவோ, சோம்பலுக்கும்சோர்வுக்கும் இடம் கொடுக்கவோ கூடாது. குறிப்பாக, ஆன்மிகச் சாதனைகளில் சோம்பலே கூடாது. உழைப்பும், சுறுசுறுப்பும் அவசியம் வேண்டும். அதேசமயம் அவசரமும் ஆத்திரமும் தவிர்க்கவேண்டும்.

எமது மனங்கனிந்த தீபாவளி திருநாள் வாழ்த்துக்கள்

தான பலன்கள்

வைரம் ராஜகோபால்

ஸனத்குமாரர் வியாஸ முனிவரைப் பார்த்து தானங்களைப்பற்றிய சில விபரங்களைச் சொல்வதாக புராணங்களில் உள்ளது. இந்த விஷயத்தை நாமும் ஓரளவு தெரிந்து வைத்துக்கொள்வதும் நல்லதல்லவா?

தானம் கொடுப்பதென்பது ஒரு பரோபகாரமான செயல் என்று ஒரு புறம் கூறலாம். இருப்பவன் இல்லாதவனுக்குக் கொடுத்து அவனது துயர் துடைக்கச் செய்யும் நல்ல காரியம் என்றும் மற்றொரு புறம் கூறலாம். எது எப்படியிருந்தாலும் தானம் செய்வது என்பது கொடுப்பவனுக்கும், வாங்குகிறவனுக்கும் நன்மை பயக்கக் கூடியதாக இருப்பின் அது மிகச் சிறந்தது.

வியாசரைப் பார்த்து ஸனத்குமாரர் கூறுகிறார். நல்லோருக்கே தானம் வழங்க வேண்டும். ஸ்வர்ண (பொன்) தானம், கோ (பசு) தானம், பூ (நிலம்) தானம் முதலியவற்றை வாங்குவோர், தானம் செய்பவரை பவித்ரர் ஆக்குவதோடு, தாங்களும் பவித்ரராவர். இத்தானங்களைச் செய்வோர் எல்லா பாபங்களினின்றும் விடுதலை பெறுவர்.

கோதானம், பூதானம், வித்யாதானம் ஆகிய மூன்றும் சமமான பலன்களைக் கொடுக்கக்கூடியவை. இவற்றில் முதலில் கூறப்பட்ட இரண்டினைக் காட்டிலும் மூன்றாவதாகக் கூறப்பட்ட வித்யாதானம் சற்று உயர்ந்தது எனலாம்.

புத்திமானான கொடையாளி எப்போதும் ஏழை எளியவர்களுக்கும் தெய்வ காரியங்களுக்கும் தானம் செய்துகொண்டேயிருப்பான். ஆயினும் தானம் வாங்குபவன் பொன், வெள்ளி எள், யானை, கன்னிகை, பணிமகன், வீடு, வாகனம், அஸ்வம், பூமி, காராம்பசு எனும் பத்து தானங்களையும் வாங்குவானாயின் தானஞ் செய்தவனைப் பரிசுத்தனாக்குவதுடன் தானும் ஞானவளர்ச்சி பெற்று புனிதனாவான்.

தானங்களில் பொன் முதன்மையானது; அதுவே உன்னதமானது, மங்களகரமானது. பொன்தானம் செய்பவன் தன் முன்னோர் பதின்மரும், பின்னோர் பதின்மரும் தான் ஒருவனுமாகிய இருபத்தோரு தலைமுறையினரையும் பாபம் நீக்கியவர்களாக்குகிறான். சுவர்ணத்தை சுத்தமான மனத்துடன் தானஞ்செய்தவன் சகல தேவர்களாலும், சகல கோரிக்கைகளையும் ஈடேறப் பெறுவான். அக்னி முதலான தேவர்களும் பொன்வடிவமாக இருக்கிறார்கள். புனிதமான சுவர்ணமானது புனிதமற்ற பொருள்களோடு சேரும்போது அவைகளையும் புனிதமாக்குகிறது.

இனி பூதானம் செய்வதின் பலனைச் சொல்கிறேன். இவன் அகண்ட ராஜ்யத்துக்கு அதிபதியாகி அனைவராலும் பாராட்டப்பட்டு உயர்ந்த பதவி வகிப்பான். இதற்கும் ஒரு கதை உண்டு……

(வாசகர்கள் மன்னிக்கவும். இது நீண்டுகொண்டே போகும் போலிருக்கிறது. சந்தர்ப்பம் வரும்போது தொடர்கிறேன்.)

அனைவருக்கும் மனங்கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்

சௌடாம்பிகா பைனான்ஸ்

பிரைவேட் லிமிடெட்

பதிவு - தலைமை அலுவலகம்:

"சௌடாம்பிகா மாளிகை"

66, ஒப்பணக்கார வீதி • கோயமுத்தூர்-641001

போன் : 26727, 26828, 35541

கிளைகள் :

திருச்சி • சேலம் • திருப்பூா • மதுரை • துறையூர்

ரூபாய் ஒரு லட்சம், இரண்டு லட்சம். மூன்று லட்சங்கள் கொண்ட ஏலச் சீட்டுகளை நடத்தும் இந்தியாவிலேயே புகழ்பெற்ற முதல்தரமான ஏலச்சீட்டு நிறுவனம்

21-வது ஆண்டு

RECORD OF BUSINESS

YEAR	TURNOVER	BUSINESS SECURED
1979—80	Rs 3,23,10,000	Rs. 12,70,00,000
1980—81	Rs. 4,22,55,000	Rs. 15,42,75 000
1981—82	Rs. 4,88,05,000	Rs 19,12,00,000
1982—83	Rs 5,96.95 000	Rs. 21.63,50 000
1983—84	Rs. 7,26,10 000	Rs. 24,62,50,000

எங்களுக்கு கடந்த 20 ஆண்டுகளாக ஒத்துழைப்பும் ஆதரவும் நல்கிய சந்தாதாரர்கள மற்றும் ஆதரவாளர்களுக்கும் எங்களது மேலான நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் வரும் ஆண்டுகளிலும் சிறந்த சேவை செய்ய தங்களது மேலான ஆதரவை வேண்டுகிறோம்.

T. S சாம்பமூர்த்தி, B.A.,

மானேஜிங் டைரக்டர்

அடியார்களின் பெருமை

பாகவத அடியார்களிலே இலக்கணம் வகுத்து வழிகாட்டிய மகா புருஷர் தொண்டரடிப் பொடியாழ்வார்.

பகவத் ப்ரீதிக்கு உட்பட்டு அவன் திருவடியே சரணம் என்று அடைக்கலமாகி மலர்ந்த அன்புடன் பக்திசெய்து பிறகே மோக்ஷகதியை அடைவார்கள்.

இப்பாகவதப் பெரியோர்களின் பாதத் தூளியையே பகவத் பிரசாதமாக எண்ணி மெய்யன்புடன் போற்றி பகதிசெலுத்தும் அடியார்க்கும் அடியார்களின் அன்பையே பகவான் மிகவும் விரும்புகிறார்.

காஞ்சி தேவாதி தேவராசன் வரதராஜப் பெருமாள், திருக்கச்சி நம்பியின் சேவைக்காக அர்ச்சாவதார உருவிலிருந்து இறங்கிவந்து அவருடன் பேசியதாகச் சொல்லப்படுகிறது அந்த பரம பாகவதரின் பாதத் தூளியையே பகவத் பிரசாதமாக ஏற்றுக்கொண்ட பக்தனுக்கு மோக்ஷகதி கிட்டுகிறது. ஆனால் திருக்கச்சி நம்பிக்கோ, இன்னும் பாகவத வரிசையில் இடம் ஏற்பட அவருடைய குருநாதரைத் தேடிப் போகிறார்.

உண்மையான அன்புடன் கலப்படமே இல்லாத புனிதமான பக்தியைத்தான் பகவான் விரும்புகிறார் அத்தகைய ஆழ்வாராதிகள், நாயன்மார்கள் போன்ற பாகவத சிரோன்மணிகள் தூய்மையான பக்தியின் விசேஷ பலன்தான் பகவானுக்கே பலத்தை அளிக்கிறது என்கிறார் பகவான் கிருஷ்ணர்.

அத்தகைய பாகவத மணிகளின், அடியார்களின் பெருமையை விளக்கும் ஒரு சம்பவத்தை ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா, அர்ச்சுனனுக்கு விளக்குவதைப் படியுங்கள்.

குரு 'க்ஷேத்திரம். யுத்த பூமி பார்த்தன் ரதத்தில் அமர்ந்திருக்கிறான். பகவான் பார்த்தசாரதி தன் இடத்தில் அமர்ந்து காண்டீபனை யுத்தம் செய்யுமாறு பணிக்கிறார்.

ஹே! கிருஷ்ணா, இவர்கள் யாவரும் என்னுடைய ரத்தத்தின் ரத்தம் என்னுடைய குருநாதர்கள், பந்துக்கள். இவர்களைக் கொல்லமாட்டேன் என்று தேரிலிருந்து கீழே குதித்து விடுகிறான்.

அந்த இடத்தில்தான் கீதை உதயமாகிறது. அர்ச்சுனனுக்கு கீதோபதேசம் செய்கிறார் பகவான் கிருஷ்ணன்.

பார்த்தனுக்கு ஜ்ஞானயோகம், கர்மயோகம் போன்ற பல ஞானோபதேசங்கள் போதிக்கப்படுகின்றன.

பாண்டு புத்திரனுக்கு தெளிவேற்பட்டு, ஹே கிருஷ்ணா! உன் கட்டளைப்படி யுத்தம் செய்யத் தயார் என்கிறான்.

கீதோபதேசம் பெற தனக்கு ஒரு நல்ல சிஷ்யன் கிடைத்துவிட்ட பெருமை கண்ணனுக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது.

மனித ஜன்மாவிற்கு கீதை ஒரு வழிகாட்டியாக, சம்சார பந்தத்தைப் போக்கி பகவத் அடியார்களாக, பகவானுக்குத் தொண்டு செய்து அவன் திருவடியைப்பற்றி முக்திக்கு வழிகாட்டி மோக்ஷ மார்க்கத்தை அளிக்கும் புனித பொக்கிஷமாக உள்ளது பகவத்கீதை—

ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா

நேரம் நெருங்கிவிட்டது, கிருஷ்ணா நான் தயார், தாங்கள் தேரை எதிரிகளை நோக்கி செலுத்துங்கள் என்று பிரார்த்திக்கிறான்.

அப்பொழுது கிருஷ்ண பரமாத்மா தன் இருக்கையிலிருந்து கீழே குதித்து தன் இடுப்பிலிருந்து ஒரு சிறிய பெட்டியை எடுத்து அதனுள் இருந்து ஒரு சிட்டிகை தூளை எடுத்து தன் தலையில் தெளித்துகொண்டு இரு கரங்களையும் சிரசிற்கு மேல் தூக்கி தன்னையே வலம்வந்து சிறிது நேரம் நிற்கிறார்.

இந்த அதிசய நிகழ்ச்சியை பார்த்தன் பார்த்து மெய்சிலிர்க்கிறான்.

ஹே பகவான்! சர்வ உலகங்களில் உள்ள எல்லா ஜீவராசிகளும் தேவாதி தேவர்களும் தங்கள் திருவடியை சரணடைந்து உன்னை வலம் வந்து போற்றிப் பணிகிறார்களே. தாங்கள் செய்யும் இந்த செய்கை எனக்கு விளங்கவில்லையே, கிருஷ்ணா இதன் மகிமைதான் என்ன என்று வினயமாக கரங்கூப்பி ரதத்திலிருந்து இறங்கி மாதவன் தாள் பணிந்து நிற்கிறான் பார்த்தன்.

என்னையே மெய்யன்புடன் மலர்ந்த பரிசுத்தமான பக்தியோடு சரணடைந்து மோக்ஷகதி அடைந்து, என்னிடமே வாசம் செய்யும் பாகவதப் பெரியவர்கள், என் அடியார்களின் திருவடியின் கீழ் ஏற்படும் தூசுகளின் பொடிதான் இப்புனித வஸ்து.

இதன் பெருமையில்தான் எனக்கு வலிமையையும், பெருமையும் மாயாவினோதங்கள் பல புரிந்து பக்தர்களை மோக்ஷ நிலைக்குக் கொண்டு வரும் பலத்தை அளிக்கிறது.

அந்த அடியார்களின் திருவடிப் பொடிதான் இனி உனக்கு இந்தப் பாரதப் போரில் வெற்றியும் அளிக்கப்போகிறது என்றுகூறி, ரதத்தில் பார்த்தனை ஏறிக்கொள்ள செய்து தானும் தன் இருக்கையில் அமர்ந்து பார்த்தசாரதிப் பெருமான் யுத்தகளத்தை நோக்கி ரதத்தைச் செலுத்துகிறார்.

பாரதப்போரில் பாண்டு புத்திரர்கள் பகவான் கிருஷ்ணனின் உதவியால் வெற்றி பெறுகின்றனர்.

உண்மையான அன்புடன் பக்திசெலுத்தி பகவான் நாராயணனின் திருநாமத்தை மனத்தில் இருத்தி செயல்பட்டோமாகில்,பேரின்ப வீட்டை மிக எளிதில் அடைந்து அவன் அடியார்களின் வரிசையில் நாமும் நிச்சயம் இடம்பெற்று மோக்ஷகதியை அடையலாம். இது சத்தியமான வாக்கு.

—குகதாசர்

DELUXE ROYAL RIDE


DELUXE BABYCOACH

DELUXEDELIVERYVAN

LOAD MASTER


DELUXE LOAD TRUCK

JAMES RIKSHAW INDUSTRIES

6 & 7, Gandhi Road
Velachery, Madras-600 042.
Phone : 433899, 433362 P.P 848933

DELUXE


JAMES ANGLE BODY


ROBINSON

HAND MOVER


ROBINSON WITHBOX

கார் போன்ற வாகனங்களை வைத்துக்கொண்டு அதிகப்படியான பராமரிப்பு செலவுகள் செய்வதை இன்றே நிறுத்தி உங்கள் பிள்ளைகள் பள்ளிக்குப் பாதுகாப்புடனும் விரைவாகவும் சென்று வரவும், வயதானவர்கள் கோவில் கடைத்தெருவிற்கு சென்று வருவதற்கும் ஏற்ற எளிதான சிக்கனமான சிறந்த போக்குவரத்துச் சாதனம்

எங்கள்

ஜேம்ஸ் "ராயல் ரைடு"
சைக்கிள் ரிக்ஷா

உறுதியான, உழைப்பில் சிறந்த எங்கள் மற்ற தயாரிப்புகள்

- லோடு கேரியர் டிரைசைக்கிள்கள்
- டெலிவரி வேன்
- பேபி கோச் முதலியன

இந்த வண்டிகளில் எப்போது வேண்டுமானாலும் என்ஜின் பொருத்திக் கொள்ளலாம்.

ஷோ ரூம் : 12, காசிம் சாகிப் தெரு,
ராயப்பேட்டை, சென்னை-600 014.
போன் : 848933

உன்னுள் உறையும் இறைவன்

கோவிலுக்குள் நுழையும்போது இருப்பது கொடிமரம், உள்ளே போகும்போது ஆணவம் கொடி கட்டி பறக்கிறது அறிவு, ஆணவம் எல்லாம் பலிபீடத்தில் பலியாகிறது. அங்கே பக்தியே தலை தூக்கி நிற்கிறது. இறைவனைக் காண்கிறான் இறைவனைக் கண்டவன் வெற்றியைக் காண்கிறான்.

அறியாமை அறியாமையை விரட்டும்போது மனிதன் ஆண்டவனை உணர்ந்துவிடுகிறான்.

கடவுளிடம் பற்று வைக்காதே. பக்திவை.

விரக்தி அடைந்து கடவுளை எண்ணினால் பக்தி வருவது மிகமிக கடினம்.

இறை உணர்வு வேறு. சமய உணர்வு வேறு.

விளம்பரப்படுத்துகிற சுவருக்கு எந்த மதிப்புமில்லை ஆண்டவன் என்கிற சுவரும் அப்படித்தான். ஆனால் அது உங்களை விளம்பரப் படுத்தும். எப்போதும் விளம்பரப் படுத்தும்.

மத, இன, மொழி கடந்தது இறைவு உணர்வு. இறைவன் பரம்பொருள் வடிவானவன், புத்தி என்பது ஒருவனின் தனிப்பொருள். அதுவே சமுதாயப் பொதுப் பொருள் அதை ஒதுக்கினால் மனிதனுக்கு நட்டமே தவிர அதை வைத்துக்கொண்டிருக்கிற புத்தனுக்கு அல்ல

ஞானிகள்

புத்தன் என்றால் புத்தியைக் கருவாக வைத்துக்கொண்டு வளருகிறவன். நித்தன் புத்தியை தானம் செய்துவிட்டு அலைந்தவன்.

சுவரொட்டிகள் தானாக சுவரில் ஒட்டிக்கொள்வதில்லை; சுவரில் தான் சுவரொட்டியை ஒட்டவேண்டும். அதற்காக சுவர்கள் சுவரொட்டிக்கே சொந்தமாகிவிடுமா?

சுவரொட்டிக்கு விளம்பரம் வரும். சுவருக்கா வரும்? அந்த மாதிரியே ஆண்டவனை விரும்புகிறவர்கள் அவனிடம் ஒட்டிக்கொள்ளுகிறார்கள்.

கடவுள் அவனிடம் ஒட்டிக்கொண்டவனை விளம்பரப்படுத்துகிறான்; நல்லவன், கெட்டவன் என்று லேபில் பார்ப்பதில்லை வியாபாரி உயர்வான பொருளையே விளம்பரப்படுத்த வேண்டுமென்பதைப் போல, ஆண்டவன் பல மடங்கு உயர்வான உங்களைப் பற்றியே எண்ணுகிறான்.

புத்தியில்லாதவன் கடவுள் புத்தியுள்ளவனாக அவன் இருந்தால் மனிதனைபபோல அற்புதமாக சிந்திப்பான் என்ன அற்புதம் என்கிறீர்கள்? வேண்டியவன், வேண்டாதவன் என்று இரண்டாக மனிதனைப்போலவே பிரித்துப் பாகுபடுத்தியிருப்பான். ஆண்டவனுடைய சாம்ராஜ்யத்திலே மனிதனுடைய சட்டங்கள் எதற்கு?

கடவுள் என்னிடம் வருவதற்கு முன் அவனுக்கு கண்கள் இல்லாமல் இருக்கிறது நானே இந்த உலகை தெளிவுடன் பார்க்கவேண்டுமென அவன் விரும்புகிறான். கண்ணில்லாத கபோதியை யார் வெகு

நீங்கள் இதைப் படித்துக் கொண்டிருக்கும் பொழுது....

ஒரு ராக்கெட் விர்ரென்று உம் அறைக்குள் பாய்ந்து
ஒரு பிரளயத்தையோ அல்லது அனேகமாக
மாபெரும் தீ விபத்தையோ ஏற்படுத்தக்கூடும்.
அல்லது சுட்டித்தனமான ஓர் அணுகுண்டு
நிஜ டைனமைட்டாக மாறி உம் மழலைச் செல்வத்தின்
உற்சாகத்தை முன்றும் தாக்கிப்புண்களாக்கலாம்.
அந்த சாதாரண அபாயகாமில்லாத புஸ்வாணங்களும்
சக்கரங்களும் கூட பகற்கனவுகளாகலாம்.

மேலும் அந்த மகிழ்ச்சிகரமான பண்டிகை
நாட்களில் நீங்கள் கவலையை மறந்து வெளியே
செல்லும் நேரத்தில் திருடர்படை உங்கள்
இல்லத்தைச் சூறையாடலாம்.
அதுபோன்ற எதிர்பாராத விபத்துகளுக்காக
முன்னெச்சரிக்கையாக வழி வைத்துக்
கொள்ளுங்கள். தீவிபத்து, உடற்காயம், திருடு
அல்லது கொள்ளை இவற்றை ஈடுகட்ட...
ஆம்.! இப்படித்தான் நாங்கள் உமக்கு உதவமுடியும்.

எதிர்பாராத விபத்துகளுக்கு ஏற்றதோர் காப்புநிதி
உங்களை மறுபடியும் சாதாரண நிலைக்கு கொணரக்
கூடிய காப்புநிதி

உங்களுக்கு அனைத்து மகிழ்ச்சிகளுடனிருந்து
பத்திரமாகவும் இருக்கலாம் என அறிந்து
கொள்வதே சுகம்தானே...

யூஐயில் என்றுமே எங்களுக்கு முன்னே நீங்கள்தான்.

UNITED INDIA

யுனைடெட் இந்தியா இன்சூரன்சு கம்பெனி லிட்
(ஜெனரல் இன்சூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியாவின் ஓர் அங்கம்)
ரிஜிஸ்டர்டு & தலைமை அலுவலகம்.
24, ஒயிட்ஸ் ரோடு, சென்னை-600 014

ACIL/84

அம்மா

பிரஹ்மஸ்ரீ K. M. சிருங்கார சுப்ரமண்ய சாஸ்திரிகள்

அம்மா : இந்த வார்த்தையானது அளவிட முடியாத பாசத்தைக் கொண்ட வார்த்தை ஒரு குடும்பத்தில் சில குழந்தைகளைப் பெற்றவள் அவர்களுக்கு மட்டும் தாய் – அம்மா.

உலகிலுள்ள அத்தனை குழந்தைகளுக்கும் தாயாக விளங்குகிறவள் லோகமாதா - ஜகன்மாதா! அவளே பராசக்தி - புவனேஸ்வரி. துறவியும் துறக்கமுடியாத பாசம் ஒன்று உண்டென்றால் அது தாய் பாசம்தான்.

ஆதிசங்கரரின் மாத்ருகா பஞ்சகம் அதைத் தெரிவிக்கிறது. பட்டினத்தார் பாடலிலும் தாய்ப்பாசம் வெளிப்படுகிறது இப்படி இந்தத் தாய்களுக்கே இவ்வளவு பெருமையிருந்தால் ஸ்ரீ ஜகன்மாதாவின் பெருமை எவ்வளவு! அவளிடம் நாம் எவ்வாறு அணுக வேண்டுமென்மென்பதை வேதம் கூறுகிறது.

உசதீரிவ-மாதர: என்றும், பற்பல இடங்களில், குமாரம்-மாதா, யுவதி-ஸமுப்தம் என்ற ருக்வேதமும தாயன்பை வெளிபபடுத்துகிறது. இதையே தான் லலிதா சஹஸ்ர நாமம் ஸ்ரீ மாதா என்றுமே கூறுகிறது.

இலை, காய், தண்டு இவைகள் கிடைக்குமே என்பதற்காகத்தான் வாழை பயிரிடுகிறார்கள். தனக்கு ஏதாவது பலன் இருக்குமென்று தெரிந்தால்தான் ஏதாவது ஒரு காரியம் செய்வார்கள். அதற்காக சிரமப்படுவார்கள். சம்பளம் கிடைக்குமென்றால்தான் வேலை செய்வார்கள்.

ஆனால் தாய் மட்டும், எதையுமே எதிர்பாராமல் பாடுபடுகிறவள். தன் குழந்தைகள் க்ஷேமமாக இருக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு உழைபபவள் எதையுமே சிரமமாக பாவிக்காதவள். உபதேசிப்பவள். குழந்தைகளுக்காக தன்னையே அர்ப்பணித்துக்கொண்டவள்.

நானைக்கு ஆதரிப்பார்கள்? அதனால் இவனிடம் வந்து தங்கிய பிறகு தனக்கு ஒரு கண் இருப்பதைக் ஆண்டவன் காட்டுகிறான். அதுதான் சமுதாயத்தின் எண்ணம்.

கண்ணிருந்தால் அங்கே இங்கே போவான் ஆனால் கண்ணில்லா இறைவனே கூப்பிட்ட இடத்திற்கே போகிறவன் நம்மை அவன் முன்னுக்கு மட்டுமே நடத்துகிறவன்.

கடவுளை மனிதன் சிந்திக்கக் கூடாது. நேசிக்க வேண்டும். சிந்தித்துத்தான நேசிப்பேன் என்றால் அது தவறு. நேசிக்க உள்ளம்தான் வேண்டும். இறைவன் உள்ளத்தைத்தான் கேட்கிறான்.

இதைக் கேட்கிற காதுகள் களைத்துப் போகவில்லை. இதைப் பார்க்கிற பார்வைக்கு பழுதுவரப் போவதில்லை இங்கே நடக்கிற கால்கள் சேர்ந்து விழவில்லை.

ராம ஸ்ரீராம ராம ஸ்ரீராம ராம ஸ்ரீராம ராம ஸ்ரீராம

இதையே லலிதா ஸஹஸ்ரநாமத்தில் அவ்யாஜ கருணாமூர்த்தி—தீராத நோய்களைத் தீர்த்து வைப்பவளென்றும் உவமைப்பிற்குப் பலன் குழந்தைகளின் க்ஷேமமே என்றும் கூறும்போது நம் உடலில் ரோமாஞ்சம் ஏற்படுகிறது.

நம்முடைய மண் பொம்மை போன்ற உடலில் சர்வசக்தியாக இருந்து காயம் என்று கூறும்படி பிராணசக்தியை அளித்து, நாடி நரம்புகளில் சர்வ சக்தியாக இருந்து உள்ளம் என்ற பொருள்வைத்து, புத்தி சக்தியாய் நின்று காத்தருள்வதெல்லாம் எதனால்? அம்மாவின் அவ்யாஜ கருணையால்தான்.

பால் நினைந்தூட்டும் தாய்க்குலத்திற்கே மூலப்ரகிருதியல்லவா ஸ்ரீஜகன்மாதா! வாயும் மனமும் கடந்த மனோன்மணி என்று திருமூலர் அம்மாவை சிவன்-ஹரி-பிரம்மாவுக்கே தாயாக்கி, காத்தருள்வதை வண்கூடாகக் காண்பிக்கிறார்.

அவள் நாம் உய்ய நமக்கேற்ற வடிவமெடுத்து, பெயர் ஏற்று, சிலையிலும், படத்திலும், பொம்மையிலும், வந்து நம் உள்ளம் குளிரச்செய்கிறாள் என்கிறார் அபிராமி பட்டர்.

காளியாக உபாசித்தார் ஸ்ரீராமகிருஷ்ணர். சகல சக்திகளையும் ஒன்றாக்கி ஸ்ரீசக்கரத்தில் ஸ்ரீ வித்யா ராஜராஜேச்வரியாகக் கண்டார் ஸ்ரீசங்கரர். சீர்காழி க்ஷேத்திரத்தில் அம்மாவை நினைத்து அழுத சிறுவனுக்கு ஜகன்மாதாவே நேரில் வந்து அமுதூட்டினாள். உள்ளமறிந்து அருள் செய்பவள் ஜகன்மாதா. அழுத குழந்தைதான் பால் குடிக்குமென்பார்கள்.

அவள் திருமலரடிகள்தான் உதவும். அவள் பாத, கமலங்கள், நம் பாதக, மலங்களை அகற்றும் என்று கவி காளிதாஸன் குமாரஸம்பவத்தில் தன் அனுபவங்களைக் கூறுகிறார்.

அப்படிப்பட்ட ஜகன்மாதா ஸ்ரீராஜராஜேஸ்வரி, ஸ்ரீ புவனேஸ்வரி ஆனந்த ஜோதியாய் நின்று, உள் இருள், அகலவும் எங்குமுள்ள அசுரநிலை விலகி, பக்தியும், தார்மீகமும் தழைத்து, எங்கும் யாவரும் அன்புடன் பழகி ஜகன்மாதாவின் அருளைப் பெற்று சகல க்ஷேமங்களுடன்,

"கலையாத கல்வியும், குறையாத வயதும்
ஓர் கபடுவாராத நட்பும் கன்றாத வளமையும்
குன்றாத இளமையும் கழுபிணி இல்லாத உடலும்......

என்றபடி யாவரும் வாழவேண்டும்.

ஜகன்மாதா ஆதிபராசக்தியை இப்புனிதமான தீபாவளி திருநாளில் யாவரும் போற்றிப் பணிந்து தாயின் கருணையையும், அன்பையும் பெற்று பெருவாழ்வு பெற பிரார்த்திக்கிறேன்.

PALAYAKAT COY. PVT. LTD. MADRAS
MADRAS
REGD. TRADE MARK
பளயகாட்ஸ்
சங்கு மார்க்
லுங்கிகள்
கைக்குட்டைகள்
CHARI
மதறாஸ் பளயகாட் கம்பெனி(பி)லிட்.
88, அரண்மனைக்காரத் தெரு, சென்னை-600 001. போன் 23040

தீபாவளி
வாழ்த்துக்கள்
ஸ்பென்ஸர்ஸ்
பழரச பானங்கள்
அன்னாசி, திராட்சை,
மாம்பழம்
Spencers
Spencers
Spencers
ஸ்பென்ஸர்ஸ்
ஸ்பென்ஸர் கன்சூமர் பிராடக்ட்ஸ்
அண்ட் சர்விசஸ் லிமிடெட்,
சென்னை மற்றும் கிளைகள்
FAME/S/1048 A TAM

18683

துளசிமாடம்

கம்பத்தடியான்

அன்று வெள்ளிக்கிழமை,

புதுமெருகு குறையாமல் சுண்ணாம்பு, காவி அடித்து, தளதள வென்று மின்னியது துளசிமாடம். அதில் 'பச்'சென்று நின்றது துளசி கன்று.

அந்திநேரம். துளசி மாடத்தில் இருந்த பிறையில் விளக்கு ஒன்று ஏற்றி வைக்கப்பட்டிருந்தது.

மீனாக்ஷிக்கு மகிழ்ச்சி பிடிபட வில்லை.

ஆனால் ஆபீசுக்குப் போயிருந்த கணவன் கதிரவனின் வரவை நினைத்தால் அவளுக்குப் 'பகீர்' என்றது.

அவன் ஒரு நாத்திகன்.

கடவுளை நம்புகிறவன முட்டாள். இது கதிரவனின் வேதவாக்கு

வாசலில செருப்பு சப்தம் கேட்டது, கதிரவன் வந்துவிட்டான். பூகம்பம் வெடிக்கப் போகிறது.

துளசிமாடம். கதிரவனின் கண்களில படடது. கோபத்தில அவன் முகம் சிவந்தது. மீனாக்ஷிக்கு உடம் பெல்லாம நடுக்கம்,

யாரைக் கேட்டுடி வச்சே?

மீனாக்ஷி மௌனம் சாதித்தாள்.

கோபம் தலைக்கேறியது செருப்பு காலோடு துளசிமாடத்தை எட்டி உதைத்தான். காயாத அந்ததுளசி மாடம் விழுந்து சுக்குநூறுகியது.

ஏ, மீனாக்ஷி! குப்பையில் வளர வேண்டிய, துளசிச் செடிக்கு சிம்மாசனம் ஒரு கேடா? ஏது புதுசு புதுசா பக்தி முளைக்குது என்று கத்திவிட்டு. வீட்டுக்குள் சென்றுன். பின்னால் சென்றுள் மீனாக்ஷி.

என்னங்க! சொல்றதைக் கேளுங்க. துளசிச்செடி வீட்டிலிருப்பது சுகாதாரம், தெய்வீகம், நோய் நொடி நம்மை நெருங்காது வெள்ளி கிழமையும் அதுவுமா இப்படிச்செய்திட்டீங்களே?

என்னடி பஞ்சாங்கம் பேசறே?

இதைச் சுத்திக் கும்பிட்டா நம்மைப் பிடித்துள்ள வறுமை நீங்கும். நமக்கு இல்லாத குழந்தைச் செல்வம் விரைவில் கிடைக்கும் இதையெல்லாம் நினைத்துத்தான் காலையிலிருந்து மேஸ்திரியை வைத்துக் கட்டி, சுண்ணாம்பு, காவி அடித்து, துளசி செடிநட்டு, விளக்கேற்றி வைத்திருந்தேன் நீங்கள செருப்புக் காலால் உதைத்து இடித்துத் தரைமட்டமாக்கி விட்டீர்களே? நியாயமா?

ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா

பொல்லாத நியாயத்தைக் கண்டுட்டே; கண்டதெல்லாம் 'சாமி, சாமி'ன்னு கும்பிட்டுகிட்டு.

இன்றைக்கு வெள்ளிக்கிழமைங்க. நீங்க சாமியைக்கும்பிடாட்டாலும் பரவாயில்லை. நான் தோட்டத்தில் ஏதாவதொரு மூலையில், உங்கள் கண்பார்வையில் படாமல் ......என்று வார்த்தையை முடிக்காமல் மீனாக்ஷி விக்கிவிக்கி அழுது கண்களைக் கசக்கினாள்.

தோட்டத்தின் மூலையில், என் கண்ணில் படாமல் செடியை வச்சு தொலைச்சுக்கோ என்று எரிந்து விழுந்துவிட்டு, தினப் பத்திரிக்கையை எடுத்துக்கொண்டு படிக்க சென்றான்.

ஃ ஃ ஃ

மறுநாள் காலை எழுந்திருக்கும் போதே கதிரவனுக்கு பாதங்கள் வலித்தன. அதோடு ஆபீசுக்குக் கிளம்பினான். அரைநாளில் கால் அப்பளமாய் வீங்கிவிட்டது. ஆபீசில் லீவு சொல்லிவிட்டு டாக்டரிடம் சென்றான்.



ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா

டாக்டர் காலை பார்த்துவிட்டு, செருப்பினால் எதையாவது ஓங்கி மிதித்தீர்களா? அதிலுள்ள ஆணி ஆழமாய் குத்தியிருக்கிறது என்று சொல்லிவிட்டு, மருந்து போட்டு கட்டிவிட்டு, ஊசிபோட்டு வீட்டுக்கு அனுப்பிவைத்தார்.

வீட்டில் மீனாக்ஷியோடு ஒரே சண்டை. உன்னால்தான் காலில் இப்படி வந்தது என்று கத்தினான் கதிரவன்.

டாக்டரிடம் போவதும் வருவதுமாக இருந்தான். ஆனால் வீக்கம் வடிந்தபாடில்லை. கிட்டத்தட்ட ஆபீசுக்குப் போய் ஒருவாரமாகப் போகிறதே என்று கதிரவன் கவலையோடிருந்தான்.

மீனாக்ஷி பொறுமையுடன் துளசி மாதாவை வணங்கிவிட்டு, கணவன் கதிரவனின் முகச்சுளிப்பையும் பொருட்படுத்தாது, ஒரு துளசி இலையை அவன் வாயில் போட்டாள். மறுநாளிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக காலின் வீக்கம் வடியத் தொடங்கியது. அதற்கும் அடுத்த நாள் வெள்ளிக்கிழமை ஆபீசுக்குக் கிளம்பினான்.

ஃ ஃ ஃ

மீனாக்ஷி கொல்லையின் மூலையில் ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து, சுத்தம் செய்து துளசி செடி நடுவதற்கு ஆழமாகக் குழிவெட்டினாள்.

அவளுக்கு வியர்வை பெருக்கெடுத்தோடியது. அவள் விடவில்லை.

'டங்'கென்ற சப்தம் கேட்டது. அவளுக்கு திகில் பற்றிக்கொண்டது. தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, தோண்டி ஒரு பித்தளை சொம்பு ஒன்றை வெளியே எடுத்தாள். வீட்டுக்குள் கொண்டுபோய் காமாக்ஷி அம்மன் படத்தின் முன் வைத்து வணங்கினாள். பிறகு அதை கொட்டிப் பார்த்தாள்.

அத்தனையும் தங்க நாணயங்கள், மீனாக்ஷிக்கு சந்தோஷம் தாங்கவில்லை. உண்டியலை உள்ளே வைத்துவிட்டு உடனேமேஸ்திரிக்கு ஆள் அனுப்பி, வரவழைத்து, புது துளசிமாடம் கட்ட ஆரம்பித்தாள்.

ஃ ஃ ஃ

அன்று லாட்டரிச் சீட்டில் பம்பர் பரிசு குலுக்கல் நாள். மீனாக்ஷிக்குத் தெரியாமல் வழக்கமாக இரண்டு லாட்டரி சீட்டுகள் வாங்குவான். அன்றைய குலுக்கலில் கதிரவனின் நம்பருக்கு முதல்பரிசு பத்துலட்சம் விழுந்திருக்கிறது.

ஆபீஸ் நண்பர்களெல்லாம் அவனை பாராட்டினார்கள். உடனே ஆபீசுக்கு லீவு போட்டுவிட்டு, மீனாக்ஷியிடம் சொல்வதற்காக ஓடோடி வந்தான்.

மீனாக்ஷி துளசிமாடம் கட்டுவதிலேயே மும்முரமாக இருந்தாள். நடுப்பகலில் வீட்டிற்கு வந்த கதிரவனைக் கண்டவுடன் சிறிது தயங்கினாள். ஓரளவு பயந்தாள்.

ஆனால் கதிரவன் அவளை சிரித்துக்கொண்டே உள்ளே அழைத்து போனான். மீனாக்ஷிக்கு ஒரே ஆச்சரியம்.

சாக்லேட் ஒன்றைப் பிரித்து அவள் வாயில் போட்டான்.

என்ன? நானல்லவா ஒன்றுக்கு இரண்டு சாக்லேட் போடவேண்டும்.

என்ன மீனாக்ஷி? என்ன சொல்றே?

எமது வாடிக்கையாளருக்கு இனிப்பான தீபாவளி வாழ்த்துக்கள்!

பக்தி பத்திரிகைகள் இலவசம்!

எமது ருசிகரமான இனிப்பு அல்லது கார பண்டங்களை மூன்று கிலோவுக்கு குறையாமல் வாங்குவோருக்கு கீழ்க்கண்ட பக்தநூல்கள் அல்லது தெய்வீகப் பத்திரிகைகளில் ஒன்று (ஒரு வருட சந்தா) இனாமாக வழங்கப்படும்

தேவி மகாத்மியம் தேவி பாகவதம், ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா, ஸ்ரீ காமகோடி பிரதீபம், தர்மசக்கரம், ஸ்ரீராமகிருஷ்ண விஜயம், வைகறை, ஞானபூமி

இனிப்பு வகைகள்: பாதாம் அல்வா, தூத் அல்வா, சோன்பப்டி, குலாப்ஜாமூன், ரஸமலாய், சம்சம், மைசூர்பாகு, ஜாங்கிரி, மங்களூர் போளி, இனிப்பு சோமாஸ், சம்பாகனளி முதலியவை

கார வகைகள்: கைமுறுக்கு, தட்டை, தேன்குழல், சீடை, நவரத்ன மிக்ஸர், உருளைக்கிழங்கு சிப்ஸ், வெஜிடபிள் சோமாஸ் முதலியன

திருமண வைபவங்களுக்கு பருப்புத் தேங்காய், சீர்முறுக்கு, திரட்டுப்பால், அதிரசம் ஆகியவற்றைத் தயாரித்து தருகிறோம்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் ஸ்நாக்ஸ்

24, 2-வது மெயின்ரோடு, காந்திநகர், அடையாறு,
சென்னை-600020. போன்: 412557

LPS

Single Phase CENTRIFUGAL MONOBLOC PUMPS



- PUMPSETS COMPACT
- LIGHT IN WEIGHT
- IDEAL FOR GARDEN and DOMESTIC USE

MANUFACTURERS

SANDHYA INDUSTRIES

27-1-A, East Periasamy Road, R S. PURAM, COIMBATORE-2
Phone : 22471 & 24997

புதையல் விஷயத்தைச் சொல்லி பாத்திரத்திலுள்ள தங்க காசுகளைக் காட்டினாள். அதோடு கதிரவன் கைகளை எடுத்து தன் அடிவயிற்றில் வைத்துக்கொண்டாள். அவள் முகம் சிவந்தது

நானும் ஒரு பதில் பரிசுகொண்டு வந்திருக்கிறேன் பத்து லட்சம் ரூபாய் பம்பர் பரிசு என்றான் மீனாக்ஷியின் கைகளைப்பற்றிக்கொண்டு

பார்த்தீர்களா? எல்லாம் துளசி மாடத்தின் மகிமை. இன்று மாலை துளசிமாடம் ரெடி என்று கணவனை அன்போடு கட்டிக்கொண்டாள்.

ஃ ஃ ஃ

சிறிதுநேரம் கழித்து, கதிரவன் மீனாக்ஷியை அழைத்து, தங்கப் புதையல் கிடைந்தவரையில் சந்தோஷம்தான் ஆனால் சட்டப்படி நம்மைச் சேர்ந்ததல்ல சட்டப்படி நமக்கு எல்லார்க்கும் தெரிந்து பத்துலட்சம் ரூபாய் பம்பர் பரிசு பத்து லட்சம் விழுந்திருக்கிறது. இந்தத் தங்கப் புதையல் கிடைத்த விவரத்தை நாமாக காவல் துறைக்குத் தெரிவித்தால், அரசாங்கமும் நம்மைப் பாராட்டி பல பரிசுகள் நல்கும். இல்லையேல், யார் வாயிலாகவாவது நமக்குத் தங்கப்புதையல் கிடைத்த விவரமறிந்து, அவர்களாகக் கண்டுபிடித்தால், சட்டப்படி அரசாங்கத்தின் தண்டனையிலிருந்து தப்பவே முடியாது என்று நீட்டிப் பிரசங்கம் ஒன்றை செய்தான்.

மீனாக்ஷிக்கு உள்ளூர வருத்தம் தான் கணவன் செய்த பிரசங்கத்தையே திருப்ப திரும்ப அசை போட்டாள்.

வாருங்கள், போகலாம் என்று அழைத்தாள் கணவன் கதிரவனை.

வேண்டாம், மீனாக்ஷி, 'நான் மட்டும் சென்று, காவல் துறையினரிடம் விவரங்களை சொல்லி காவல் துறையினரை இங்கு அழைத்து ஒப்படைப்பதுதான் முறை. நான் சென்று வருகிறேன் என்று புறப்பட்டான்.

மறுநாள் பத்திரிகைகளில் கதிரவன்—மீனாட்சி தம்பதியரின் செய்திகளே வெளியாயின.

பத்துலட்சம் பம்பர் பிரைஸ் அடித்த தம்பதியருக்கே, துளசி மாடம் ஒன்றினை அமைத்து வழிபட யத்தனிக்கையில் தங்கநாணயங்கள் கொண்ட குடம் கிடைத்தது. அதைகாவல்துறைக்கு தெரிவித்து. அதை அவர்களிடம் ஒப்படைத்து விட்டதை அதிகாரபூர்வமான செய்தியாக வெளியிட்டிருந்தனர்.

ஃ ஃ ஃ

அன்று காலை. என்னங்க, சாயந்திரப் துளசிமாடப் பூஜைக்கு வருவீங்களா? மீனாக்ஷி குழைந்தாள்.

என்ன... என்ன... நான் இன்று முதல் ஆஸ்திகனாகிவிட்டேன். கதிரவனின் பேச்சிலும குழைவு தென்பட்டது.

வெள்ளிக்கிழமை விளக்கேற்றும் வேளை, மீனாக்ஷியும் கதிரவனும் பய பக்தியோடு விளக்கேற்றி, துளசி மாடத்தைச் சுற்றிவந்து, துளசி மாதாவை விழுந்து வணங்கினர்.

பிறக்கப்போகும் குழந்தைக்கு என்ன பெயர் வைக்கப்போகிறேன் தெரியுமா? இப்படிக் கதிரவன் கேட்டான்.

பெண்ணாயிருந்தால் துளசி, சிரித்துக்கொண்டே பேசினாள் மீனாக்ஷி

ஆணாயிருந்தால் துளசிங்கம்! ஒருபோடு போட்டான் கதிரவன்.

எப்படி?

"இப்படி" என்று கதிரவனின் அணைப்பில சிக்கித் தவித்தாள்.

CAS/SACL/20/84-D/TAM

பணமா? புண்ணியமா?

சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஸ்ரீ மகாசன்னிதானம்

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் முதலியவற்றுக்காக மனிதன் எவ்வளவோ பொருள்களை உலகில் சேர்த்துக்கொண்டே யிருப்பான். அவை அவனை விட்டு போய்விட்டால் அதற்காக அழுவான். அதே சமயம் அவற்றின் நிலையற்ற தன்மையை உணர்ந்து வைராக்கியத்தால் அவற்றைத் துறந்துவிட்டானேயானால் அவனுக்குப் பேரின்பம் என்னும் மோட்சமே கிடைத்துவிடுமென்கிறார் சங்கரர்.

ஓர் உதாரணத்தைப் பார்ப்போம். ஒரு மனிதன் காய்கறி வாங்குவதற்காக கடைக்குச் செல்கிறான். சட்டைப் பையில் பத்து ரூபாய்த் தாள் ஒன்று இருக்கிறது. திருடனொருவன் மிகவும் புத்திசாலித்தனமாக யாரும் அறியாவண்ணம் அந்தப் பத்து ரூபாய் தாளை எடுத்துவிடுகிறான். கடைக்குப் போய்ச் சட்டைப் பையைத் துழாவும்போது பணத்தைக் காணாமல், ஐயையோ! மோசம் போனேனே! பத்து ரூபாய் நோட்டுக் காணாமற் போய்விட்டதே! என்று அழுதுபுலம்புகிறான். எவ்வளவு புலம்பினாலும் காணாமற் போனது திரும்பக் கிடைக்குமா?

அதே மனிதன் பத்து ரூபாய்த் தாளுடன் செல்கையில், ஏழைச் சிறுவனொருவன், அவனெதிரில் வந்து, ஐயா, பள்ளித்தேர்வுக்குப் பணம் கட்டவேண்டும். மிகவும் தாராள மனதுடன் பத்து ரூபாய் எனக்குக் கொடுத்துதவ வேண்டும் என்று பரிதாபமாகக் கேட்கிறான்.

Please Step in

KHADI GRAMODYOG BHAVAN

(The Largast Emporia of Khadhi and Village Goods in Tamilnadu)

844, ANNA SALAI, MADRAS-600 002.

BRANCHES AT

GOPALAPURAM	INDIRA NAGAR	GEMINI COMPLEX
MADRAS-600 086	MADRAS-600 020	MADRAS-600 034

ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா

இதைக் கேட்டவுடன் இதயத்தில் இரக்கம் சுரந்து சிறிதும் யோசிக்காமல் உடனே பையிலிருந்த பத்து ரூபாய் நோட்டைப் பையனுக்குக் கொடுத்துவிட்டுக் காய்கறி ஏதும் வாங்காமலே வீடு திரும்புகிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது மனதில் எவ்வளவு மகிழ்ச்சி ஏற்படும்.

இதற்குக் காரணமென்ன? பத்து ரூபாயைத் தொலைத்த போதும், ஏழைச் சிறுவனுக்கு தானம் செய்த போதும் பணம் இவனிடமிருந்து போய்விடுகிறது. ஆனால் முதலில் பணம் தானாகவே போய்விட்டது. ஆனால் இரண்டாவது சூழ்நிலையில் தானாகவே மனிதன் பணத்தைவிட்டான். ஆதலால் முதலில் வருத்தமும், இரண்டாவது சூழ்நிலையில் மகிழ்ச்சியும் ஏற்பட்டன.

அளவுக்கு மிஞ்சிச் சேர்க்கும் பணத்தினால் நாம் சாதிக்கப்போவது என்ன? அந்தப் பணத்தை நாம் எத்தனை நாள்தான் கட்டிக் காக்கப் போகிறோம் மரணம்நேர்ந்தாலோ, பதி போனாலோ என்ன நிலை? என்று எண்ணும்போதுதான் அவனுக்குத் தானம் செய்யவேண்டுமென்று தோன்றும். ஆனால்,மனிதர்கள் அவ்வாறெல்லாம் சிந்திப்பது கிடையாது. மற்றவரிடம் லட்ச ரூபாய் இருந்தால் என்னிடம் பத்து லட்சம் வேண்டும், என்று மேலும் மேலும் பேராசையை வளர்த்துக் கொண்டிருக்கிறார்களே தவிர பணத்தின் நிலையற்ற தன்மையை ஒரு நாளும் உணர்வதில்லை.

ஐந்து ரூபாய் மட்டுமே சம்பளமாகப் பெறும் ஏழை மனிதன் சாப்பிடுவதும், கோடீசுவரனான செல்வன் ஒருவன் சாப்பிடுவதும் ஒரே உணவுதான். கோடி ரூபாய் தன்னிடம் இருக்கிறதென்பதற்காக அந்த செல்வன் தங்கத்தை அரிசியாக்கிச் சமைத்து சாப்பிட முடியுமா? இல்லவே இல்லை.

தானம் போகா நாசஸ்திஸ்ரோ,
கதயோ பவந்தி வித்தஸ்ய
யோ ந ததாதி ந புங்தே தஸ்ய
த்ருதீயா கதிர் பவதி

செல்வத்தைத் தானம் செய்ய வேண்டும் அல்லது அனுபவிக்க வேண்டும், இரண்டும் இல்லாதவனிடத்தில் பணம் தங்காது பணம் வேறொருத்தர் கைக்கு மாறிப்போய் விடும்.

எமது மனங்கனிந்த தீபாவளி திருநாள் வாழ்த்துக்கள்

உயர்தரமான மளிகை சாமான்களுக்குச் சிறந்த இடம்

வி. ஷண்முகம் ஸ்டோர்ஸ்

531-532, பாரதி சாலை, திருவல்லிக்கேணி
சென்னை - 600 005.

போன்: 844114

மொத்தமாகவும் சில்லறையாகவும் வீட்டிற்கே சப்ளை செய்யப்படும்.

ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா

ஆகவே, மூன்றாவது வழியில் பணம் பறிபோகுமுன்பே நாமே அதை நல்ல வழியில் செலவழித்து மனமகிழ்ச்சியை பெறவேண்டும்,

சிலர் நான் என் பையனுக்காகப் பணத்தைச் சேர்த்துவைக்கிறேன் என்று கூறுவார். பையன் எவ்வளவு தான் அப்பணத்தை விரயம் செய்யாமல் வைத்துக்கொள்வான் என்பது ஒரு கேள்வி. அது மட்டுமின்றிப் பையனுக்காகப் பணத்தை விட்டுச் சென்றாலும் அது அவனுக்கே கிடைத்துவிடுமா? என்பது சந்தேகம் தரும் அடுத்த கேள்வி. ஆகவே இருக்கும் பணத்தை, அது அழிவதற்கு முன்னரே தானம்செய்வதுதான் சாலச் சிறந்தது.

தானங்கள் பல செய்யும் ஒருவரிடம் மற்றொருவர் நீங்கள் இவ்வளவு தானம் செய்கிறீர்களே. பணம் உங்களுக்குத் தேவையில்லையா? என்று கேட்டார். அதற்குக் கொடையாளி, ஐயா, நான் பெரிய சுயநலக்காரன், அதனால் தான், நான் இப்போதே தானம் செய்கிறேன். செத்துப்போன பிறகு பணம் நம்மோடு கூட வராது என்பது நிச்சயம்.

ஆனால், நல்லவழியில் பணத்தை தானம் செய்தால் இறந்த பிறகும் அது புண்ணியவடிவாக மாறி என்னுடன் வரும். ஆகவே இப்போது சுயநலம் கருதி நல்ல காரியங்களுக்காய் பணத்தைத் தானம் செய்கிறேன் என்று விடையளித்தார். இந்த பதில் மிகவும் நியாயமாகவே எனக்குப்படுகிறது,

பணமா? புண்ணியமா? என்ற நிலையில் புண்ணியம்தான் நம்முடைய வழிப் பயணத்திற்கு கூடவரும் மூலதனமாக வந்து நற்கதிக்கு அழைத்துப்போய் முக்திக்கு வழிகாட்டும்.

ஆகவே, செல்வம் உள்ளபோதே தான தர்மங்கள் செய்து புண்ணியத்தைச் சேர்த்துக்கொள்ளுங்கள்.



உங்கள் அழகுக்கு
அழகூட்டும் குங்குமம்
புதிய சுமங்கலி டீலக்ஸ் குங்குமம்
இன்று தன் இயற்கை எழிலை எந்த மங்கையும் மேலும் பொலிவுறச் செய்யலாம். உங்கள் ஒப்பனைக்கு மேலும் மெருகூட்டுவது சுமங்கலி குங்குமம்.
கொஞ்சம்கூட வெளியே சிந்தாத சிறந்த பாக்கிங்கில் வரும் குங்குமம் அது ஒன்றே. ஆகவே அது உங்கள் கைப்பையிலோ அல்லது டிரஸ்ஸிங் டேபிள் மேலோ வைத்துக்கொள்ள உகந்தது. சுமங்கலி உங்களுக்குப் பிடித்தமான பலவித வண்ணங்களில் கவர்ச்சியான ஜாடிகளிலும், பௌடர் உருவிலும் மற்றும் டீலக்ஸ் பர்ஸ் பாக்கிங்குகளிலும் கிடைக்கிறது.
டீலக்ஸ் குங்குமம்
சுமங்கலி
ஒரு கேசவர்த்தினி தயாரிப்பு
OBM 4952

தெய்வத்தாய்

நாகர்கோவில் கிருஷ்ணன்

ரு நாள் ஸ்ரீசங்கரர் சிவ சொருப
க அமர்ந்திருந்தார். சலனமற்ற
ள்ளம்—சாந்தம் தவழும் வதனம்
அருட்பார்வை — ஞானத்தைப்
ாழியும் குமுதவாய், அதிலே
பின் சிரிப்பு—அபயம் நல்கும்
ர்க்கை—இப்படியாகக் காட்சி
த குருதேவர் உள்ளத்திலே சல
ம்! கண்களிலே கலக்கம்! சிரிப்
லே விரக்தி! அருளாசி நல்கும்
ங்களிலே நடுக்கம் சுவாமிகளின்
னவலைகள் எங்கோ சென்றன.

அவரது நெஞ்சத்திலே, தாம்
ன்று தாய்க்குக் கொடுத்து
டு வந்த வார்த்தைகள் எதி
ாலிக்கின்றன.

அம்மா, வருந்தாதே! உனது அந்
காலத்தில் என்னை நினைத்துக்
ாள். இந்த உலகத்தின் எந்த
லயிலிருந்தாலும் சரி—எந்த நிலை
பிருந்தாலும் சரி, அதையெல்
ம் பொருட்படுத்தாமல். உனக்கு
ாக்ஷம் தரும் உத்தமமான நற்
யடைய வழி செய்ய நான்
டாடி வருவேன்.

ஆம்! இப்பொழுது, காலடியில்
ரியாம்பிகை இறைவனின் திரு
டியில் சேர துடித்துக்கொண்

டிருந்தாள். அந்தத் தாயின் பாச உணர்வு, உலகத்திற்கெல்லாம் ஞான ஒளிகாட்டும் கருணாமூர்த்தியான தன் மகன், தன்னுடைய நெஞ்சில் நெருப்பிட வருவானோ என்று ஏங்கிக்கொண்டிருந்தது.

சங்கரா, சங்கரா என்ற அன்னையின் கதறல்......சுவாமிக்கு ஞான திருஷ்டிக்குத் தெரிந்தது.

காலடி தேய தேய நடந்து திக்விஜயம் செய்துவரும் சுவாமிகள் காலடிக்கு புறப்பட்டார்.

காலடிக்கு சங்கரரின் மடியில் தலையைச் சாய்ந்தவாறு படுத்திருந்தாள் ஆரியாம்பிகை!

அவளது உதடுகள் 'சங்கரா—சங்கரா' என்று ஆசை தீர அழைத்துக்கொண்டே இருந்தது தாயகம் போற்றும் தவப்புதல்வனின் குளிர் புனல் போன்ற முகத்தைப் பார்த்து பார்த்து, கண்ணீர் சொரிந்து கொண்டேயிருந்தாள், சங்கரர் தாயின் முகத்தில் வழியும் கண்ணீரைத் துடைத்தார்,

அம்மா! உன் சங்கரன் சொன்னபடியே வந்துவிட்டான், இனியும் எதற்காகச் சஞ்சலம் கொள்கிறாய்? என்னைப் பெற்று ஆளாக்கிவிட்ட

மன்னு! உங்களது இமாலய வெற்றிக்கு
இதோ இனிப்புகளில் உயர்ந்த
அகர்வால் பவன் இனிப்புக

அகர்வால் பவன்

128, கோவிந்தப்ப நாயக்கன் தெரு,
சென்னை-600 001. போன்: 21219, 31349.

தின்ன தின்ன தெவிட்டாதது அகர்வால் இனிப்புகள்.
ELEGAN

க்கு எந்தக் கைம்மாறும் செய்மல் இருந்தேனே என்று ஏக்கம் ன்கிருயா?

இவ்வாறு சங்கரர் தாயிடம் க்கமாகக் கேட்டார். என்ன ந்தாலும் பெற்றமனம் பித்து னே! ஆரியாம்பிகை அழுது ண்டேதான் இருந்தாள்,

ங்கரர் திருவருளால் ஆரியாம் கக்கு வைகுண்ட பிராப்தி டத்தது.

ஸ்ரீராமனைக் குமாரனுகப் பெற்ற ல் தசரதர்க்கும் கோசலைக்கும் ருவாழ்வு கிட்டியது. கண்ணனை ற்றதால் தேவகியும் வசுதேவ வைகுண்டம் சென்றனர். அது லவே சங்கரரைப்பெற்ற ஆரி ம்பிகைக்கும் வைகுண்டத்தில் இடம் காத்திருந்தது.

ங்கரர் தமது தாயை சிவலோக தரின்காலடியில் சேர்க்கச்செய்த ர்த்தனைக்கு உளங்கனிந்த உமா கஸ்வரன், ஆரியாம்பிகைக்கு உப த்துக்களில் ஒன்ருன கைவல் என்னும் வீடுபேற்றை அளிக்க து பூதகணங்களை அனுப்பி த்தார்.

வகிங்கரர்களைக் கண்டதும், ரியாம்பிகை அஞ்சி நடுங்கினுள். த்தால், சங்கரா! இவர்களைப் கச் சொல்! எனக்கு பயமாக க்கிறது என்று கத்தினுள். டனே சங்கரர், பூதக்கணங்களை கச் செய்தார்.

சங்கரர் ஸ்ரீமந் நாராயணனை நினைத்து தியானம் செய்தார். அக்கணமே வைகுண்டநாதன் சங்கரரின் தோத்திரத்திற்கு செவி குளிர்ந்தார்.

தேவாதி தேவர்கள், ஆரியாம்பிகையை வைகுண்டலோகத்திற்கு அழைத்துச் செல்வதற்காக வந்தனர்.

தேவ தூதர்கள், சிவகிங்கரர்களைப் போல காட்சியளிக்காமல், மன்மதனைப்போன்ற அழகுடன் நவரத்தின அணிமணிகளுடன் காணப்பட்டனர். தேவர்களைக் கண்ட ஆரியாம்பிகைக்குப் பயம் தெளிந்தது கோகுலத்துக் கண்ணனைத் தியானிக்கத் தொடங்கினுள்.

தேவர்கள் ஆரியாம்பிகையின் பூத உடலை காலடியிலே கிடத்தி விட்டு, ஆத்மாவை திவ்ய வடிவத்துடன் நவமணிப் பல்லக்கிலேற்றிக் கொண்டு மூவடி அளந்த மாதவனின் சேவடிக் கமலங்களில் சேர்த்தனர்.

சங்கரர், தாயின் அபிலாஷையைப் பூர்த்தி செய்த தலையாய கடமையில தாயின் சடலத்தைப் பின்புறமுள்ள தோட்டத்திலேயே அக்னிதேவனுக்கு அர்ப்பணம்செய்தார்.

இன்றும், கேரள நாட்டில், சடலத்தை வீட்டிற்குப் பின்புறத்திலேயே தகனம் செய்யும் வழக்கம் இருந்துவருகிறது.

நீ உன் இனத்துடன் ஒற்றுமையாக இரு. அப்போதுதான் உனக்கு உயர்வும் மதிப்பும் அழகும் உண்டாகும். உன் இனத்தைவிட்டுப் பிரிந்துவிட்டால் நீ எல்லோராலும் வெறுக்கப்படுவாய்.

தலையிலே இருக்கும்வரையில் அழகாக, நன்குகப் போற்றிப் பாதுகாக்கப் படும் முடி, தன் இனத்தைவிட்டு தலையை விட்டு கீழே விழுந்துவிட்டால் ஒவ்வொருவராலும், இகழ்வும் அருவருப்பும் அடைகிறதோ, அதுபோல. —வாரியார்

ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா

விநாயகப் பெருமான் முதல் சகல தெய்வங்களையும் போற்றி பாடியுள்ள இந்த பக்திப் பாமாலையை இயற்றிய மறைமலைநகர் இளைஞர், கவிஞர் திரு. சிவ. பாலகிருஷ்ணன் அவர்கள் இப்பாமாலையை காஞ்சி ஆச்சார்யாள் சந்நிதியில் சமர்ப்பித்து பெரியவர்களின் அருளாசியுடன் அனுப்பியுள்ள இப் புனித பாமாலையை ஆன்மீக அன்பர்கள் அனைவரும் பாடி பெருவாழ்வு பெற்று பகவான் திருவருளைப் பெற வேண்டுகிறேன். —ஆசிரியர்.

ஞானச் சுடரொளியே! சத் குருவே
மோனத் தவ வடிவே! சிவ மணியே!
தானந் தவ மிரண்டில் தழைக்கும்
வானுயர் புகழ் வடிவே சரணம்.

வேத முதல்வனே! கணபதியே—நின்
பாதம் பணித்தோம்—குணநிதியே!
நாதப் ப்ரம்ம வடிவே சரணம்
நவசக்தி கணபதியே சரணம் சரணம்;

வந்த வினைநீக்கும் கந்தனே சரணம்
வந்தனை செய்தோம் வேலா சரணம்
செந்தூர் பழனி பரங்குன்றமர்ந்தாய்—என்
சித்தையில் விளையாடும் ஷண்முகா சரணம்.

கங்கை அணிந்த சங்கரிக் கணவா
சங்கர குருவை உலகிற்களித்தாய்
சங்கம் வளர்த்தாய் மதுரையிலே—உமைப்
பங்கனே உன்பதம் பணிகின்றோம்,

ஞாலத்தைக் காத்திடும் ஞானம்பிகையே
ஞானச் சுடரொளி அன்னை அபிராமி
மோனத் தவம் செய்யும் காமாட்சி
மூகாம்பிகையே சரணம் சரணம்.

கார்மேகக் கண்ணா உன் குழலிசையாலே
கோபியர் மயங்க அருள் செய்தாய்
கோகுல நாயக குவலயந்தன்னை
கீதையிலாட்கொண்ட கண்ணா சரணம்.

செல்வத் திருமகளே உன் பாதத்தை
சிந்தையிலேத்தித் துதிப்போர்க்கு
வாழ்வில் வளமும் பெருகிடச் செய்வாய்
வரலெக்ஷ்மி தேவி சரணம் சரணம்.

கல்விக் கதிபதி கலை மகளே
கலைபல யாவும் தந்தருள்வாய்
அலையா மனந்தரும் தவநிதியே
கலைஞான வடிவே கற்பகமே.

மெய்ஞான வடிவே ஐயப்ப தேவா
நெய்யுடன் வந்தோம் ஸ்ரீபூத நாதா
சமரசம் உந்தன் கோவிலில் கண்டோம்
சபரிகிரீசா சரணம் சரணம்.

அனுமனே இராமதூதா சரணம்
மனோ வலிமை தரும் பகவானே சரணம்
கோள்களின் இடர்நீக்கும் வல்லவனே—உன்
தாளினைப் பணித்தோம் சரணம் சரணம்,

—மறைமலைநகர் சிவ. பாலகிருஷ்ணன்

எங்களது மனமுவந்த தீபாவளி வாழ்த்துக்கள்

இன்றைய நாகரீக டிசைன்களில்
அனைவருக்கும் ஏற்ற அழகிய ரெடிமேடு ஆடைகளுக்கு

பெஸ்ட் ஷாப்

பிரீதி ஏஜென்ஸிஸ்

H. O.: 143. ராஜவீதி. போன்: 22498
Br. 183. ஒப்பணக்கார வீதி. போன்: 32759
கோயமுத்தூர் - 641 001

ரோமா பாவாடைகள (ROMA SAREE PETTICOATS) 60 கலாகளில கிடைக்கும.

நடராஜா அச்சகத்தில் அச்சிட்டு, வெளியிடுபவர், ஆசிரியர்: கே. ராதாகிருஷ்ணன், அலுவலகம்: நெ. 78, டாக்டர் பெஸண்ட் சாலை, சென்னை-14, தமிழ்நாடு. போன்: 846434

எமது மனமார்ந்த தீபாவளி திருநாள் வாழ்த்துக்கள்

தயாரிப்பாளர்கள் :

எஸ். பி. எஸ். ஜெயம் அண் கோ.

(வேல் கெமிக்கல் ஒ ர்கஸ்)

25, கீழ் நாப்பாளயத் தெ ரு, மதுரை-1

குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்

என்னங்க! சாயங்காலம் வரும்போது மறந்துடாமல் அரைகிலோ பீப்ரி காபி பௌடரும், ஒரு கிலோ சர்க்கரையும் வாங்கிண்டு வாங்கோ, அப்பத்தான் சாயங்காலம் காப்பி, என்று சொல்லிவிட்டு, கற்பகம் சமையற்கட்டுக்குள் நுழைந்தாள்.

மாதக் கடைசியில் யாரிடம் பணம் இருக்கிறது? முதல் தேதி வரையிலும் யாருக்கும் காபி கிடையாது; இது கணவன் சதாசிவத்தின் முணுமுணுப்பு அதோடு அவருக்கு ஆபீசுக்கு புறப்படுவதற்கு பரபரப்பு.

சுதா

என்னமோ நான் சொல்லிட்டேன். நீங்க என்ன செய்வீங்களோ, என்னமோ எனக்குத் தெரியாது, எனக்குத் தேவை காபிப் பொடியும் சர்க்கரையும்; சமையற்கட்டிலிருந்து கற்பகத்தின் கட்டளையாக இது பிறந்தது.

இதிலே ஒண்ணும் குறைச்சலில்லே.

இந்தச் சமயம் பார்த்து அவர் பிள்ளை மது வந்து நின்றான்.

என்னடா? அவன்மீது பாய்ந்தார்.

அப்பா! எனக்கு உடனே ஐந்து ருபாய் வேணும். நோட் புக் வாங்கணும்.

அவர் அதை காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

என்ன புறப்பட்டுட்டீங்க! நான் கேட்ட பணம், மது பின்னாலேயே போனான்.

ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா

எல்லாரும் என் உயிரை வாங்குங்கோ, என்றவாறு ஐந்துருபாய் நோட்டை எடுத்துத் தூக்கியெறிந்தார் சதாசிவம்.

கீழே விழுந்த ருபாய் நோட்டை குனிந்து எடுத்துக்கொண்டு, தாங்க்யூ டாடி என்று சொல்லிவிட்டு, சீட்டியடித்தவாறு வெளிக் கிளம்பினான் மது,

பெண் விஜி வேகமாக ஓடிவந்தாள்.

அப்பப்பா! எனக்கு ஆறு ருபாய் உடனே தேவை. என் தோழி தேனுக்கு (தேன்மொழி) இன்று பிறந்தநாள். பிரண்ட்ஸ் எல்லாரும் சேர்ந்து ஒரு பிரசன்டேஷன் பண்ணப் போறோம்; கொஞ்சினாள்.

அப்பா ஒரு முழி முழித்தார்.

கோபப்படுறீங்களே அப்பா! நான் உங்க செல்லப்பெண் இல்லையா? கொடுங்கப்பா!

மீண்டும் அவர் பர்ஸ் திறந்தது. ருபாய் ஆறு விஜி கைக்கு மாறியது, வாசலுக்கு சதாசிவம் வந்து, செருப்பை மாட்டிக்கொண்டார்.

கக்கூஸ் அடைச்சுக் கிடக்கு. இரண்டு நாளா அந்த ஆளை கெஞ்சிக் கூத்தாடி, இன்னைக்கு வர்றேன்னு இருக்கான். அவனுக்கு இரண்டு ருபாயாவது கொடுத்தாகணும், கொடுத்துட்டுப் போங்கோ என்றாள் கற்பகம். வாசற்படியில் நின்றுகொண்டு சத்தியாகிரகம் செய்தாள்.

எல்லாருமா சேர்ந்து என் பிராணனை வாங்கிட்டுப் போங்கோ என்று கத்திவிட்டு, இரண்டு ருபாயைத் தூக்கி எறிந்தார்.

ஃ ஃ ஃ

ஜாயி பாலஸ். புத்தம்புது டிலக்ஸ் ஏர்கண்டிஷன் தியேட்டர். அங்கு நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்ற புது குடும்பச் சித்திரம் ரிலீஸ் ஆகியிருந்தது. அதுவும பதினோறு மணி ஷோ. ஒரே கூட்டம். சிக்கனமான குடும்பம் எவ்வளவு சீக்கிரம் உயருகிறது என்பதைச் சித்தரிக்கும் கதை. கணவன், மனைவி, ஒரு மகன், ஒரே மகள் இவர்கள் கதாபாத்திரங்கள்.

சிறிது நேரத்தில் 'ஹவுஸ் புல்' ஆகிவிட்டது.

ரு. 1-25 வகுப்பில் கற்பகம் அமர்ந்து ரொம்ப சுவாரசியமாகப் படம் பார்த்துக்கொண்டிருந்தாள்.

எமது மனங்கனிந்த தீபாவளி திருநாள் வாழ்த்துக்கள்

ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா

ரூ. 2-00 வகுப்பில் தோழிகளோடு சேர்ந்துகொண்டு விஜி அரட்டை அடித்தவண்ணம் படத்தில் வரும் குடும்பத்தை ரசித்துக்கொண்டிருந்தாள் அதே வகுப்பில் மது தன் பிரண்ட்டோடு வில்ஸ் சிகரெட்டை புகைத்தவண்ணம் படம் பார்த்துக் கொண்டிருந்தான்.

சதாசிவம் ஆபீசுக்குப்போய் லீவ் போட்டுவிட்டு ஜூயி பாலஸுக்கு வந்துவிட்டார் ரூ 3-00 வகுப்புடிக்கெட் வாங்கிக்கொண்டு போய் உட்கார்ந்தார். குடும்பப் பிடுங்கலிலிருந்து சற்று நிம்மதியாக இருக்கலாம் என்று நினைத்துவந்தார்.

பின்னால் உட்கார்ந்திருந்த சதாசிவம் தனக்கு முன்னால் தன் குடும்பமே உட்கார்ந்து படம் பார்ப்பதைக் கண்டார் காலையில் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாக தன்னிடம் காசு வசூல் செய்தது இதற்குத்தானா? என்று நினைத்துக் கொண்டார்.

இரண்டரை மணி நேரம் நல்ல பொழுதாய் போயிற்று.

ஃ ஃ ஃ

மாலைநேரம். கற்பகம், கணவன் சதாசிவம் கொண்டுவரப்போகும் காபிப்பொடி, சர்க்கரைக்காக காத்திருந்தாள். வாசலுக்கும் உள்ளுக்குமாய் போய் போய் வந்தாள்.

ஒருவாறு சதாசிவம் வந்தார், வெறும் கையோடு.

காபி பொடி, சர்க்கரை வாங்கலையா? கற்பகம் கோபத்தோடு கேட்டாள்.

காசில்லே, வாங்கல்லே என்றார் சதாசிவம்.

நல்ல குடும்பம் இப்படித்தான் இருக்கும் என்றாள் கற்பகம்.

முழுசா முடி. நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்று சொல், என்றவாறு ஈசிசேரில் சாய்ந்து படுத்தார்.

ஆபீசிலே, நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம், படத்தைக் கொண்டுவந்து காட்டினாங்களா? படம் எப்படி இருக்கிறது? கணவனை கற்பகம் தாக்கினாள்.

மது வந்தான். அம்மா காபி ரெடியா? காலேஜிலே ஒரே கெடுபிடி, சலித்துக்கொண்டான்.

ஆமாண்டா! பல்கலைக் கழகத்திலே ஒரே கெடுபிடி. சதாசிவம் மகனைத் தாக்கினார்.

நீங்க முழுசா முடிங்க, நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம், இப்படித்தான் இருக்கா, சொல்லுங்க. இது கற்பகத்தின் குத்தல்.

தலையைக் குனிந்துகொண்டு உள்ளே போனான்.

விஜியின் விஜயம் ஆரம்பமாகியது.

அம்மம்மா! காபி கொடும்மா, தலையை வலிக்குதம்மா! என்று அம்மாவிடம் வந்து, தலையைப் பிடித்துக்கொண்டாள்.

என்னம்மா, விஜி பிறந்தநாள் வீட்டிலே தடபுடலா விருந்துசாப்பிட்டுட்டு வந்திருப்பேன்னு நினைச்சேன். காபி மட்டும்கூட கொடுக்கலையா? இது அப்பாவின் கேலிப் பேச்சு.

கொடுத்தாங்க! என்ன இருந்தாலும் அம்மா போடுற காபிமாதிரி இருக்குமா? இது விஜியின் சமாளிப்பு.

எல்லோருக்கும் எமது தீபாவளி தின நல் வாழ்த்துக்கள்

பி. கே. ஆர். பெர்ப்யூமரி,

மேற்கு பொன்னுரங்கம் சாலை, R. S. புரம்,

கோயமுத்தூர் - 641 002

பல்கலைக் கழகத்திலே வாங்கிக் குடிக்கணும்னு ஒரு ரூபாயில்லே கொடுக்கணும்.

என்னப்பா சொல்றீங்க? சற்று அதிர்ச்சியுற்றவன் போல் கேட்டான்,

நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம் படம்நடக்கிறதியேட்டர்லே வாங்கிக் குடிக்கணும்னு ஒருரூபாய் கொடுக்கணும்னேன்.

விஜிக்கு தான் சினிமாவுக்குப் போனது அப்பா, அம்மா இருவருக்கும் தெரிந்து விட்டதென்று மௌனமாக உள்ளே சென்றுள்.

கற்பகம்! எனக்கு இப்போ காபி வேணுமே! சதாசிவம் கெஞ்சினர்.

முதல் தேதிவரை நிறுத்திவைச்சிருக்கு, கற்பகம் சொன்னுள். சதாசிவம் வாயைத் திறக்கவில்லே.

கற்பகம் சிறிது நேரத்தில் இரு சிறிய பாத்திரங்களே எடுத்துக் கொண்டு, அடுத்த வீட்டு அம்புஜத்திடம் போனுள்; காபிப்பொடி, சர்க்கரை கடன்வாங்க.

மூன்றுபேரும் காபிக்காக காத்திருந்தார்கள், நல்லதொருகுடும்பம் பல்கலைக்கழகம் 'படக்காட்சியை அசைபோட்டவாறு.

எமது மனங்கனிந்த தீபாவலி திருநாள் வாழ்த்துக்கள்



ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா

குடிசையில் நம் நாடு

சுவாமி விவேகானந்தர்

பாமர மக்களைப் புறக்கணித்து ஒதுக்கியதுதான் நமது நாடு செய்த பெரும்பாவம் என்று நான் கருதுகிறேன். நமது வீழ்ச்சிக்கான காரணங்களில் இதுவும் ஒன்றாகும்.

இந்தியாவில் இரண்டு பெரும் தீமைகள் இருக்கின்றன. பெண்களைக் காலின்கீழ் மிதித்து நசுக்குதல், சாதிக் கட்டுப்பாடுகள் மூலம் ஏழைகளைக் கசக்கிப் பிழிதல் —இவையே அவை.

நமது நாட்டின் சாதாரண மக்களைப் பார் அவர்களுடைய முகம் எவ்வளவு சோர்வடைந்திருக்கிறது என்று பார். இதயத்தில் தைரியமில்லை, ஆர்வமில்லை, வயிறு பருத்திருக்கிறது, கை கால்களில் வலிமையில்லை. அற்ப விஷயத்திற்கும் அஞ்சுகிற கோழை மக்களாகிவிட்டார்கள்,

நமது தேசம் குடிசையிலிருக்கிறது என்பதை நினைவு கூறுங்கள் ஆனால், அந்தோ! அந்தக் குடிசைகளில் வாழும் மக்களுக்கு எவரும் எதுவும் செய்தாரில்லை.

குடிசைகளில் வாழும் மக்களே நமது நாட்டில் உண்மையான மக்களாவார்கள். அவர்கள் தங்கள் தனிச்சிறப்பை, தாங்களும் மனிதர்கள்தாம் என்பதை மறந்தேபோய் விட்டார்கள்,

பாரம்பரியமாகத் தங்களிடம் இருந்துவரும் உள்ளொளியை வெளிப்படுத்துவதற்குரிய வாய்ப்பு இந்தியாவின் பாமர மக்களுக்குத் தரப்படவேயில்லை.

ஹிந்து அல்லது இஸ்லாமியன் அல்லது கிறிஸ்தவனுடைய காலடியில் மிதிபட்டு, மிதிபட்டு பழகிப் போனதனால் நமது ஏழைமக்களுக்கு முடிவில், எவன் கையில் போதிய அளவு பணம் இருக்கிறதோ அவனுடைய காலடியில் மிதிபடுவதற்காகவே நாம் பிறந்திருக்கிறோம் என்ற எண்ணம் இயல்பாகவே ஏற்பட்டுவிட்டது.

தாழ்ந்த குலத்தைச் சேர்ந்த ஆதரவற்ற இந்திய மக்களாகிய விவசாயிகளும், நெசவாளிகளும் மற்றவர்களும அயல்நாட்டவர்களால் ,அடிமைகளாக்கப்பட்டும், நமது சொந்த நாட்டு மக்களால் இழிவுபடுத்தப்பட்டும், வாடுகிறார்கள். இவர்களே வரலாற்றுக்கும் எட்டாத நீண்ட நெடுங்காலம் முதற்கொண்டு தங்கள உழைப்புக்குத் தகுந்த ஊதியம் பெறுமலே மௌனமாக உழைத்து வருகிறார்கள்.

எவருடைய உழைப்பினால் மட்டும், பிராம்மணனது சொறசக்தியும், க்ஷத்திரியனுடைய வீரமும், வைசியனது செல்வமும் இருப்பது சாத்தியமாயிற்றோ. அந்த பாமரமக்கள் எங்கே இருக்கிறார்கள்? சமுதாயத்

தின் முக்கிய பகுதியாக இருந்தும், எல்லாக் காலங்களிலும், எல்லா நாடுகளிலும், கீழான பிறவிகள் என்றே அழைக்கப்பட்டுவரும் அந்த பாமர மக்களின் வரலாறு என்ன?

ஓ! இந்தியாவின் தொழிலாளி மக்களே! உங்களுடைய இடைவிடாத மௌனமான உழைப்பினால், பாபிலோனியா, பாரசீகம், அலெக்சாந்திரியா, கிரீஸ், ரோம், வெனிஸ், ஜினிவா, பாக்தாத், சாமர்கந்த், ஸ்பெயின்,போர்ச்சுகல் பிரான்சு, டென்மார்க், ஹாலந்து, இங்கிலாந்து ஆகிய நாடுகள் ஒன்றன்பின் ஒன்றாக மேன்மையும் புகழும் அடைந்தன! ஆனால் நீங்கள் பெற்றது என்ன? உங்கள் நலனைப் பற்றி நினைப்பவர்கள் எங்கே இருக்கிறார்கள்?

வாழ்க்கைப் போராட்டத்தில் இரவும் பகலும் ஈடுபட்டிருந்த காரணத்தினால் கல்வியறிவை வளர்த்துக்கொள்வதற்குரிய வசதிகள் நம் நாட்டுப் பாமர மக்களுக்கு இல்லாது போயின. மனித அறிவினால் இயக்கப்படுகிற யந்திரங்களைப் போல இடைவிடாமல் நீண்ட நெடுங்காலம்வேலை அவர்கள் செய்தார்கள். அவர்களுடைய உழைப்பினால் விளைந்த பயனின் பெரும் பகுதியைக் கல்வி கற்ற வகுப்பார் நுகர்ந்துகொண்டனர். இதே நிலைமைதான் எல்லா நாடுகளிலும் இருந்திருக்கிறது.

ஆனால் இப்போதோ காலம் மாறி வருகிறது. தாழ்த்தப்பட்ட வகுப்பினர் தங்களது நிலையை உணர்ந்து கண் விழித்து எழுந்துகொண்டிருக்கின்றனர். அவர்கள் அனைவரும் ஒன்றுகூடித் தாங்கள் இருந்துவந்த நிலைமையை எதிர்த்துப் போராடித் தம் உரிமையைப் பெற முயலுகிறார்கள். அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் உள்ள பொதுமக்களே முதலில் விழித்தெழுந்து இந்த எதிர்ப்பைத் தொடங்கினார்கள். இத்தகைய விழிப்புணர்ச்சி இந்தியாவிலும் இருக்கிறது என்பதற்குப் பல அறிகுறிகள் காணப்படுகின்றன. இப்போதெல்லாம் தாழ்ந்த வகுப்பார் வேலைநிறுத்தம் செய்வதோடு, நடுத்தர வகுப்பாரும் செய்வது இந்தியாவின் எல்லா இடங்களிலும் பரவி வருவது இதற்கொரு சான்றாகும். அதில் பெரும்பாலும் வெற்றி பெறுவது நல்ல அறிகுறியாகும்.

குடும்பத்திற்கு தேவையான எல்லாவித எவர்சில்வர், பித்தளைப் பாத்திரங்கள
பிரஸ்டீஜ குக்கர், முதலிய சாமான்கள் யாவும் நம்பிக்கையான விலையில்
எங்களிடம் கிடைக்கும்

மாதாந்திர சேமிப்பு திட்டத்தில் சேர்ந்து பயனடையுங்கள்

எல். ராமசாமி நாடார் & பிரதர்

49, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

காட்சி சாலைகள்:

22, பைக்ராப்ட்ஸ் சாலை, சென்னை-5.

5, ராமகிருஷ்ண மடம் சாலை, (லஸ்) சென்னை-4

தொழிற்சாலை:

38, V. R. பிள்ளை தெரு, சென்னை-5.

ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா

பண்டைக்காலம் முதல் பிரசித்தமான கிராம்புத்
தைலத்தின் குணாதிசயங்களின் பயனைப்பெற ஆயிரக்
கணக்கான குடும்பங்கள் இப்பொழுது
கிராம்புத் தைலம்
கொண்ட
ப்ராமிஸ்
உபயோகிக்கிறார்கள்
நீங்களும் உபயோகியுங்கள்
ப்ராமிஸ்
• பற்சிதைவிலிருந்து பாதுகாக்கிறது.
• வாய்க்குப் புத்துணர்ச்சி தருகிறது
• துர்நாற்றத்தை அகற்றுகிறது
Promise
Promise TOOTH POWDER
ஆரோக்கியமான பற்கள்,
ஈறுகள் மற்றும் புத்துணர்ச்சி மிக்க மூச்சு
பல்ஸாரா தயாரிப்பு
CHAITRA-BLS-669 TAM

லக்னபலன்

குண்டூசி ஜோஸ்யர்

தீபாவளி மாதப் பலன்

அன்பார்ந்த வாசகர்களுக்கு எங்கள் மனமார்ந்த தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டு, தீபாவளி விசேஷ பலன்களை கூறுவோமாக!

மேஷம்

இவர்களுக்கு தனலாபமும் பொருள் லாபமும் ஏற்படக்கூடிய காலம் இது. புது மாப்பிள்ளைகளுக்கு இது முற்றும் பொருந்தும் எனத் தெரிகிறது விலைவாசி என்னதான் உயர்ந்திருந்தாலும் கேவலம் ஒரு முக்கால் பவுன் மோதிரமும் ஒரு ஜரிகை வேஷ்டியுமாவது கிடைக்க வாய்ப்புண்டு. சிலருக்கு வெளியூர் பிரயாணமும் அலைச்சலும் இருக்குமென்றும் காணப்படுவதால் மாமனார் வீட்டுக்குப் போக வேண்டிய (சுயநல) நிர்ப்பந்தம் இருக்கும் அலைச்சல் இருந்தாலும் பொருள் வரவு முக்கியமல்லவா? நடக்கட்டும்.

ரிஷபம்

இவர்களுக்கு பொருள் வசதி நிறைந்திருக்கும். உத்தியோகத் துறையில் கௌரவமும் அதிகாரிகளின் பரிவும் இருக்கும். கொஞ்சம் வயதான சீனியராக இருந்தால் நல்ல சம்பளமும் பணவசதியும் இருக்குமல்லவா? வரவுக்குத்தகுந்த செலவும ஏற்படும். பெண்களுக்குக் திருமணமாகியிருந்தால் தலை தீபாவளியோ, இரண்டாம் வருஷ தீபாவளியானாலும் செலவு செய்யத் தான் வேண்டியிருக்கும். சுபகார்ய செலவுகள் இருக்கும். பட்டுப் புடவை கேட்கும் மனைவியிடம் நூல்புடவை அல்லது தேவேந்திரா புடவைதான் வாங்கமுடியும் என்று அடித்துச் சொல்வதும் ஒருதுணிச்சலான காரியம்தான்! சிலா புதிய வீட்டுக்கு குடிபோக நேரலாம்.

மிதுனம்

முயற்சிகள் வெற்றிபெறுமென்று காணப்படுகிறது. பொருளாதாரம் நெருக்கடி ஏற்பட்டு சமாளிக்க

அனைவருக்கும் மனங்கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்

சென்டெக்ஸ்

கைத்தறி துணிகள்

எங்கள் பிரத்யேக ஷோ ரூம்களுக்கு விஜயம் செய்யுங்கள்

சென்டெக்ஸ் ஷோ ரூம்

உம்மிடியார் அங்காடி மையம், 811, அண்ணா சாலை,
சென்னை-600 002. தொலைபேசி: 810241

●

சென்டெக்ஸ் ஷோ ரூம்

நீலகிரி டெக்ஸ்டைல்ஸ், நீலகிரி பில்டிங்ஸ்,
11, பிரிகேட் ரோடு, பங்களூர்-560 001. தொலைபேசி: 577501

●

சென்டெக்ஸ் ஷோ ரூம்

எம். ஜி. லி. மார்க்கெட் (எதிர்புறம்) மெயின்ரோடு,
சிராளா-523155, ஆந்திர பிரதேஷ்

●

சென்டெக்ஸ் ஷோ ரூம்

13, மேல சித்திரை வீதி, மதுரை-625 001

●

சென்டெக்ஸ் ஷோ ரூம்

ஏஜண்ட்: ஜெயம் ராஜகோபால்
7-3-225, பிரகாசம் பந்துலு ரோடு, இந்துப்பூர்-515 201

தயாரிப்பாளர்கள் & ஏற்றுமதியாளர்கள்

சென்னிமலை
நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்

சென்னிமலை—தமிழ்நாடு

M. P நாச்சிமுத்து, B.A., B.L. —தலைவர்

டியுமென்றும் தெரிகிறது. கண
ன் மனைவியிடையே கொஞ்சம்
திருப்தி ஏற்பட வாய்ப்புண்டு
ன்றுமுள்ளது, பாவம் பெரியகுடும்
மாக இருக்கலாம். சர்க்கரை,
ண்ணெய், ஜவுளிரகங்கள்; பட்
ாசு ஆகியவை எல்லாமே விலை
யர்ந்துள்ள காலம். பாவம்!
ருக்கு எதை வாங்குவது என்று
ழிக்கலாம். பணத்துக்கு அலைச்
ல்தான்! எப்படியோ பணம் தேடி
காண்டுவந்து தீபாவளியை நன்
கவே நடத்திடலாம் மேலிடத்து
அதிகாரிகளும் தெரிந்தவர்களும்
ரளவு ஆதரவுடன் இருப்பார்கள்.
தய்வ வழிபாடும் தெய்வசிந்தனை
ும் அதிகமாக இருக்கும்.

டகம்

வெகு சாமர்த்தியமாக நடந்து
கொள்வதன்மூலம் இவர்கள் பிரச்
னைகளில் அகப்பட்டுக்கொள்ளா
மல் தப்பித்துக்கொள்ளலாம் உத்தி
யோகத் துறையில் இருப்பவர்கள்
ெடுமையாக உழைக்கவேண்டியிருக்
கும். வருமானம் குறைவாக இருக்க
லாம். செலவு வரத்தானே செய்
யும், இரவு பகலாகவாவது வேலை
செய்து கூடுதலாக ஏதாவது வரு
மானத்திற்கு வழிசெய்துகொள்ள
வேண்டிய நிர்ப்பந்தமேற்படுவது
சகஜம். எப்படியோ பண்டிகையை
விடமாட்டார். நன்றாகவே செய்து
விடுவார்.

சிம்மம்

எழுத்துத் துறை, கலைத்துறை
யில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இது
நல்ல மாதமென்று காணப்படுகிறது
தீபாவளி சமயத்தில் எதையாவது
எழுதி நாலுகாசு சம்பாதிக்காத
எழுத்தாளர்களும் இருக்கமாட்டார்
களல்லவா! இப்படி எழுத்தாளர்
களை ஆதரிக்கும் சிலர் இந்த தீபா
வளி சமயத்திலாவது அவர்களுக்கு
உதவாமல் இருக்கமாட்டார்களா?
பரஸ்பரம் உதவிசெய்து கொள்வ
தால் இந்தத் துறையில் உள்ளவர்
களுக்கு இது நல்லமாதம் என
லாம். கலைத்துறையில் உள்ளவர்
களும் ஏதாவது நிகழ்ச்சிகளை ஒப்
புக்கொண்டு தீபாவளி சமயத்திலா

அனைவருக்கும் எங்களது தீபாவளி நல் வாழ்த்துக்கள்

புகழ்பெற்ற
'கணேஷ்' சௌபாக்யா
'வெட் கிரைண்டர்' மாவரை
இயந்திரங்கள்
SGI ஸ்ரீகணேஷ் இண்டஸ்ட்ரீஸ்
119, சத்தி ரோடு, ஈரோடு-638001. Ph: 3513.

ஙேது நாலு காசு (இப்போது காசு
என்பதே கிடையாது. சும்மா பேச்
சுக்குச் சொல்கிறேம்; எல்லாம்
நோட்டுகள் தான்......ஏதோ வரு
மானம் இருக்கும், தீபாவளியும் நன்
ருக நடக்கும். மற்றபடி சில்லரை
பிரச்சனைகள் இருக்கும். சமாளித்து
விடுவார்கள்.

கன்னி

இவர்கள் உணவு விஷயத்தில்
எச்சரிக்கையுட னிருப்பது நல்லது.
தீபாவளி சமயம், நாலுவித பட்ச
ணங்கள் செய்வார்கள் நாக்கில் நீர்
ஊரும், நாக்கை அடக்கிக்கொள்ள
வேண்டும் சிலருக்கு நெடுநாட்
களாக தீராமலிருக்கும் பிரச்சனை
களுக்கு முடிவு ஏற்பட வழியுண்டு.
கல்யாணமாகாத பெண்களுக்கு
கல்யாணம் நிச்சயமாகும் கல்யா
ணத்தை தீபாவளிக்குப் பிறகு
வைத்துக்கெள்வது பொருளாதார
ரீதியில் நன்மை பயக்கும். நல்லவர்
களின் உதவியால் எல்லாமே நல்ல
படியாகவே நடக்கும்.

துலாம்

கூட்டு முயற்சியில் ஈடுபட
வேண்டாம். செலவுகளுக்கு புதிய
முயற்சிகள் செய்யவேண்டி வரு
வீண் செலவுகளைத் தவிர்ப்பது ந
லது. கடனுவது வாங்கி பண்
கையை நடத்துவார்கள், மற்றப
குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சியாகவே
இருக்கும்! கேட்டதை வாங்கி
கொடுத்துவிட்டால் மகிழ்ச்சிக்
என்ன குறை! ஜமாய்த்துவிடலா
வாழ்க்கையில் நல்ல முன்னேற்ற
காணப்படுகிறது, திடீர் யோகமு
உண்டாகலாம் இருக்கவே இருக்
லாட்டரி சீட்டு. முயற்சி செய்யு
கள்.

விருச்சிகம்

தொழில் துறையில் இருப்பவ
கள் மேலதிகாரிகளின் மதிப்புக்கு
பாத்திரமாக இருந்த நிலைமை மா
லாம். அவர்களின் அதிருப்திக்
ஆளாகலாம். தொழிலாளர்களா
இருப்பவர்களுக்கு இந்த தீபாவ
மாதம் ஒரு சோதனை காலம் எ
லாம். எல்லாம் போனஸ் தகரா
தான். இடைக்கால நிவாரண
கிடைக்கும் ஏதோ கிடைத்தவ
வைத்துக்கொண்டு 'காமா சோம
தீபாவளிதான். என்ன செய்வது
சிலருக்கு விசேஷபலன் இப்படி

Hearty Deepavali Greeting to our Customers

*

Phone : Care : 2535

VEEJAY RUBBERS

Manufacturers of
BEST QUALITY HAWAI CHAPPALS

2-B, Saibaba Co-op. Colony, K. K. Pudur,
COIMBATORE-38

ணப்படுகிறது. அதைத்தான் முதுகிறோம். என்மீது வருத்தப் டவேண்டாம்.

னுசு

தொழில் துறையில் முதலீடு தியதாக இருந்தாலும் வரக்கூடிய ருவாய் அதிகமாக இருக்கும். ஒரு ன்ன ஜவுளி வியாபாரமோ, பட் ாசு கடையோ வைத்திருந்தாலும் ட தீபாவளி சமயத்தில் ஒருகை ர்த்துவிடலாமல்லவா! மற்றும் ரு சிலருக்கு பரிசுச் சீட்டில் ஏதா து கிடைக்கும்போல தெரிகிறது! லருக்கு பரிக்ஷையில் வெற்றி டைக்க வாய்ப்புண்டு. சிலர் உல் ாச பயணம் செல்வார்கள். வியா ார விருத்திக்கு ஆகவேண்டிய ாரியங்களைச் செய்யலாம். நிதான மான வருமானம், நிதானமான தீபாவளி செலவு மன அமைதி யாவும் காணப்படுகிறது. ரொம்ப நல்லமாதம்.

மகரம்

தொழில், வியாபாரத் துறையில் நல்ல முன்னேற்றம், சரக்குகள்வரு முன்பே, அல்லது வந்தவுடன் விற் பனையாவது, கணிசமான லாபம், வியாபாரத்தில் பூரணமான பலன் யாவும் இவர்களுக்கு ஏற்படலாம். இதுவரையில் கூட்டு வியாபாரமாக இருந்திருந்தால் இனி சொந்த மாகவே நடத்த வாய்ப்புண்டு. உடல்நலம் நன்கு இருக்கும். புதுவீடு கட்டவோ, வாங்கவோ யோகமுள்ளது புண்ய ஸ்தலயாத் திரையால் இவர்களுக்குமன நிம்மதி

எங்களது மனமுவந்த தீபாவளி வாழ்த்துக்கள்

புளியை ஊற வைத்து கரைக்கும் தொல்லை இனி இல்லை

ரங்கா புளிப்பவுடர்
சமையலை எளிதாக்குகிறது

- சேமித்து வைக்க சுலபமானது
- கறையும் பிசுபிசுப்பும் இல்லை
- முதல் தரமானது • ஆரோக்கியமானது
- நேரத்தை மிச்சப்படுத்துகிறது
- சமையலில் சேர்க்க சுலபமானது

எல்லா பெரிய நகரங்களிலும், முக்கியமான கடைகளிலும், சூப்பர் மார்க்கெட்டுகளிலும் இப்பொழுது விற்பனையாகிறது

FOR SUPER SOFT & SUPERB TASTE
"RANGA" JAMOON MIX

OSR

தயாரிப்பாளர்கள்:
ஸ்ரீ ரங்கா புட்ஸ்
208, திவான் பகதூர் ரோடு
ஆர்.எஸ். புரம் • கோயமுத்தூர்-641 002
தந்தி: 'பேவரிட்' • போன்: 23344

வியாபார விசாரணைகள் வரவேற்கப்படுகின்றன

ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா

ஏற்படும். இது ஒரு நல்லமாதமென லாம்.

கும்பம்

பணவரவும், பணச் செலவும் நெருக்கடிகளும் இருக்கும். தொடர்ந்து முயற்சி செய்தால்முன் னேற்றமேற்படும். வியாபாரத்தில் நஷ்டமிருந்தால் அதுநிவர்த்தியாகி இப்போது லாபத்தில் நிற்கும் பவுன், வெள்ளி வியாபாரிகளுக்கு இது நல்ல மாதம். அதேபோல சினிமா சம்பந்தப்பட்டவர்களுக் கும் இது நல்ல மாதம், ஊழியர் களால் தொந்தரவுகள் ஏற்படலாம் இது எந்தக்காலத்திலும் உள்ள தொந்தரவுகள். தீபாவளிக்குப் பிறகு நிலைமை சகஜமாகும். ஆக இவர்களுக்கு இது ஒரு நல்ல மாதமே.

மீனம்

உத்தியோகத்தில் உள்ளவர்கள் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாக நேரிடும் நண்பர்கள், உற வினர்கள் தள்ளிப் போவார்கள். வெளியூர்ப் பிரயாணமும் ஏற்பட லாம். அலைச்சலும் பணவிரயமும் ஏற்பட வாய்ப்புண்டு, பணவரவு விஷயத்தில் மிகவும் ஏமாற்றமான சூழ்நிலையாகத்தான் இருக்கும். ஏதோ தலையெழுத்தேயென்று உத் யோகம் பார்ப்பவராகஇருக்கலாம். திடீர் போனஸ் அறிவிப்பின் மூலம் கடைசிநேரத்தில் நிலைமை சமாளித்து விடுவார்கள்.

எல்லோருக்கும் இன்பத் தீபாவளி

குருநாதன் என்பவனை கும்பிடுவோமே

— புதுவயல் ந. செல்லப்பன் —

குருநாதன் என்பவனை கும்பிடுவோமே—அந்தக்
கூத்தாடி சிவன் மகனை நம்பிடுவோமே
ஒருநாதன்! அவனோடு ஒன்றிடுவோமே—இந்த
உலகெங்கும் அவன்வடிவம் என்றிடுவோமே

இடர்முகத்தில் நாமழைத்தால் வந்திடுவானே—ஏன்
ஏனென்று கேட்பதற்கு முந்திடுவானே
சுடர்முகத்தில் புன்னகையைச் சிந்திடுவானே—நமக்குச்
சொல்லரிய சுகமனைத்தும் தந்திடுவானே

காசுபணம் பெருகிவரச் செய்திடுவானே—தம்
கவலையெல்லாம் ஒருநொடியில் கொய்திடுவானே
மாசகல அருள்மழையைப் பெய்திடுவானே—மன
வாசலிலே அவன் நினைவை நெய்திடுவானே

பக்தரெல்லாம் தேடிவந்து கூடிடுவோமே—நல்ல
பண்ணிசைத்துத் தாளம் கொட்டி ஆடிடுவோமே
முக்தியெல்லாம் தருபவனை நாடிடுவோமே—உயர்
முத்தமிழில் அவன் பெருமை பாடிடுவோமே.

திருமுல்லைவாயில் ஸ்ரீவைஷ்ணவி

WITH

BEST

COMPLIMENTS

FROM

BIMETAL
BEARINGS
LIMITED

232, RACE COURSE ROAD
COIMBATORE-641 018

Phone : 32573
Cable : "BIMITE"

MADRAS
COIMBATORE
HOSUR

ராமனை விட்டு சீதா தன் தாய் வீட்டிற்குப்போய் இரண்டு வருடங்களாகிவிட்டன.

அதற்கு ராமனின் தாய் தந்தையர்தான் காரணம். அவர்களுக்குத் திருமணமாகி ஆறு ஆண்டுகளாகியும், ஒரு மழலை அந்த வீட்டில் விளையாடவில்லை இதற்காக சீதாவைக் கரித்துக்கொட்டினர்.

சீதாவும் தன் கணவன் மீதுள்ள பிரியத்துக்காக பொறுத்து பொறுத்துப் பார்த்தாள் மாமியாரின் தொந்தரவு தாங்காமல், கணவனிடம் கண்ணீரோடு விடைபெற்றுக் கொண்டாள். தன் தாய்வீடு குருவாயூரை நோக்கி புறப்பட்டாள்.

திருமாமகள்

டே, ராமா! அவள் போய்தான் ஆண்டுகள் இரண்டு கடந்துவிட்டதே! நீ இப்போதாவது ரெண்டாம் தாரம் கல்யாணம் பண்ணிக்கோடா. தாயாரின் அரிபபுத் தாளவில்லை.

அம்மா! நான் ராமன். என்றைக்குமே ஸ்ரீராமன்தான் சீதாவைத் தவிர வேறு துணைவியை ஏற்கமாட்டேன். ராமன் அம்மாவிடம் கண்டிப்பாக மறுத்துவிட்டான்.

இரவு படுக்கையில் படுத்துக் கொண்டே இதே சிந்தனையில் புரண்டு கொண்டிருந்து, நெடு நேரம் கழித்து கண்ணயர்ந்தான் ராமன்.

அருமையான ஆண் குழந்தை. சிரித்து விளையாடுகிறது. நீங்கள் பார்க்க வேண்டாமா? ஓடி வாருங்கள் என்று சீதா சிரித்துக் கொண்டே கனவில் வந்து தன்னை அழைக்கிறாள். 'சட்'டென்று விழித்துக்கொண்டான் ராமன். அதன் பிறகு தூக்கமே வரவில்லை

மறுநாள், நீண்ட யோசனைக்குப் பிறகு, அலுவலகம் சென்று பத்து நாட்கள் லீவு போட்டுவிட்டு வந்தான். அம்மாவிடம் ஆபீஸ் வேலையாகப் பம்பாய் போவதாக பொய் சொல்லிவிட்டு, சீதாவைப் பார்க்க குருவாயூருக்குப் புறப்பட்டான்.

* *

மாமனார் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்த ராமனின் கண்களில் முதலில்பட்டது, அழகான ஆண்குழந்தையோடு சீதாதான். ராமனுக்கு ரொம்ப ஆச்சரியமாய் போய்விட்டது. நேற்று இரவு கண்ட கனவு நிஜமாய் இருப்பதை எண்ணி.

சீதா......என்று அன்போடு அழைத்தவாறு அருகில் சென்றான்.

வாங்கோ...வாங்கோ......என்று கண்களில் ஆனந்தக் கண்ணீர் வடித்தாள். பிறகு குருவாயூரப்பன் நமக்குக் கிடைச்சிருக்கான் என்று கணவன் கையில் அன்பு சொரியக் கொடுத்தாள் குழந்தையை.

அவன் முத்தங்களை வாரிவாரி குழந்தைக்கு வழங்கினான். குளித்து சாப்பிட்டுவிட்டு, சாவகாசமாக, குழந்தை கிடைத்த விதத்தை விவரிக்கலானாள் சீதா.

நான் உங்களை விட்டு இங்கு வந்துவிட்டாலும என் நெஞ்சில் துக்கமதாளமுடியவில்லை. அதை ஆற்றிக் கொள்வதற்காக காலை, மாலை இரண்டு வேளையும் குருவாயூரப்பன் ஸ்வாமி சன்னதிக்குச் சென்று மனமுருகி, குருவாயூரப்பா எனக்குக் குழந்தைச் செல்வத்தை கொடு, என்னை என் உங்களுடன் சேர்த்து வாழவை; இந்த வரத்தை நீதானப்பா கொடுக்க வேண்டும் என்று மனமுருகிவேண்டிக்கொண்டு வந்தேன்.

ஒரு வருடமாயிற்று. ஒருநாள் அதிகாலைப் பொழுதில், வாசல் திண்ணையில் குழந்தையின் அழுகுரல் கேட்டது. வாசல் கதவைத் திறந்து பார்த்தேன். ஒரு துணியில் இந்தக் குழந்தை படுத்திருந்தது.

என்னைக் கண்டவுடன் அழுகையை நிறுத்திவிட்டது.

என்னை நோக்கி கைகளைத் தூக்கி தாவி வந்தது. குருவாயூரப்பா! பின்னை வரம் கேட்டேன், நீ பிள்ளையையே கொடுத்துவிட்டாய் என்று குழந்தையை அள்ளி அணைத்துக் கொண்டு, பெற்றோரிடம் சென்று விபரத்தைச் சொன்னேன்.

பகவான் சோதிக்கிறான். பரவாயில்லை நீ குழந்தையை வைத்துக் கொண்டு வளர்த்து வா பார்ப்போம் என்று என் தாய்தந்தையர் சொன்னார்கள் நானும் குழந்தைக்கு குருவாயூரப்பன் என்று பெயரிட்டு வளர்த்து வருகிறேன். உங்களுக்கு இதுகுறித்து இன்றுதான் கடிதம் எழுதவேண்டுமென்று நினைத்தேன் அதற்குள் மாமி என்ன சொல்வார்களோ என்ற பயம் வந்துவிட்டது.

அதற்குள் நான் டெலிவிஷனிலே குருவாயூரப்பனை பார்த்து விட்டேன்.

என்ன சொல்லுகிறீர்கள்?

நேற்று இரவே நீ என் கனவில் வந்து, குருவாயூரப்பனைக் காண்பித்து, உடனே பார்க்க வாருங்கள் என்று அழைப்பு விடுத்தாய் போதுமா?

சந்தோஷத்தோடு, ராமன் சீதாவோடு அங்கு இருந்தான். ஒவ்வொரு நாளும் குருவாயூரப்பனை தூக்கிக்கொண்டு தம்பதிகள் இருவரும், கோவிலுக்குப் போய் வந்தனர்.

நான் போய் அம்மாவிடம் எப்படியும் சமாதானம் சொல்லி, உன்னை அழைத்துப் போகிறேன் என்று சொல்லிவிட்டு, ராமன் ஊருக்குப் புறப்பட்டான்.

⁂ ⁂ ⁂

சீதாவின் அந்த லெட்டரைப் பார்த்து ராமனுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. அம்மாவிடம் போய், ''அம்மா! உங்களுக்குப் பேரன் பிறக்கப் போகிறான் இன்னும் ஏழு மாதம் பொறுங்கள். நான் சமீபத்தில் பத்துநாள் பம்பாய் போகவில்லை சீதாவிடம் தான் போயிருந்தேன்'' என்றான் சிரித்துக் கொண்டே

சரியான திருடன் நீ. என்று ஒரு ஸ்பூன் சர்க்கரை அவன் வாயில் போட்டாள்.

பலகாரங்கள் செய்து எடுத்துக் கொண்டு, குருவாயூருக்குப் போய் மருமகளைப் பார்த்தாள் குருவாயூரப்பனின் கதையைக் கேட்டு வியந்துபோனாள் குருவாயூரப்பன் தான் மருமகளுக்குக் குழந்தையை தந்திருக்கிறான் என்று அவனுக்கு முத்தங்களை வாரிவாரி வழங்கினாள்.

சீதா! நீ உடனே புறப்படு. நம்ம வீட்டுக்குப் போகலாம் என்றாள் அவள் மாமியார்.

மன்னியுங்கள் மாமி! கையில் குழந்தையோடுதான் நம்வீட்டுக்கு வருவேன்.

மாமியார் சிரித்துக்கொண்டே ஊருக்குப் புறப்பட்டாள்.

⁂ ⁂ ⁂

சீதா ஆண் குழந்தைக்குத் தாயானாள். அவனுக்கு கண்ணன் என்று பெயர் வைத்தனர் மூன்று மாதங்கள் ஆயின. சீதாவையும், குழந்தையையும் அழைத்துப்போக வந்திருந்தான் ராமன்.

பழனியம்பதியில் கலியுக வரதனாக
அவதரித்த
ஸ்ரீபழனி ஆண்டவரை தரிசிக்கும்
பக்தகோடிகள் அனைவரும்
விரும்புவது

பழநி

S. சித்தனாதன்

ஸ்பெஷல் ஜவ்வாது
வாசனை விபூதி
ஸ்பெஷல் பஞ்சாமிர்தம்

○

பரிமள விலாஸ்

S. சித்தனாதன் சன்ஸ், விபூதி ஸ்டோர்,
அடிவாரம், பழனி-624601.

போன்: கடை 405   வீடு & ஸ்டோர்: 406

கௌரி

தேன்கூடு
சிறு சேமிப்பு திட்டம்

இத்திட்டத்தில் எல்லோரும் சேரலாம். ரூ. 25, 50 என்று மாதாமாதம் சேமிப்பதன் மூலம் சிறந்த நகைகளைப் பெறலாம் ஒருவர் எத்தனை சீட்டுக்கள் வேண்டுமென்றாலும் சேரலாம்.

நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக நாணயத்திற்கும், நம்பிக்கைக்கும் பெயர் பெற்றவர்கள்.

கௌரி ஜுவல்லரி மார்ட்

72-65, பைகிராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி,
சென்னை - 600005.

உரிமையாளர்: K. ராமலிங்கம்   போன்: 842594

அன்று இரவு ஊருக்குப் போக நிச்சயமாயிற்று. காலையில் கோவிலுக்கு சீதா, குருவாயூரப்பன், கண்ணன் எல்லோரையும் அழைத்துக் கொண்டு சென்றான் ராமன்.

பிள்ளை இல்லாதிருந்த தனக்கு இரட்டைப் பிள்ளைகளைத் தந்த குருவாயூரப்பனை மனமுருகி வணங்கினாள் சீதா. மூலஸ்தானத்துக்குச் சென்று அர்ச்சனை செய்தனர், கற்பூர ஆரத்தி நடந்தது.

குழந்தை கண்ணன் கைகளை எடுத்துக் குருவாயூரப்பன் முத்தமிட்டான். அம்மாவிடமும், அப்பாவிடமும் முத்தம் பெற்றுக்கொண்டான்.

குருவாயூரப்பன் எல்லோரையும் பார்த்துச் சிரித்தான். வேகமாக நடந்து மூலஸ்தானத்துக்குள் சென்று மறைந்தான்.

குருவாயூரப்பா, குருவாயூரப்பா, என்று கண்களில் கண்ணீர் ததும்ப சீதாவும் ராமனும் அழைத்தனர்.

மணிச் சப்தம் ஒலித்தது. சலங்கையொலி கேட்டது.

வந்தான், தந்தான், புறப்பட்ட இடத்துக்கே போய்விட்டான். கண்ணீரைத் துடைத்துக்கொள்ளுங்கள்" என்றார் வயதான அர்ச்சகர்.

கண்ணன் சிரித்தான்.

இன்பத் தீபாவளி

—நெல்லை ஆ கணபதி

பட்டுப்புடவை சரசரக்கும்!—எழில்
பட்டாசுஎங்கும் ஒளிசிறக்கும்!
கட்டுகட்டாய் வெடிவெடிக்கும்!—எங்கும்
கங்காஸ்நானமும் மனம் குளிரும்!

எத்தனைஎத்தனை இனிப்புகளோ—வீடு
எங்கும்நிரம்பிக் குவிந்திருக்கும்!
புத்தம்புதியநல் ஆடைகள்தான்—இன்பம்
பொங்கஅணிந்து உடல்சிலிர்க்கும்!

மாமியார்கட்கு முகம்சிரிக்கும்!—பெண்தந்த
மாமனார்களையோ கடன்முறிக்கும்!
தாம் மிக இன்புற எண்ணிஎண்ணி—இளம்
தம்பதிநெஞ்சம் கிளுகிளுக்கும்!

வாண்டுகள்வீட்டையே தூள்படுத்தும்!—இனும்
வாங்கவேதேடிடும் ஆள்பெருகும்!
ஆண்டுகள்தோறுமே தீபாவளி—வந்து
அனைவரையும்மிகக் குஷிப்படுத்தும்.

ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா

எமது மனங்கனிந்த தீபாவளி திருநாள் நல் வாழ்த்துக்கள்

●

கோவையில் 106 ஆண்டுகளுக்கும் மேலாக
நெய்யினால் தயாரிக்கப்பட்ட இனிப்பு வகைகளுக்கு
பெயர் பெற்ற ஸ்தாபனம்

✱

ORIGINAL VISWANATHA IYER GHEE SWEETS

ஒரிஜினல் விஸ்வநாத அய்யர்
நெய் மிட்டாய்க் கடை

164, ராஜ. வீதி : : கோயமுத்தூர்-1

போன் : 25651

எமது மனங்கனிந்த தீபாவளி திருநாள் வாழ்த்துக்கள்

✱

உயர்ந்த பட்டுப் புடவைகள்

டெரீன், உல்லி, நைலாக்ஸ், புல்வாயில் சேலைகள் பல ரகம்

ரூட்டிங், ஷர்ட்டிங் பல ரகங்கள்

நாகரீகத்தின் பிரதிபலிப்பு

எல்லாவிதமான ஜவுளிகளும் ஏராளமாக வந்துள்ளன,

✱

பி. ஆர். நாராயணசாமி அய்யர்

494, பெரிய கடை வீதி, திருச்சி-8

போன் : கடை – 24026 வீடு – 24641 தந்தி : BONTEX

கருப்பனே கண்ணன்
சுடலையே சிவன்

முருகன், சிவன், திருமால், பிரம்மா, கணபதி, பராசக்தி முதலிய தெய்வங்களைப் பெருந்தெய்வங்களென்றும், சுடலை, கருப்பன், காத்தவராயன், மாரி, முப்புடாதி, இசக்கி, காத்தாயி, அய்யனார் முதலிய தெய்வங்களை சிறு தெய்வங்களென்றும் சொல்லுவார்கள்.

சிறு தெய்வங்கள், பெருந்தெய்வங்கள் என்பதெல்லாம் அவரவர் மனப்பான்மையைப் பொருத்ததே! ஒருவருக்கு சிறு தெய்வமாக இருப்பது மற்றவருக்குப் பெருந்தெய்வமாக இருக்கும். இன்னொருவருக்குப் பெருந்தெய்வமாக இருப்பது வேறு ஒருவருக்கு சிறு தெய்வமாக இருக்கும்.

பேராசிரியர் ச. கணபதிராமன்

கோவிலின் பரப்பளவு, வருமானம், வருகிற பக்தர்களைக் கொண்டு, சிறிய தெய்வம், பெரிய தெய்வம் என்று பிரிக்கப்படுகின்றன. குறிப்பாகக் கூறினால், பட்டி மக்கள் வழிபடும் தெய்வங்கள் சிறு தெய்வங்களென்றும், கூடகோபுரங்களுடன் விளங்கும் தெய்வங்கள் பெருந்தெய்வங்கள் என்றும் சொல்லப்படுகின்றன சிறிய தெய்வங்களே பட்டிக்காட்டு மக்களின் குல தெய்வங்களாக விளங்குகின்றன.

முதல் தெய்வம்

பெருந்தெய்வங்கள் தோன்றுவதற்கு முன்னரே சிறு தெய்வ வழிபாடு தோன்றிவிட்டது. சிறு தெய்வமான கருப்பனே பின்னாளில் கண்ணனாகிவிட்டான்.

சிறு தெய்வமான சுடலைமாடனே பின்னாளில் சுடலையாடும் பெருமானாகிய சிவனாகிவிட்டான். மாரி பின்னாளில் பராசக்தி, முப்புடாதியாளன் சிறு தெய்வங்கள். பெருந் தெய்வங்களாக மாறிய பின்னர், அவர்களுக்கு மந்திரங்களும் பூஜைகளும் ஏற்பட்டன. ஆகம விதிகளும், தத்துவங்களும் தோன்றின. இன்னார்தான் பூஜை செய்யவேண்டுமென்று விதி எழுதப்பட்டது.

மாடன் – இசக்கி

போர்க்களத்தில் மார்பில் புண் பட்டு இறந்தவர்களை நடுகல் அமைத்து வழிபட்டார்கள். அவர்களை மாடன் (சிறந்தவன்) என்றும் பெண்கள் வீரமரணமடைந்தால் அவர்களை இசக்கி (புகழ் பெற்றவர்) என்றும் குறிப்பிட்டார்கள் மாடு என்றால் செல்வம் சிறபபு என்று பொருள். இசைக்கிழத்தி (புகழுக்கு உரியவள்) இசக்கி ஆயிற்று.

களக்காடு என்னும் ஊர் நெல்லை மாவட்டத்தில் உள்ளது. இவ்வூருக்கருகில் துரைமாடன் என்ற தெய்வம் உண்டு.

ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா

அனைவருக்கும் எங்களது தீபாவளி நல் வாழ்த்துக்கள்

கான்சாகிப் என்ற முகம்மதிய தளபதியுடன் நடந்த போரில் வெள்ளைக்கார தளபதி ஒருவர் கொல்லப்பட்டார். அவரையே துரைமாடன் என்று வணங்குகிறார்கள், இந்தத் துரை மாடனுக்குபிஸ்கெட்டு, சாராயம் ஆகியவைதான் படைப்பது வழக்கம்! வெள்ளைக்காரன் பிஸ்கெட்டு மட்டும்தானே தின்பான்.

எழுத்துக்கல் மாடன்

கடையம் என்ற ஊருக்கருகில் எழுத்துக்கல் மாடன் என்ற தெய்வமுண்டு. இது ஒரு கல்வெட்டு. கல்வெட்டு எழுத்து நன்றாகப் புலப்படவில்லை. கல்வெட்டினை எழுத்துக்கல் மாடன் ஆக்கி வணங்குகிறார்கள்.

தொழில்களுக்காகத் தெய்வங்களையமைத்து, மாடன் என்றுபெயரிட்டு வணங்குகிறார்கள். மாடு மேய்க்கும் தொழிலாளி மாடுகளைக் காக்கும் மந்தையடி சுடலையாகி விடுவான். சலவைத் தொழிலாளி வெள்ளான் மாடன், குயவர்களின் சுள்ளையைக் காப்பவன் சுள்ளக்கரை மாடன், அம்பாசமுத்திர வட்டத்தில் வண்ணாத்தி இசக்கி வழிபடப்படுகிறாள்.

காரைக்கால் அம்மையார் பேயுருக்கொண்டது நெல்லை மாவட்டத்தில். அவரை பேச்சியம்மன் என்று வழிபடுகிறார்கள்.

சிறிய தெய்வங்களில் வழிபாட்டில் சாதிசமய பாகுபாடு இல்லை. பொய் சொல்லுதல், திருடுதல் போன்ற குற்றங்கள்குறைகின்றன. பதினெட்டாம்படி கருப்பன் முன் சத்தியம் செய்ய யாரும் பயப்படுவார்கள்.

சிறு தெய்வ வழிபாட்டால் பழந்தமிழ் கலைகள் வளர்கின்றன. சுடலை மாடன் கோவில் (கொடை) திருவிழாவின்போது கணியான் கூத்து நடக்கும் கணியான் என்ற இனத்தினர் இக்கூத்து ஆடுவர். இவர் கலைப் புலவர்கள் என்றும் சொல்லுவர், இந்தக் கூத்து பழந் தமிழ்நாட்டில் வழங்கிய சாக்கைக கூத்தாகும். பழங்கால சாக்கைக் கூத்தினை

எமது மனங்கனிந்த தீபாவளி திருநாள் வாழ்த்துக்கள்

ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா

இன்றைய சிறு தெய்வ வழிபாட்டினுள் காணலாம்.

இரண்டு 'கைகளை மடக்கி ஆடுவதைத் துணங்கைக் கூத்து என்று பழந்தமிழ்நாட்டில் கூறுவர். சுடலைமாடன் சாமியாடுபவர், கருங்கச்சையணிந்து சல்லடம் குல்லா தரித்து இரண்டு கைகளை மடக்கி அடித்து ஆடுவதை இன்றும் காணலாம்.

மெல்லிசை பழைய தமிழ்நாட்டின் கலையாகும். இதுவும் கொடை நாட்களில் நிகழும். இன்னும் நையாண்டி மேளம், உடுக்கை போன்ற கலைகளும் உண்டு. குலவையிடுவது, முளைப்பாரி எடுத்தல் போன்றவை சிறு தெய்வ வழிபாட்டிலுள்ளது. இவை உழவுத்தொழிலை அடிப்படையாகக் கொண்டவை.

சிறிய தெய்வங்களின் கொடையில் கிராமத்து மக்கள் அனைவரும் பங்குகொள்வர் மண்பாண்டதொழிலாளர் மண்பாண்டம் கொடுப்பார். நெசவுத் தொழிலாளர் புதியஆடைகளையும், தச்சுத் தொழிலாளர் சட்டங்களையும், 'உழவுத் தொழிலாளர் தானியங்களையும், பந்தல் போடுவோர் பந்தல்போட்டும் உதவுவர். கலைஞர்கள் கலையில் ஈடுபடுவர்.

கோயில்களில் கொடை, பங்குனி மாதம் முதல் ஆடி மாதம் வரையில் வெள்ளி செவ்வாக்கிழமைகளில் நிகழும். இரவு நேரமே ஏற்ற நேரமாம், இக்காலங்களில் சிறிய வரிவிருக்கும் உழவர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் ஓய்விருக்கும். மழையிருக்காது. சிறு தெய்வ வழிபாடு தமிழ் மக்களின் பழைய பண்பாடு, பழக்க வழக்கங்களின் தொடர்ச்சியாகும்.

பதினெண் சித்தர்கள்

பார்த்திடவே நந்தீசர் மூலத்தீசர் பண்பான அகத்தீசர் சட்டநாதர்
கோர்த்திடவே பதஞ்சலியும் கூனக்கண்ணர் கோரக்கர் கமலமுனி சண்டிகேசர்
கூர்ந்திடவே இடைக்காடர் சிவாயசித்தர் கொங்கணர் அவர்தந்தை போகநாதர்
காத்திடவே மச்சமுனி புண்ணாககீசர் காலங்கிசுந்தரா தேரையர் காப்பே.

எமது மனங்கனிந்த தீபாவளி திருநாள் வாழ்த்துக்கள்
திருமண பட்டு ஜவுளி ரகங்களுக்கு
கரணை
ஜவுளி மாளிகை
ராஜ வீதி - கோயமுத்தூர். போன்: 22881
Karana CLOTH PALACE

ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா

வன்னிமரத்து விநாயகர்

பல்வளம் செறிந்த விதர்ப்ப நாட்டில் ஆதேயம் என்ற ஒரு நகரம் இருந்தது. அந்நகரத்தில் வீமன் என்னும் பெயருடைய வேடனொருவன் வாழ்ந்துவந்தான்.

அவன் மிகக் கொடியவன். வழிபோக்கர்களை வழிமறைத்து இம்சித்து பொன்னும், பொருளும் அபகரித்து வந்தான்.

அவ்வூரில் சிவன் கோவில் ஒன்று இருந்தது சிவன் கோவில் திருவிழா என்றாலே மக்கள் கூட்டம் பொங்கி வழியும்

ஒருமுறை சில அந்தணர்கள் திருவிழாவைக் கண்டு களித்துவிட்டு. மனமகிழ்ச்சியோடு தங்கள் இல்லத்திற்குத் திரும்பிக்கொண்டிருந்தனர்.

வீமன் அவர்களைக் கொன்று அவர்களிடமிருந்த பொருள்களையெல்லாம் கொள்ளையடித்தான். அக்கணமே வீமனை பிரமஹத்தி தோஷம் பிடித்துக்கொண்டது. அதன் காரணமாக அவன் செய்த அப்பாபம் ஒன்று திரண்டு ஒரு கொடிய அரக்கனாக, உருக்கொண்டு அவன் எதிரிலே வந்து நின்றது.

அந்த அரக்கன் வீமனைப்பார்த்து சிங்கம்போல கர்ஜித்தான். அவ்வரக்கனைக் கண்டு வீமன் அஞ்சி நடுங்கினான் செய்தவறியாது திகைத்து, பின்பு பயந்தோட ஓடத் தொடங்கினான். அரக்கனும் வீமனைத் துரத்தலானான். வீமன் ஓடி ஓடி வெகுதொலைவிலிருந்த வன்னி மரத்தின்மீது வேகமாக ஏறினான்.

அவன் மரத்தின்மீது ஏறிய வேகத்தில் ஏற்பட்ட சலசலப்பினால் வன்னி இலை ஒன்று மரத்திலிருந்து உதிர்ந்து, அம் மரத்தடியிலிருந்த விநாயகப் பெருமான் விக்ரஹத்தின் மீது வந்து வீழ்ந்தது.

இதற்குள் அரக்கனும் வீமனைத் துரத்திக்கொண்டு வந்து மரத்தில் ஏறினான்.

அவனது கைபட்டு மற்றொரு வன்னி இலை உதிர்ந்து விநாயகப் பெருமானின் திருவடியில் வந்து வீழ்ந்தது.

மரத்தின்மீது ஏறிவிட்ட அரக்கனுக்கும் வேடனுக்கும் பயங்கரமான சண்டை மூண்டது. இருவரும் மரத்தின்மீது இருந்தவாறு கிளைகளை ஒடித்து, அடித்துக்கொள்ளலாயினர் இதனால் வன்னி மரத்திலுள்ள இலைகள் அனைத்தும் இவர்களால் உதிர்ந்து விநாயகப் பெருமான் மீது வீழ்ந்தவண்ணமாகவே இருந்தன

இறுதியில் இருவரும் கட்டிப் புரண்டு மரத்திலிருந்து உருண்டு கீழே விழுந்து விநாயகப் பெருமானின் காலடியில் உயிரிழந்தனர்.

அது சமயம் விண்ணிலிருந்து பொன் விமானமொன்று வந்தது. அவ்விமானத்தில் வந்த தேவகணத்தவர்கள் இருவரையும் விமானத்தி லேற்றிக்கொண்டு விநாயகரின் தேவலோகத்திற்குச் சென்றனர்.

விநாயகப் பெருமானுக்கு வன்னி இலையும் அருகம்புல்லும ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடிய புனிதமான பத்திரங்கள். முதற்கடவுளைப் போற்றி பணிபவர்களுக்கு எல்லா நன்மைகளும் ஏற்பட்டு நற்கதி பெற வழிகிடைக்கும்.

எல்லோருக்கும் எமது தீபாவளி தின நல் வாழ்த்துக்கள்

தங்க மெடல் பரிசு பெற்றது! காரம். மணம் கமழும்

பி. வி. ராஜன் அண் கம்பெனி

உயர்ந்த பட்டணம் பொடி

ஆர். எஸ். சுகந்த மூக்குத்தூள்

உபயோகியுங்கள்

அரக்கோணம் — மதருஸ்

ஸ்தாபிதம் : 1920

மற்ற பொடி தினுசுகளுக்கும், விபரங்களுக்கும் எழுதவும்

எங்களது மனமுவந்த தீபாவளி வாழ்த்துக்கள்

மாயவரம் R.S. கிருஷ்ணு & கோ

ஒரிஜினல் தென்னமரக்குடி எண்ணெ

கை கால்
சுளுக்கு, எலும்பு
முறிவு, சுளுக்கு-பிடிப்பு,
பித்த வெடிப்பு, மாட்டு
கழுத்து புண்
முதலியவைகளுக்கு

R.S. கிருஷ்ணு & கோ.
மாயவரம் — 609 001.

தொண்டு செய்தே திருவருள் பெறலாம்

அமரர் ஸ்ரீ சுவாமி சிவானந்தா

தன்னலமற்ற சேவையை யோகமாக செய்து பழகு. பக்தி செய் ஓம் அல்லது ராமநாம ஜபம் செய். நீ உடனே வேதாந்த சாதனைக்குச் சென்றுவிட முடியாது அது மிகவும் கஷ்டமானது தன்னலமற்றசேவையுடன் சாதனையைத் துவங்கு.

உன்னுடைய அண்டை வீட்டார் நோய்வாய்ப்பட்டிருந்தால் நீ ஆஸ்பத்திரிக்கு போய் மருந்து வாங்கி வந்து அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். துன்பத்தில் ஆழ்ந்த மனிதனைக் காணும்போது 'அவன் எனது சொந்த ஆத்மாவே' என உணரவேண்டும். சிவோஹம் என்ற வேதாந்த சூத்திரத்தை உச்சரித்தால் மட்டும் போதாது. துன்பப்படும் அவனுக்கு நீ ஒரு கோப்பைப் பால் கொண்டுவந்து கொடுக்க முடியுமா?

சமீபத்திலுள்ள ஆஸ்பத்திரிக்கு அவனை கொண்டு செல்ல இயலுமா? இதுபோன்ற செய்கைகள் உன் உள்ளத்தை இரக்கத்தால் நிரப்பும். நினைவுக்கெட்டாத காலம் முதல் மனிதன் பாவத்தால் இறுகிய மனதுடையவனாயிருக்கிறான். அது வெண்ணெய்போல் உருகவேண்டும்; அப்பொழுதுதான் பகவானின் அருளொளி கிட்டும். கருணை என்பது உயிருள்ள மூலாதாரமான சத்துவ குணமாகும். கடவுள் அருள் மயமானவர். நீ கடவுளிடம் இரண்டறக் கலக்க விரும்பினால் நீ கருணையுடையவனாக இருக்கவேண்டும். தன்னலமற்ற சேவை செய்யவேண்டும். சேவையுடன் உன்னுடைய செயல்கள் யாவற்றையும் தெய்வீகப்படுத்தி இடைவிடாது ராமநாமம் ஜபம் செய்துவா.

மந்திரம் சிறியதாயிருந்தால் மனம் ஒருமுகப்படுத்துதல் மகத்தானதாயிருக்கும் எல்லாவற்றிலும் கடவுளைக் காண்பாயாக. நீ உன்னுடைய பாதரக்ஷைகளுக்குக்கூட வணக்கம் செய்யலாம். செடிகளுக்குக்கூட அறிவு இருக்கிறது என்று

எமது மனங்கனிந்த தீபாவளி தின நல்வாழ்த்துக்கள்

●

எல்லாவிதமான தங்க நகைகள், வெள்ளி சாமான்கள் வாங்க நம்பிக்கையான இடம்

ஆனந்த் ஜுவல்லரி

99, பெரிய தெரு, திருவல்லிக்கேணி
சென்னை - 600 005

(கெல்லட் ஸ்கூல் சமீபம்)

ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா

சர் ஜே. ஸி. போஸ் கண்டுபிடித்துள்ளார். தன்னலமற்ற சேவை மூலம் எல்லாத் தடைகளையும் அகற்று. ராமநாம ஜபத்தைக் கைக்கொண்டு உனது செயல்களை தெய்வீகமாக்கி வாழ்க்கையின் லக்ஷியத்தை அடைவாயாக,,

நீங்கள் யாவரும் சாசுவதமான, ஒளிமயமான கடவுளின் குழந்தைகள், தற்சமயம் மாயையின் திரையினுல் சிறிதளவு மறைக்கப்பட்டிருக்கிறீர்கள். உனக்கு நம்பிக்கையும் அவாவுமிருந்தரல் கண்மூடி கண் திறக்கும் நேரத்தில் ஞானத்தின் மூலம, விசாரத்தின் மூலம், சேவையின் மூலம் மாயையின் திரையைக் கிழித்துவிடலாம்; இது தெய்வீக வாழ்க்கையாகும். இந்த வாழ்க்கையில்தான் நீ தெய்வீக ஒளியைக் காணமுடியும்.

எமதர்மராஜா சொல்கிருன்: எவனெருவன் தான் விவேகி என்று நினைக்கிருனே, அவன் மிகவும் அறியாதவன். உலகிலுள்ள இந்த சில விஷயங்களை மட்டும் வைத்து நீ திருப்தியுற்றவனுய், நீ பிரேயஸ் மார்க்கத்தில் மற்றவர்களையும் வழி நடத்த முயற்சிப்பது ஒரு குருடன் மற்ருெரு குருடனுக்கு வழிகாட்டுவதுபோலாகும். விவேகமுடையவனுக்கு இங்கு துன்பம்தான் உன்ளது இது பதஞ்சலி மகரிஷியின் அபிப்பிராயமாகும். உலக விஷயங்கள் யாவும் அமிர்தம்போல் தோன்றி முடிவில் விஷம்போல் துன்பமாய் முடிகின்றன என்பதை அந்த விவேகி காண்கிருன். நீ ஆத்மானுபூதி அடையும்பொழுதுதான் எல்லா விருப்பங்களும் திருப்தி படுத்தப்படுகின்றன.

> ஒரு தந்தை பன்னிரெண்டு பிள்ளைகளைக் காப்பாற்றுவார். ஆனுல், பன்னிரண்டு பிள்ளைகளுள், ஒருவனுல்கூட ஒரு தந்தையைக் காப்பாற்ற முடிவதில்லை.

அப்பொழுதுதான் மனது உண்மையாகவே சாந்தியை அடைகிறது. மனது அழிந்து போகிறது. அதுதன் மூலாதாரத்தில் ஒடுங்குகின்றது நீ சாசுவதமாக அனுபூதி பெற்ற ஆனந்தமயமாகிருய், தன்னலமற்ற தொண்டு செய்தே திருவருளைப் பெற்றுவிடலாம்.

நன்றி: தெய்வீக வாழ்க்கைச் சங்கம்
இராசிபுரம்

எமது மனங்கனிந்த தீபாவளி திருநாள் நல்வாழ்த்துக்கள்

●

உங்கள் வீட்டிற்குத் தேவையான எல்லாவிதமான
கண்ணுடி வகைகளுக்கும் மிகுந்த நமபிக்கையான இடம்

கிளாஸ் எம்போரியம்

356-A, கடை வீதி, சேலம்-1.

போன்—ஆபிஸ்: 2792 இல்லம்: 2085

ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா

ஓங்கட்டும் உரிமை வாழ்வு

கங்கை கடாரம் கொண்டோம் காவிரி நல்நா டரென்றோம்
அங்கை நிலமுமின்றி அல்லலுற்றோம் அந்தகராய் வாழ் திருந்தோம்
சிங்கத் தமிழரென்றும் சிந்தனையால் சீர்பெற்ற மாந்தரென்றும்
வங்கக் கடலலைபோல் நாமும் வாயாரப் பாடுகின்றோம்

சங்கம் வளர்த்த தமிழ் சதுராடிப் போனதிங்கே
எங்கிருந்தோ வந்தார்கள் ஏமாற்றி ஆழுகின்றார்
தங்க இடமு மில்லை தமிழர்க்த நிலமு மில்லை
பங்கமிலா தமிழணங்கு பரிதவித்து நிற்கின்றாள்

சொந்தமாய் நிலமுமின்றி சோற்றுக்கு வழியுமின்றி
நந்தமிழ் இலாமிங்கே நாயினும் கீழ்தாகச்
சிந்தனை சிறிதுமின்றி சீரழிந்து போனதையோ
வந்தனங் கூறிக்கூறி வயிற்றினை வளர்த்தது போதும்

அந்தமே இல்லாதிந்த அருந்தமிழ் மொழியைப்பேசி
மந்தமாய் வீழ்ந்திருக்கும் மாக்களே கேட்டிடுவீர்
தூங்கிடும் ஒரு கணமும் துன்பமே வளருதிங்கே
ஓங்கட்டும் உரிமை வாழ்வு ஒழியட்டும் அடிமை வாழ்வு.

—கவி. முத்து தாசன்.

ஒரு தாயின் தியாகம் மிகப்பெரியது. தாய் தன் குழந்தைக்கு தன் கண்ணை விளககாக்குகிறாள். கையைத் தொட்டிலாக்குகிறாள். ரத்தத்தைப் பாலாக்குகிறாள். ஆனால்,அவள் பெற்ற செல்வங்களிடம எந்தத் தியாகத்தையும் அவள் எதிர்பார்ப்பதில்லை.

∴ ∴ ∴

உலகில் நாட்டின் பெயரை குறிப்பிடாமல் தபால்தலை வெளியிடும் நாடு இங்கிலாந்து.

ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா

எமது மனங்கனிந்த தீபாவளி திருநாள் வாழ்த்துக்கள்

மீனு அப்பொழுதுதான் பம்பாயிலிருந்து திரும்பியிருந்தாள். அம்மா வீட்டிலிருந்து நாளைத்தான் வருவதாக இருந்தாள் அவள் தோழி ஷோபா பம்பாயிலிருந்து இன்று புறப்பட்டதால் அவளோடுசேர்ந்து கொண்டு துணையோடு புறப்பட்டு விட்டாள் கணவனுக்குக்கூட தன் வரவை இனிமேல்தான் ஆபீசுக்கு போன்மூலம் சொல்லவேண்டும்.

வேறு புடவை மாற்றுக்கொண்டாள். கணவனுக்கு டெலிபோன்

ஏ. எஸ். மூர்த்தி

பண்ணலாம் என்று நினைத்து டெலிபோன் ரிசீவரை கையிலெடுத்தாள்,

'பஸர்' சப்தம் ஒலித்தது.

கணவர் கோபிதான் வந்திருக்கிறாரோ என்று நினைத்துக்கொண்டு வாசற்கதவைத் திறந்தாள்

ஒரு பையன் சைக்கிளில் நின்று கொண்டிருந்தான்.

சார், இருக்காரா?

யார் நீ?

கல்சுரல் சொசைட்டியிலிருந்து வருகிறேன். ஐயாவைத் தேடிக் கொண்டு ஆபீஸ் போனேன். அவர் அங்கில்லை வீட்டிலிருப்பாரோ என்று வந்தேன்;

ஓஹோ! அவரிடம் என்ன வேண்டும்?

இந்த லெட்டரைக் கொடுத்து விட்டு, ரூ. 200 வாங்கிப் போக வேண்டும்.

சரி! லெட்டரைக்கொடு, வாங்கிக் கொண்டு தனதறைக்குப் போய், கடிதத்தைப் படித்தாள்.

டியர் கோபி,

இன்று இரவு, ஒரு ஷோ ஏற்பாடு செய்திருக்கிறோம். புது

பிலிம். அதில் நடித்திருப்பது ஒரு புது அழகி. அதில் அவளுடைய கவர்ச்சித் தோற்றங்களைக் காண லாம் நமது சொஸைடிக்கு முதல் விருந்தாக வருகிறது தலை முமல் வரவும். நேரம் இரவு பத்து மணி, பையன்வசம் டொனே ஷன் ரூ. 200 கொடுத்தனுப்ப வும். இது ஒரு அபூர்வ சந்தர்ப் பம். அந்த அழகியும் இக்காட்சி யில் கலந்துகொள்கிருள் என்பது குறிப்பிடத்தக்கது.

எஸ். மணி, அமைப்பாளர்.

கடிதத்தை மடித்து எடுத்துக் கொண்டு, பையனிடம் கொடுப்ப தற்குமுன்பு, ஆபீசுக்கு டெலிபோன் செய்தாள்.

பாஸ், வெளியே போய்விட்டு இப்போதுதான் வந்திருக்கிருர். லைன் கொடுக்கிறேன். என்று ரிசப் ஷனிஸ்ட் சிரித்துக்கொண்டே சொல்லிவிட்டு 'கனெக்ஷன்' கொடுத்தாள்.

ஹைய! மீனு எப்ப வந்தே? நாளைக் குத்தானே வர்றதாக சொன்னே?

ஷோபா புறப்பட்டு வந்தா! அவ ளோடே வந்துட்டேன்.

வெரிகுட். சாயந்திரம் சீக்கிரமே வந்துடுறேன்.

டெலிபோனை வைத்துவிட்டு, மீனு வாசலுக்கு வந்து பையனிடம் ஐயா, ஆபீஸிலே இப்போ இருக் கார். லெட்டரை அவரிடமே கொடுத்துவிடு. பணம் தருவார், என்று அனுப்பிவைத்தாள்.

என்ன அற்ப சந்தோஷம். கோபி யின் நடத்தை வரவர மிகவும் மோசமாவதை மீனு நன்கு உணர்ந் திருந்தாள். இரவு இரண்டு மணிக்கு வீடு வருவதற்கு இது தான் காரணமென்பதை தெரிந்து கொண்டாள்.

கோபி நல்ல பணக்காரர். மீனு வும் அதற்கு சளைத்தவளல்ல. அந்தப் பொருத்தம்தான் இருவ ரையும்சேர்த்துவைத்தது கோபிக்கு நல்ல உத்யோகம் வேறு. ஒரு கம் பெனியின் மேனேஜிங் டைரக்டர். மீனுவின் அப்பாவோ பம்பாயில் ஒன்றின் பார்ட்னர். ஒரு கெமிகல் சொந்தமாக நடத்திவருகிருர். கோபி—மீனு தம்பதியருக்கு குழந் தைச் செல்வம் இன்னும் கிடைக்க வில்லை.

அனைவருக்கும் எங்களது தீபாவளி நல் வாழ்த்துக்கள்

மாலையில் சீக்கிரமே வந்த கோபி, மீனுவோடு அளவுக்குமீறி, அன்போடு பழகினான். பம்பாயில், அவள் குடும்ப சௌக்கியத்தைப் பற்றி விசாரித்தான். இன்று இரவு இரண்டு பேரும் ஹோட்டலில் சாப்பிடுவோம் என்று குஷிப்படுத்தினான்.

மீனுவுக்கு இதெல்லாம் எதற்கென்று தெரியும்! இரவு புளூபிலிம் பார்க்கப் போகப்போகிறான். அதற்கான முஸ்தீபு இது.

அவன் விருப்பம்போல, அவள் நடந்தாள். இரவு 9-30 மணிக்கு, சாப்பாட்டுக்குப் பிறகு, மீனு! கல்கத்தாவிலிருந்து ஒரு பிசினஸ் பார்ட்டி வந்திருக்கிறது. அவர்களுடன் அவசரமாகப் பேசவேண்டியிருக்கிறது வர இரவு நேரமாகும். நீ படுத்துக்கொள், என்று சொல்லி அவளை அன்போடு அணைத்துக் கொள்கிறான்.

டாடா சொல்லிவிட்டு பெசண்ட் நகரை நோக்கிப் பறந்தான் கோபி.

கணவன் இரவில் நேரங்கழித்து, சமயத்தில் வராமல் இருப்பது, எல்லாவற்றுக்கும் காரணம்புரிந்து கொண்டாள். இதுபோல் கல்சுரல் சொசைட்டிகள் எத்தனை, நாட்டை குட்டிச்சுவர் ஆக்குகின்றனவோ! இவரைத் திருத்த 'முள்ளை முள்ளாலேயே'தான் எடுக்க வேண்டும். எப்படி?

ஃ ஃ ஃ

மாதங்கள் ஆறு ஓடின.

பெசண்ட் நகரில் ஒரு பங்களா. கலாசாரத்திற்கு குழி தோண்டி புதைத்து வரும் சமாதி அதுதான் இரவு பத்து மணி பெரிய இடத்து மைனர்கள், பணக்கார கிழவர்கள், ஆகியோர் நிறைந்திருந்தார்கள். அதில் கோபியும் ஒருவன். அது ஒரு புது அழகி நடித்தபடம். ஆபாசமென்றால் ஆபாசம், கொள்ளை ஆபாசம். ஒவ்வொருவரும் ரூபாய் 300 கொடுத்து ரிசர்வ் செய்திருந்தார்கள் அன்றுதான் படம் ரிலீஸ். பணக்காரர்கள் வாயில் மேல்நாட்டு மது வாசனைகள்.

மிஸ்டர் கோபி! இப்படி வாங்க! என்று அமைப்பாளர் தனியே அழைத்துச் சென்றார்.

தயவுசெய்து இந்தப் படத்தை நீங்கள் பார்க்க வேண்டாம். வீட்டுக்குப் போங்கள்.

நான் கிளப்பில் ஒரு மெம்பர். என்னை நீங்கள் தடுக்கமுடியாது.

சரி! எனக்கென்ன? அப்புறம் வருத்தப்பட வேண்டாம் என்று சொல்லிவிட்டு, கோபியையும் படம் பார்க்க அனுமதித்தார்.

படம் ஓடிற்று மீனு தோன்றினாள். அங்கங்களைத் தனித்தனியே ஆட்டினாள். துணியை ஒவ்வொன்றாக அவிழ்த்தாள். அங்கங்களை சேஷ்டை செய்தாள். உடலில் கடைசி சால்வை துணிதான் பாக்கி. பணக்காரர்கள் வாயில் ஈ போனது கூட தெரியாமல் படம் பார்த்துக் கொண்டிருந்தனர்.

கோபிக்கு ஆத்திரம். ரத்தம் கொதித்தது மீனு என்று அலறிக் கொண்டு வெளியேறினான் படம் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் ஏளனமாகச் சிரித்தனர்.

காரை எடுத்துக்கொண்டு வீட்டுக்குப் பறந்தான். அலமாரியில் இருந்த பிஸ்டலை எடுத்துக் கொண்டு, மீனு என்று கத்திக் கொண்டு ஓடினான். படுக்கையறையில் நுழைந்தான. மீனு கட்டிலில் படுத்திருந்தாள் மீனுவை அலாக்காக தூக்கி நிறுத்தினான்.

YOU

CAN

TRUST

TVS"

We're not saying it

our customers are:-

Ask the Governments Departments—
both Central and State — and
Public Sector undertakings
who come to us.
Ask truck operators in Andhra Pradesh,
Karnataka, Kerala & Tamilnadu

Ask the car owners why they prefer TVS

You'll find they all say:
You can trust TVS.

YOU CAN TRUST TVS

T V Sundram Iyengar & Sons Ltd.
Madurai & Branches

உனக்குப் பணத்துக்கு பஞ்சமா? கணவன், சுகவாழ்வு, பங்களா, செல்வாக்கு, கார், வேலையாட்கள் இவைகளுக்கு குறைவா? திமிர் பிடித்துப்போய், உன்மேனியழகை உலகத்துக்குக் காட்ட புளுபிலிமில் நடிக்கிறாயா? இந்த அழகு இனி வாழவே கூடாது. நீ ஒழிந்துபோ. என்று பிஸ்டலை மீனுவின் நெற்றியில் வைத்து அழுத்தப் போனான்.

என்ன...என்ன இது? ஏதேதோ பிதற்றுகிறீர்களே? நானாவது புளுபிலிமிலாவது.........நடிப்பதாவது? என்று ஒன்றும் புரியாதவள்போல் பேசினாள்.

எங்கு சென்று வந்தீர்கள்? இந்த நடுஇரவில் ஏன் இப்படி பிதற்றுகிறீர்கள்? என்றாள் மீனு.

கோபிக்கும் மீனுவுக்கும் வாக்குவாதங்கள் முற்றின.

அத்தான், கொஞ்சம் பொறுங்கள். உங்கள் மனைவியை போன்ற ஒருவளை நிர்வாணமாகப் பார்க்கவே உங்களுக்கு எவ்வளவு கோபம் வருகிறது? எத்தனையோபேர்கள் உட்கார்ந்து ரசித்துப் பார்க்கும்போது உங்கள் ரத்தம் கொதிக்கிறதே? பாவம்! எத்தனை பெண்கள் வறுமையில் தங்கள் உடலை பலருக்குக் காட்டி வயிறு வளர்க்கிறார்கள். இந்த அற்ப சந்தோஷத்துக்கு ஆட்பட்டு விட்டீர்களே! உங்களுக்கு இந்த கெட்ட பழக்கம் எவ்வளவு காலமாக இருக்கிறது?

உன் உபதேசம் எனக்குத் தேவையில்லை. நீ ஒழிந்து போ! என்று கத்தினான்.

கோபிக்கும் மீனுவுக்கும் வாக்குவாதம் முற்றி எப்போதும் மீனுவை சுட்டுவிடும்படியான நிலை உருவாகியது.

சிறிதும் தாமதியாது, மீனு, காந்தா நீ கொஞ்சம் வெளியே வா. என்று குரல் கொடுத்தாள். இத்தனை அமளிதுமளிகளையும் கண்டும் காணாததுபோல் திரைமறைவில் நின்றிருந்த காந்தா திரையை விலக்கிக்கொண்டு வெளியேவந்து நின்றாள்.

மீனு மாதிரியே தோற்றமளித்த காந்தாவைக் கண்டு சற்றுநேரம் திகைத்தான். கோபியின் கோபம் சற்றுத் தணிய ஆரம்பித்தது. பிஸ்டலை மீனுவின் நெற்றியிலிருந்து விலக்கினான். மீனு பேசினாள்.

அத்தான்! காந்தா ஒரு காபரே நடனக்காரி. நானும், ஷோபாவும் தேடோதேடென்று தேடி, அசல் என்னைப்போல இருக்கும் இவளைக் கண்டுபிடித்தோம். இவளைக் கொண்டு உங்களுக்கு புத்திவரச் செய்யவேண்டுமென்று முடிவெடுத்தோம்.

நானே காந்தாவுக்குப் பணம் கொடுத்து, படமெடுக்கும் செலவையும் ஏற்றுக்கொண்டு, இந்த புளு பிலிம்மை தயாரித்தேன் வேறு ஆள் மூலமாக கல்சுரல் சொஸைடிக்கு பிலிம்மை அனுப்பினேன். உங்களுக்குக் கோபம் வந்து பிஸ்டல் அளவுக்குப் போகுமென்பதை தெரிந்தே செய்தேன். அதற்காக காந்தாவையும் வைத்திருந்தேன்.

இனிமேல் இந்த புளுபிலிம் பார்ப்பதை அடியோடு ஒழியுங்கள். பெண்களை நிர்வாணமாகப் பார்ப்பதையும், அவர்கள் செய்யும் அங்க சேஷ்டைகளை ரசிப்பதையும் விட்டொழியுங்கள். இதெல்லாம் அற்ப ஆசைகள். உங்கள் சகோதரி, தாய் ஆகியவர்களை உங்களால் இந்தக் கோலத்தில் பார்க்க முடிகிறதா?... ம்...சொல்லுங்கள்,

கோபி கையிலிருந்த பிஸ்டல், அருகிலிருந்த சோபா மீது 'பொத்' தென்று விழுந்தது.

சபாஷ்... ஒன்ஸ்மோர்...லெக்சர் பிரமாதம் என்று உள்ளே நுழைந்தாள் ஷோபா.

கோபி தலைகுனிந்தான்.

அமிர்தாஞ்சன்

தலைவலி, உடல்வலி, சுளுக்கு இவற்றிலிருந்து
உடனடி நிவாரணம் பெற இல்லந்தோறும் இருக்க
வேண்டிய ஒரு நல்ல மருந்து

1984 ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கும்
இந்திய விளையாட்டு வீரர்களுக்கு அதிகாரபூர்வமாக
பெய்ன்பாம் சப்ளை செய்வோர்

வடபழனி ஆண்டவனே போற்றி

— சௌந்தர கைலாசம் —

பூவந்து தவம்புரியும் புனிதா உன்றன்
பொன்னடியைப் பொருந்திமிகப் பொலிவ தற்கு!
பாவந்து தவம்புரியும் பழுத்த ஞான
பண்டிதனே உன்செவியில் படுவதற்கு!
நோய்வந்து நான்நலிந்து படுத்தேன்; கோயில்
நுழையாம லேகிடந்து தவித்தேன்; இன்று
வரவந்து பாரென்று வாய்ம லர்ந்தாய்!
வடபழனி ஆண்டவனே போற்றி! போற்றி!

குன்றிலிருந் தாடுகின்ற குமரா! எங்கே
கோயில்கொண் டிருந்தாலும் உன்னைக் காண
அன்றிலிருந் தின்றுவரை ஓடிஓடி
ஆசையுடன் வருகின்ற என்றனுக்கு
நின்றுவரு கின்றாய்நீ நிகரில்லாத
நிச்சயமாய்! அற்புதமாய்! உனைநம் பாத
மன்றிலிருந் திதையெவரும் மறுத்த போதும்
வடபழநி ஆண்டவனே வருவாய் போற்றி.

தன மூலிகை

வாசக நேயர்களின் சுபிட்சத்துக்காகவும், தரித்திரம், கஷ்டம், துன்பம், நோய், சத்துரு தொல்லையிலிருந்து விடுபட்டு, சர்வ சித்தி, தன சமர்த்தி, நினைத்த காரியத்தில் வெற்றி, அதிருஷ்ட தேவதையின் கிருபையை அடைந்து மேன்மை அடைய மகா அபூர்வ வன மூலிகைகளை சித்தர்கள் வழங்கி அருளாசி புரிகின்றார்.

விபரம் வேண்டுவோர் 60 காசு ஸ்டாம்புடன் தொடர்பு கொள்க, மகா நீல பானு மூலிகைக்கு ரூ 25-00 மணியார்டரில் அனுப்பிப் பெறலாம். ஜோதிஷ சம்பந்தமான எல்லா விஷயங்களுக்கும் தொடர்பு கொள்ளவும்.

பிரபல ஜோதிஷர் காழியூர் ஜி. வாசு தேவாச்சார்யார்,
பிட்றகுண்டா, P. O., P. C. 524 142 A. P.

எழுத்தாளன் யார்?

—மராத்திய எழுத்தாளர் காட்கில்—

சமுதாயத்தில் சம்பவிக்கும் அன்றாட நிகழ்ச்சிகளில் அக்கறை காட்டாமல் கற்பனை உலகில் நடமாடி வருகிறார்கள் என்று பெரும்பாலான எழுத்தாளர்கள் மீது குறை கூறப்படுகிறது. அவர்கள் ஒன்றை மறந்து போகிறார்கள். எழுத்தாளர்கள் செய்தி பத்திரிகை ஆசிரியர்கள் இல்லை.

எழுத்தாளர்கள் சமூகநோக்கு உடையவர்களாக இருத்தல் வேண்டும் என்பதில் நான் வேறுபட்டு நிற்கவில்லை. சமகால சம்பவங்களை அலட்சியப்போக்கில் கொள்பவர்களுக்காக நான் வக்காலத்தும் வாங்கவில்லை. ஆனால், அவர்கள் அன்றைய பிரச்சனைகளுக்கு தீர்வு சொல்லியே ஆகவேண்டும். அந்தப் பாதிப்பைத் தன் எழுத்தில் காட்டியே தீரவேண்டும் என்பதை என்னால் (புரிந்துகொள்ள முடியவில்லை.

கால நடப்புகள் காலத்தாழ்ந்தே கவனிக்கப்படுகிறது. உலகப்புகழ் பெற்ற நாவலான டால்ஸ்டாய் எழுதிய War and Peace சமகாலச் சம்பவத்தை மையமாகக்கொண்டதில்லை. டால்ஸ்டாய் தன் காலத்தில் இருந்து எழுபது ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த நடப்பை அடிப்படையாகக்கொண்டே அதை எழுதினார். இப்படி எத்தனையோ உதாரணங்களைச் சொல்லமுடியும்.

ஓர் எழுத்தாளன் தனிமனித பிரச்சினையை எடுத்து அலசுகிறான். அதன் மூலம் சமுதாயத்திற்கு வருகிறான்.

அவன் தன்னை ஆழமாகப் பாதிக்கும் பிரச்சனையையே தொடுகிறான். சில அவனைத் தொடாமல் போனால் அது அவனுடைய தப்பல்ல.

உலகப் புகழ் பெற்ற ஸ்ரீகணேஷ்ராம்ஸ் 777 பிராண்ட்
உணவுப் பொருள்கள் உங்கள் அருகாமையில் உள்ள
கடைகளில் இப்பொழுது கிடைக்கிறது.

- திடீர் புளியோதரை பேஸ்ட்
- திடீர் வத்தல் குழம்பு பேஸ்ட்
- திடீர் மிளகு ரசம் & தக்காளி ரசம பேஸ்ட்
- டாம-எக்ஸ் (TAM-EX) &
- கார்லிக்ஸ் (GARLIX)
- கரகரப்பான, முறுமுறுப்பான அப்பளம் மற்றும் ஊறுகாய்

(REGD)

ஸ்ரீ கணேஷ்ராம் & கோ.,
சென்னை - 600 001. போன் : 20401 & 20402

ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா

திருமந்திரம் கூறும் பிராணாயாமம்

புலவர் தே. ப. சின்னசாமி, M.A., B.Ed. R. I. M. P.

உடம்பார் அழியில் உயிரார் அழிவர். அதனால் உடம்பை வளர்த்து உயிர்வளர்த்தேன் என்பார் திருமூலர். உடம்பையும் உயிரையும் வளர்க்கும் உபாயமாக உயிர்ப்பை முன்னிருத்துகிறார். உயிர்ப்பாவது சுவாசிப்பது பிராணாயாமம். மூச்சுப் பயிற்சியினால் (பிராணாயாமத்தால்) உண்டாகும் நன்மை அளவிடற்கரியது. உள்ளம் ஒருமை பெறுகிறது உயிர் திண்மை பெறுகிறது. உடல் நோயற்ற இளமை பேற்றைமாறா இளமையை அடைகிறது. எண்ணிய எண்ணியாங்கெய்தும் திண்ணிய உள்ளம் அமைகிறது, அவனருளால் அவன் தாளடைய ஞானத்திற்கு வழி கூட்டுகிறது.

நமது முன்னோர்கள், சித்தர்கள், தெள்ளத் தெளிவாக எடுத்தியம்பியுள்ளனர் பரமேசுவரன்பார்வதிக்கு அருளிய ஞானசரல் நூல், திருமூலர் திருமந்திரம், சிவவாக்கியர் முதலான சித்தர் பாடல்கள் யாவும் இதனையே வலியுறுத்துவனவாம்.

ரஷியக் கட்டுரைப்படியுள்ள முறையில் உடல்நலம் பற்றி மட்டுமே பயிற்சி எடுத்துக்காட்டப்படுகிறது. தட்டிக் கொடுப்பது. தடவிக்கொடுப்பது, காற்றை வெளிவிடுவது இருத்துவது, இழுப்பது எல்லாம் இயல்பாக இன்றி செயற்கையாக வற்புறுத்தப்படுகிறது.

இந்திய முறை உயிர்க்காற்றை இயல்பாக I. உயிர்த்து, 2 அடக்கி, 3. விடுவது என்ற மூன்றுபடி நிலை உடையது.

நீண்ட ஆயுளுக்கு

உயிர்ப்பே உயிர், உயிர்ப்பு (சுவாசிப்பது) அடிப்படையில்தான் அனைத்துயிர்களுக்கும் ஆயுள் அமைகிறது விரைந்து உயிர்க்கும் உயிர்களுக்கு ஆயுள் குறைவு. ஆடு, மாடு, நாய் ஆகியவைகளின் உயிர்ப்பு (வாங்கிவிடுவது) வேகமாக இருப்பதால் குறைந்தவயதில் இறக்கின்றன. மெல்ல உயிர்த்து, இழுத்து. இருத்தி மெல்ல வெளியிடும் உயிரினங்கள் நீண்டநாள் நூறு ஆண்டுகள்வாழ்வதைக்காணகிறோம். மனிதன், யானை, ஆமை இதிலடங்கும்.

நோயற்று நெடிது வாழவே உயிர்ப்பு : "முன்னைக் காலங்களில் இருந்து அறிவுடை மககளிற்பலரும் காற்றை பிடிக்கும் முறையில் இடையறுது பழகி வந்தவர்களாதலால். அவர்கள் நீண்ட நாள் உயிர் வாழ்ந்து அறிவிலும், அன்பிலும் மேம்பட்டு இறைவன் திருவருட் பேற்றை யெய்தினர்" என்பார் மறைமலையடிகளார்.

மூன்று நாடிகள்

மூன்று நாடி, முக்கலை, நமது உடம்பிலுள்ள 72 ஆயிரம் நரம்பு

எமது மனங்கனிந்த தீபாவளி திருநாள் நல்வாழ்த்துக்கள்



உங்கள் வீட்டிற்குத் தேவையான எல்லாவிதமான பீரோக்கள
கட்டில்கள், மேஜை, ஸ்டீல சோபா, டைனிங் டேபிள் மற்றும் ஆபீஸ
உபயோகத்திற்கான சாமான்கள் யாவும் நேர்த்தியான முறையில கிடைக்கும்
நம்பிக்கையான ஸ்தாபனம்.

கிளை : 162, அவினாசி சாலை, கோவை-641 018.

ளும். பத்தில் அடங்கும் என்பர் முன்னோர்கள் (தசநாடி) பத்தும் மூன்று நாடியில் ஒடுங்கும். சந்திர நாடி மூக்கின் இடதுபக்கம் பொருந்தியுள்ளது. முறையே இடகலை, பிங்கலை, (சிவம். சக்தி) என்பர் நெற்றியில் புருவநடுவில் இவை சந்திக்கும் சுழுமுனை (நாடி) என்பர்

பூரணம்—ஆண்; சூனியம்—பெண். நமது முன்னோர் உயிர்ப்பு முறையில் உறுபயன் கண்டு தெளிந்து கூறியுள்ளனர். திருமந்திரத்தில் திருமூலர் தனி அதிகார இயல் வகுத்து இயம்பியுள்ளார். ஏற்றி யிறக்கி இருகாலும் பூரிக்கூங் காற்றைப் பிடிக்குங் கணக்கறிவாரில்லை காற்றைப் பிடிக்கும் கணக்கறிவாரில்லை, காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாளர்க்குக் கூற்றையுதைக்குங் குறியதுவாமே. வளியினை வாங்கி வயத்தில் அடக்கிற பளிங்கொத்துக் காயம் பழுங்கினும் பிஞ்சாம்" என்பார் திருமூலர்.

மூன்று நிலையில்

மூன்று நிலை: மூச்சுப் பயிற்சி பிராணயாமம் மூன்று நிலையில் அமைகிறது. பத்மாசனத்திலமர்ந்து முதுகுத்தண்டு வளையாமல்நிமிர்ந்து பயிற்சி செய்தல் வேண்டும் வலது மூக்கில் காற்றை இழுத்து உட்கொண்டு இருத்தி இடமூக்கில் மெல்ல விடுதல் வேண்டும். இடப்பக்கம் இழுத்து வலப்பக்கம் விடுதல் வேண்டும். இது ஒரு பயிற்சி.

இழுத்து—உயிர்த்து உடனே வெளியிடுதல் ஒருநிலை. உயிர்த்து இருத்தி வெளியிடுதல் இரண்டாவது நிலை. காற்றை வெளியேற்றி நுரையீரலை வெறுமையாக்கி பின் உட்கொள்ளுதல் (ரஷ்ய முறை) மூன்றாவது நிலை. பயிற்சி பெறுவோர் - முதல் நிலையில் தொடங்கி மூன்றும் நிலையில் நிறைவு பெறுதல் சிறப்பு.

4 விநாடி உயிர்ப்பை இழுத்து 4 விநாடி இருத்தி, 4 விநாடி விட்டால் 50 ஆண்டு வாழலாம். நான்கு விநாடி இழுத்து, எட்டு விநாடி இருத்தி, ஆறுவிநாடி விட்டால் 70 வயது வாழலாம் நான்கு விநாடி இழுத்து, பதினாறு விநாடி இருத்தி, எட்டு விநாடிகளில் விட்டால் 100 வயது வாழலாம் என நமது ஆன்றோர்கள் வகுத்துள்ளனர். எந்த அளவு உயிர்ப்பை, உயிர்க் காற்றை உள்ளே இருத்தி அடக்கி விடுகின்றோமோ அந்த அளவு நீண்ட ஆயுள் அமைகிறது.

பிராணயாமத்தின் உயிர்க் கருத்தே இதுதான். உடல் நலத்தைப் பேண விரும்பினால் சரியாக மூச்சு (விட அல்ல) அடங்கிப் பழகி கொள்ளுங்கள் என்பதே இந்த விளக்கத்தின் நோக்கமாகும் வளியினை வாங்கி வயத்தில் அடக்கிற பளிங்கொத்துக்காயம் பழுக்கினும் பிஞ்சாம், என்ற திருமூலர் மந்திரத்தைப் போற்றுவோம்.

மிகுந்த தயக்கத்திற்குப் பின் ஒருவர் உறுதிமொழி கொடுக்கிறார் என்றால் அதை அவர் நிச்சயம் நிறைவேற்றுவார் என்று நம்பலாம்.

—ஜான் ஜாக் ரூசோ.

∴ ∴ ∴

இளமை, வாழ்க்கையின் அற்புதமான இனிமையான பருவம்தான். ஆனால் நாம் ஏன்தான் இளைஞர்களை அவர்களுடைய இளமைப் பருவத்தை அனுபவிக்கவிடாமல், எதிர்காலத்தைப்பற்றி சிந்திக்கச் சொல்லுகிறோமோ. தெரியவில்லை.

—ஆல்பர்ட் ஃபரி,

அனைவருக்கும் எங்களது தீபாவளி நல்வாழ்த்துக்கள்

நெய்யினால் தயாரிக்கப்பட்ட இனிப்பு
வகைகளுக்கு

ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்

திவான் பகதூர் ரோடு

R. S. புரம், கோயமுத்தூர்-2

போன் : 24733

நர்சரி தந்தையின் நல்வாழ்த்துக்கள்

நர்சரி பள்ளிகளுக்கெல்லாம் முன்னோடியாக
செயலாற்றிவரும்
எவரெஸ்ட் குழந்தை பள்ளியின் ஸ்தாபகர்

திரு. ஆர். ஆர். அய்யர்

குழந்தை உலகிற்கு தன்
அன்பு தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார்.

●

EVEREST CHILDREN SCHOOL

117, BIG STREET, TRIPLICANE, MADRAS-600 005.

பாவம்-சம்பளம்-மரணம்

டாக்டர் எம். சந்தோஷம்

ரணத்தினின்று விடுதலை!

ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள் ரப்பட்ட வசனம் மூன்று பதங் ளைக்கொண்டது.

1. பாவம், 2. சம்பளம், . மரணம். இம்மூன்று பதங்களும் சேர்ந்து பூரண அர்த்தமளிக்கின் றன. ஆனால் இவைகளுடன் இவ் வசனத்தில் பின்னுள்ள பகுதியை இணைத்தால்தான் இம்மூன்று பதங் களில் அடங்கியுள்ள போதனை பரி பூரணம் அடைந்து முழுவிளக்கம் தருகின்றது.

எல்லோருக்கும் மரணம் பொது வானது எல்லோருக்குமே மரணம் உண்டென்றால், பாவத்தின் சம் பளம் என்பதின் பொருள் என்ன?

பாவம்: இது மனிதனின் தன்மை தன் முன்னோர்களிட மிருந்து மனிதன் சுதந்தரித்துக் கொண்ட தன்மைகளில் ஒன்று பாவம். விவிலியத்தில் தாவீதின் சங்கீதத்தில் தாவீது என்னும் கவி அரசர் பெரும்பாவத்தில் சிக்கின சூழ்நிலையில் இவ்விதமாக அச்சுறுத் துகிறார்.

அவர் பாடியது: என் தாய் என்னை பாவத்தில் கர்ப்பத்தரித் தாள். மனித உடலுக்கும் இதர உயிரினங்களுக்கும் எந்த வேற்று மையுமில்லை. மனிதனுக்கு உயிர் இருக்கிறது. அதுவும் எந்தப் பிராணிக்கும் உண்டான உயிர் போன்றது. உடலின் உறுப்புகளும், அணுக்களும், ரசாயனப் பொருள் களும உயிரைக் காப்பாற்றுகின்றன உயிர் உடலைக் காப்பாற்றுகிறது.

ஒன்றோடொன்று தொடர்பு கொண்ட உடலும் உயிரும் ஒன்றை விட்டு ஒன்று அகலுவதே மரணம்.

இவையெல்லாம் மனிதன், மிரு கம், பறவை மீன் இனங்களுக்கும் பொருந்தும் பொதுவான அம்சங் களாகும இந்த இரண்டு அம்சத் திற்கு அப்பாற்பட்ட ஒன்று மனித னில் மாத்திரம் செய்வதை நாமெல் லோரும் அறிவோம். அது சிருஷ் டிப்புகளில் மனிதனில் மாத்திரம் இருந்து இயங்குவது. அதுவே உள்ளம்.

உள்ளத்தில், இரக்கம், தயவு, நட்பு என்ற நற்குணங்களும் கோபம், 'பகை, பொறாமை என்ற கெட்ட குணங்களும், துக்கம், மகிழ்ச்சி என்ற உணர்ச்சிகளும்

அடங்கியுள்ளன. உயிரும் உள்ளமும் சேர்ந்தது ஆத்துமா. மனிதன் உருவாக்கப்பட்ட முறையை விவிலியம் வர்ணிக்கின்றபோது கடவுள் மனித உடலை உலகப்பொருள்களால் உண்டாக்கி, தன் சுவாசத்தை அவனது நாசியில் ஊதினார் அவன் ஜீவ ஆத்துமாவானான் என்று கூறப்படுகின்றது.

சாதாரண உயிர் பிராணியாகாமல் உயிருள்ள உள்ளங்கொண்ட ஆத்துமாவானான். தீய செயல்கள் மனித உள்ளத்தில் உருவாகின்றன. அதுதான் பாவம். பாவம் ஆத்மாவில் ஏற்படும் நோய், முதல் மனிதன் பாவம் செய்தபோது கடவுள் அவனுக்குக் கொடுத்த சாபம் (*விவிலியத்தின்படி*) *நீ* மண்ணாயிருக்கிறாய் மண்ணுக்குத் திரும்புவாய் (ஆதி).

சம்பளம் : ஒரு செயலுக்குப் பதிலாக பெற்றுக்கொள்வது சம்பளம். நல்ல செயலுக்குக் கிடைப்பதுமுன்னேற்றத்தை ஏற்படுத்தும் பரிசு வழங்கப்படுவது போலாகும். தீய செயல்களுக்குப் பதிலாகக் கிடைப்பதுவோ மரணம்.

மரணம் : மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய் என்ற சாபம் உலகப் பொருள்களில் உருவாக்கப்பட்ட உடலுக்கு மாத்திரம் தான் பொருந்தும். உடலிலிருந்து உயிர் பிரிவுமென்பதே சாபம். உள்ளத்தின் உயிர், உடல் மரணமடைந்த பின்பும் வாழக்கூடும். உடல் நிச்சய மரணத்திற்குள்ளானது. உடல் மரணமின்றி தப்பமுடியாது. ஆனால் ஆத்மா மரணமற்றதாக இருக்கக்கூடியது.

இதர உயிரினங்களுக்கும். மனிதனுக்கும் வேற்றுமை அளிக்கும் உயிர்வாழும் உள்ளம் அல்லது ஆத்மாவுக்கு உறுதிமரணம் கிடையாது. இவ்வசனத்தின் மறுபாகம் நித்திய ஜீவனைக் குறிக்கிறது. மனிதனின் உள்ளம் பாவத்திலிருந்து விடுதலை பெற்றால் பாவத்தின் சம்பளமாகிய மரணம் அந்த உள்ளத்தைத் தாக்

14683

எங்களது மனமுவந்த தீபாவளி வாழ்த்துக்கள்

லக்ஷ்மி

மாவரைக்கும் இயந்திரங்கள்

21 வருட உன்னதமான சேவை

ஸ்ரீ லக்ஷ்மி இண்டஸ்ட்ரீஸ்

25, தேவாங்க ஹைஸ்கூல ரோடு

கோயமுத்தூர்-641002 போன் 31689

தயாரிப்பாளர்கள்



ஏற்றுமதியாளர்கள்

CASI

ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா

காது. ஏனென்றால் அது பாவத்திலிருந்து மன்னிப்புப் பெற்று பாவத்தின் சம்பளமாகிய சாபத்திலிருந்து தப்புவிக்கப்படுகிறது.

அந்தவிதமான விடுதலையைப் பெற்ற உள்ளம் சாவாமையை பெறுகின்றது. நித்தியகாலமாகத் தன்னைப் படைத்தவருடன் மகிழ்ச்சியுடன் வாழ்கின்றது. பூத உடலின் மரணத்திற்குப்பின் நித்திய வாழ்வுண்டு என்பது கிறிஸ்துவ நம்பிக்கை. நித்திய மரணத்திலிருந்து விடுதலை பெறுவது கடவுளால் அருளப்படும் கிருபை, அந்த தெய்வீக கருணையாகிய சுபாவ பாவத்திற்கு சம்பளமாகிய நித்திய மரணத்தினின்று விடுதலையை அல்லது நித்திய மரணத்தினின்று மீட்பைப் பெறுகின்ற தெய்வக்கருணையை மனிதனுக்கு சம்பாதித்து வைத்துப் போனவர் கிறிஸ்து.

பாவத்தின் மரணம் உடல் மரணம், கடவுளின் கிருபை வரத்தால் ஆத்மா நித்ய மரணமான சாபத்தினின்று விடுதலை பெற்று, சாவாத்தன்மை படைத்த புது உடலைப் பெற்று நித்திய வாழ்வைப் பெறக்கூடும், இதுவே கிறிஸ்துவ வேதத்தின் போதனை!

உலகம் புரிகிறது

ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன்

வெறுத்த தெல்லாம் பரலெனவே
வெகுளியாக வாழ்பவர்க்கு
வெளியுலகம் என்றுமிங்குத் தொல்லையே—அந்த
வெள்ளைமனம் கொள்வதின்பம் இல்லையே!

அண்ணன் தம்பி பாசமென்ன
நண்பனென்ற நேசமென்ன
அத்தனையும் பணமிருந்தால் சேருமே—இல்லை
சொத்துசுகம் இழந்துவிட்டால் யாருமே!

போற்றுகின்ற வார்த்தை யென்ன
ஏற்றிவைத்த உயர மென்ன
காற்றடித்து சாய்ந்துவிட்டால் வாழ்வில்—நம்மை
தூற்ற இங்குச் சுற்றம்வரும் எதிரிலே

காரியங்கள் ஆகும்வரை
கால்பிடித்துக் கைபிடித்துக்
கழுதையினைத் தூக்கிவைப்பார் உலகிலே—கதை
முடிந்தபின்னே இருப்பதில்லை நினைவிலே.

ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா

எல்லோருக்கும் எமது தீபாவளி தின நல் வாழ்த்துக்கள்

எல்லா பண்டிகை நாட்களுக்கும்
விசேஷங்களுக்கும் எப்பொழுதும்
ராசியான இடம்

கீதா

பட்டுப் பகுதி
ஏர் கண்டிஷன்
வசதியுடன்

கீதா சில்க் & சாரி பஜார்
31, N.S.C. ரோடு, திருச்சி 620002
Ph. 24410 TEL: DELIGHT

நாமக்கார தாத்தா

ஏ. எஸ். எம்.

திடீர் நகர் என்ற ஊர் சென்னை புறநகர் பகுதியிலுள்ளது. சுமார் பத்து ஆண்டுகளுக்குள் உருவானது அது.

அதற்குமுன் கதம்பவனம் என்ற பெயரில் ஒரு அடர்த்தியான காடு, அந்த இடத்திலிருந்தது. காட்டு இலாகாவுக்குச் சொந்தமானது, அங்கு சந்தன மரங்கள், யூகிலிப்டஸ் மரங்கள், முந்திரி மரங்கள் போன்ற ஏராளமான மரங்கள் நிறைந்திருந்தன. மொத்தத்தில் அது ஒரு பயங்கரமான காடு.

அந்தக் காடு கொஞ்சம் கொஞ்சமாக புறம்போக்கு நிலங்களாக

மாறி, பிறகு குடிசையாகி, வீடுகளாக மாறின. அரசியல் கட்சிகள் தங்கள் ஓட்டுகளுக்காக அந்தக் காட்டை நானாவட்டத்தில் திடீர் நகரமாய் மாற்றியது. பல கட்சிக் கொடிகள் பறந்தன.

நகரின் கோடியில் ஒரு சமாதி இருந்தது. அதற்கு நாமக்காரத் தாத்தா சமாதி என்று பெயர் அந்த சமாதியின் அருகிலிருந்துகொஞ்சம் மண் எடுத்து தண்ணீரில் கலந்து சிறு குழந்தைகளுக்குக் கொடுத்தால் வீரம் வரும். காற்று, கருப்பான் தீண்டாது என்று சொல்வார்கள்.

நாமக்கார தாத்தாவோடு வாழ்ந்தவர்கள் பலர் இன்னும் இருக்கிறார்கள் அவரைப்பற்றி நிறைய சொல்வார்கள். அவர் பெயர் ஏழுமலை. காட்டிலாக்காவில் காவல்காரராக வேலை பார்த்துவந்தார். கதம்ப வனத்தில் இருபத்தைந்து ஆண்டுகளாக வேலை பார்த்துவந்தார் அவருக்கு வயதோ ஐம்பத்தைந்து. ரிடையர்டு ஆக இன்னும் மூன்றுண்டுகள்தான் இருந்தும், மிகவும்

கண்டிப்பானவர். காட்டிலிருந்து ஒருகுச்சிகூட வெளியே கொண்டு போக விடமாட்டார். காக்கி உடுப்பு, அடர்த்தியான மீசை, நெற்றியில் நாலு விரல் அடர்த்தியான பட்டைநாமம். இதெல்லாம் அவர் டிரேட்மார்க். அவரை எல்லோரும் நாமக்கார தாத்தா என்று செல்லமாக அழைப்பார்கள்.

அவர் சமாதிக்கு அருகில் ஒரு பெரிய பாராங்கல் கிடந்தது. அந்த கல்லில் பெரிய பட்டை நாமம் தீட்டப்பட்டிருக்கும் வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளில் நிறைய பேர் அங்கு வந்து கூடன், சாம்பிராணி போட்டு, பதினேறு சுற்று சுற்றி வணங்கிப் போவார்கள்.

அப்பாறுங்கல்லுக்கு ஒரு வரலாறே உண்டென்று திடீர்நகர் மக்கள் இன்றும் சொல்வார்கள்.

ஃ ஃ ஃ

கதம்பவனக் காட்டுக்குள், கள்ள கடத்தல் கும்பல் ஒன்று உலாவுவதாக பேச்சு அடிபட்டது அரசாங்கத்திற்கும் செய்தி எட்டியது. காட்டு இலாகாவுக்கு சர்க்கார் உஷார்படுத்தியது. ஏழுமலைக்கும் தகவல் வந்தது. காட்டின் ஒவ்வோர் மூலையும் ஏழுமலையின் சோதனைக்கு உட்பட்டது பலநாட்களாக தேடினான். கள்ளக்கடத்தல் கோஷ்டி கண்ணில்படவில்லை.

வெகு நாட்களுக்குப்பின் ஒரு நாள் அக்கோஷ்டியைவெகுதொலைவில் பார்த்துவிட்டார். துரத்திக் கொண்டு சென்றும் கடைசியில் அவர்களை பிடிக்க முடியவில்லை.

ஆனால் அவர்கள் பேசிய பேச்சு ஒன் மட்டும் தெளிவாகக் கேட்டது. தங்கத்தை புதைத்து வைத்திருக்கிற இடத்தை நன்றாக ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கடா. தங்கத்தைக் கடத்துவதற்குள் நாமக்கார தாத்தா வந்து கெடுத்துட்டாண்டா. இனிமேல் நாம் ஜாக்கிரதையா இருக்கணும். ஏழுமலை இனிமேலே கண்ணுலே விளக்கெண்ணெயை விட்டுக்கிட்டுத் திரியும் இந்தப் பேச்சை ஏழுமலை நன்றாகக் கேட்டார்.

அன்றிலிருந்து விடாமல் ஒவ்வொரு இடமாகச் சுற்றினார் இரவு பகல் பாராது தேடினார் சந்தேகப் பட்ட இடங்களிலெல்லாம் தோண்டிப்பார்த்தார்,

ஒருநாள் மாலை ஆறு மணி இருக்கும் கதம்பவனத்தின் ஒரு பகுதி. ஏழுமலை மெதுவாக நடந்துகொண்டிருந்தார் அந்தச் சமயம் மரங்களில் சலசலப்பு ஏற்பட்டது. நின்றார். சுற்றிலும் பார்த்தார். ஒரு பெரிய பாராங்கல் கிடந்தது அதில் பெரிய நாமம் போடப்பட்டிருந்தது. ஏழுமலைக்குச் சந்தேகம் வந்தது. அந்தப் பெரிய கல்லை, ஒரு ஆளால் நகட்ட முடியவில்லை. ஏழுமலை முடிந்தமட்டும் முயற்சிசெய்தார், முடியவில்லை.

உடனே தற்காப்புக்காக, தன் இலாகாவுக்கு அறிவிப்பதற்காக, தன் வசமிருந்த, கைகுண்டுகளை கீழேபோட்டு வெடித்தார். பதில் குண்டுகள் வருகிறோம் என்பதற்கறிகுறியாக எங்கிருந்தோ வெடித்தன.

இதற்குள் மரக்கிளைகளிலிருந்து சுமார் இருபது கள்ளக்கடத்தல்காரர்கள் 'திமுதிமு'வென குதித்து காவல்காரர் ஏழுமலையை, அதாவது நாமக்காரத் தாத்தாவை சுற்றி வளைத்துக்கொண்டார்கள். இரண்டு பேர் ஏழுமலையைக் கத்தியால்குத்தி

ஆபரண கைவினைஞர்களின்
அழகு மாளிகை!
திருமணம்
மற்றும்
விழாக்கால
நகைகள்
வாங்க ராசியான
இடம்
P.A.R. விஸ்வநாதன் செட்டியார்
R.V. ஜீவல்லர்ஸ்
ஏர்கண்டிஷன் ஷோரூம்
262, பெரியகடை வீதி, கோயமுத்தூர்.
போன்: 3316, தந்தி: GOLD

ஞர்கள். மேலும் மளமளவென்ற பல கத்திக்குத்துக்கள்.

ஏழுமலை நாமக்கல்லின்மீதுவிழுந் தார். ஆனால் அவர் உயிர், கல்லைக் கட்டிக்கொண்டு பிரிந்தன.

அதே நேரத்தில் காட்டிலாக் காவின் ஜீப்புகள் விரைந்துவந்து நின்றன. கள்ளக்கடத்தல்காரர்கள் புதர்களுக்குள் ஓடி மறைந்தனர்,

ஏழுமலையின் உடலை, கல்லைவிட் டெடுத்து, கீழே படுக்க வைத் தனர். அவரது காக்கிச்சட்டை பைக்குள் ஒரு காகிதம் நீட்டிக் கொண்டிருந்தது. அதிகாரி அதை எடுத்து பிரித்துப் படித்தார்.

இந்த இடத்தில் கள்ளக்கடத்தல் பொருள்கள் இருக்கின்றன—ஏழு மலை, கீழே நாமம் போடப்பட் டிருந்தது.

உடனே காட்டிலாக்காவினர் அந்தக் கல்லைப் புரட்டிப்போட் டனர். அங்கே சூட்கேஸ்கள் சில அகப்பட்டன. அதை வெளியே எடுத்தனர்.

அவற்றினுள் நூறு கிலோ வெளி நாட்டுத் தங்கம் இருந்தது. சுங்க இலாகா அதிகாரிகளிடம் அவை ஒப்படைக்கப்பட்டன,

ஏழுமலையின் உடல் அரசாங்க மரியாதையுடன், அதே இடத்தில் புதைக்கப்பட்டது; சமாதி எழுப்பப் பட்டது.

ஏழுமலையின் குடும்பத்திற்கு பென்ஷனோடு, பத்தாயிரம் ரூபாய் அன்பளிப்பாகவும் வழங்கப்பட்டது

அந்த வருட ஜனாதிபதியின் தங்கப் பதக்கமும் அளிக்கப்பட்டது (மரணத்திற்குப்பின்).

ஃ ஃ ஃ

திடீர்நகர் இப்பொழுது பெரிய நகரமாய் ஆகிவிட்டது. இருந் தாலும் நாமக்காரத் தாத்தாவின் சமாதியும், நாமம் தாங்கிய கல்லும் மட்டும் பிரபலமாக இருந்துவரு கிறது.

முட்டைப் பூச்சியைப்போல் பிறரை இம்சித்து வாழாதே. எலியைப்போல் திருடி வயிற்றை வளர்க்காதே செல்லைப்போல பிறர்பொருளை கெடுத்து மகிழாதே. தேனீயைப் போலவும் எறும்பினைப் போலவும் உழைத்து உண். அது உனக்கு அமைதியையும் அன்பையும் தரும்.

எமது மனங்கனிந்த தீபாவளி திருநாள் வாழ்த்துக்கள்

✻

கைராசிக்கும் நாணயத்திற்கும் புகழ்பெற்ற
ஸ்தாபனம்

P. A. ராஜு செட்டியார் சன்

எல்லாவிதமான வெள்ளி சாமான்களுக்கும் நம்பிக்கையான இடம்

263, பெரிய கடை வீதி, கோவை-1.

போன்—கடை : 23518 வீடு : 32486

ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா

நபிகள் நாயகத்தின் நல்லுரைகள்

தீயோருடன் இருப்பதைவிட தனிமையில் இருப்பது நல்லது தனிமையில் இருப்பதைவிட நல்லோருடன் இருப்பது நல்லது.

ஒவ்வொரு பொருளுக்கும் வரி இருக்கிறது. மனித உடலுக்கு வரி நோன்பு ஆகும்.

இரகசியமாக தர்மம் செய்வது இறைவனது கோபத்தைத் தட்டி விடும். நரகத்தை விட்டும் பாதுகாக்கும்.

தர்மமானது எழுபது வகையான பிணிகளை நீக்கிவிடும்.

முஸ்லீம்களின் தர்மமானது உலக ஆபத்துகளையும், கப்ருடைய ஆபத்துக்களையும், கியாமத்து நாளுடைய வேதனைகளையும் நீக்கிவிடும்.

ஒரு சிறு பேரீச்சம் பழத்துண்டைக் கொண்டாகிலும் தர்மம் செய்யுங்கள். அதற்கும் இயலவில்லையானால் நல்ல வார்த்தை கூறியாகிலும் அனுப்பிவிடுங்கள்.

எவர் யாசிப்போரைக் கடிந்து பேசி விரட்டுகிறாரோ அவரை கியாமத்து நாளில் (தீர்ப்பு வழங்கும் நாள்) மலக்குகள் (தேவதூதர்கள்) கடிந்து பேசி விரட்டிவிடுவார்கள்.

எமது மனங்கனிந்த தீபாவளி திருநாள் நல் வாழ்த்துக்கள்

●

அழகுக்கு அழகூட்டும் ஆபரண மாளிகை

ஸ்ரீ காயத்ரி ஜுவல்லர்ஸ்

எல்லாவிதமான வைரம், பொன் முதலிய ஆபரணங்களுக்கு நம்பிக்கையான ஸ்தாபனம்

263, பெரிய கடை வீதி, கோவை-1

போன்: கடை – 23518 வீடு: 32486

ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா

தர்மம் செய்வதால் செல்வம் குறைந்துவிடாது.

மற்ற ஏழைகளுக்குச் செய்யும் தர்மம் (நன்மை) ஒரு பங்கு நன்மை பெறும். ஆனால் தன் ஏழை உறவினர்களுக்குச் செய்யும் தர்மம் இரு மடங்கு நன்மையைப் பெறும்.

ஒரு மனிதன் பூமியை உழுது விதைத்து அதில் வாழும் உயிரினங்கள் உண்பதற்கு உதவியாக இருந்தானேயானால் அதுவும் ஒருவகை தர்ம மாகும்.

தொழுகைக்கு எடுத்துவைக்கும் ஒவ்வோர் அடியும் வழிதெரியாமல் திகைப்போருக்கு வழிகாட்டுவதும் தர்மமாகும்.

இடது கைக்குத் தெரியாமல் வலது கையால் (பகிரங்கப்படுத்தாமல்) கொடுக்கும் தர்மமே சிறந்த தர்மமாகும்.

நல்லுதவி செய்யும் எண்ணத்தோடு செய்யும் தர்மமே மேன்மை யானது. அத்தகைய தர்மமானது, உங்கள் ஏழை உறவினர்களுக்குக் கொடுப்பதிலிருந்து ஆரம்பமாகட்டும்.

சுவர்க்கம் என்பது உங்கள் அன்னைகளின் காலடியின் கீழ் இருக் கிறது.

ஒரு மனிதன் இறக்கும் தருவாயில் நூறுதிர்ஹம் (வெள்ளிக்காசுகள்) தர்மம் செய்வதைவிட அவர் வாழ்நாளில் ஒரு வெள்ளிக்காசு தர்மம் செய்வது, மிகச்சிறந்ததாகும்.

அறிஞருடைய பேனாவின் மை தியாகியின் இரத்தத்தைவிட புனித மானது.

பிறருக்குப் பயன்படாத கல்வி, இறைவழியிலே தருமம் செய்யப் படாத செல்வத்தைப் போன்றது.

அறிவைத்தேடி அதை அடைந்தவன், இரு பரிசுகளைப் பெறுகிறான். ஒன்று நாடியதற்காக, மற்றொன்று அடைந்ததற்காக.

கல்வி சீனத்திலிருப்பினும் அதை நாடிச் செல்லுங்கள்.

ஒரு தந்தை, தன் பிள்ளைக்கு வழங்கக்கூடிய பரிசுகள் அனைத்திலும் அறிவூட்டும் கல்வியைவிடச் சிறந்தது வேறு இல்லை.

பிறப்பிலிருந்து இறப்புவரை நல்லறிவை நாடிச் செல்லுங்கள்.

கற்றவண்ணம் நடப்பவரே உண்மையில் கற்றவர்.

அறிவைக்கொண்டே மனிதன் உயர்பதவி அடைகிறான். மறுமை யில் பேரின்பத்தைப் பூரணமாய்ப் பெறுகிறான்.

கல்வியில் மோசடி செய்வது, பொருளில் மோசடி செய்வதைக் காட்டிலும் கொடுமையானது.

அறியாமையைவிட சிறந்த வறுமை கிடையாது.

தொகுப்பு : சேது, சென்னை

ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா ராமா ஸ்ரீராமா

HEARTY DEEPAVALI

GREETINGS TO ALL

"GUNDOOSI" READERS

S. M. VENKATANARAYANAN

Messrs. TRANSWORLD TEXTILES

78-1, GODOWN STREET,

MADRAS-600 001

வேலூர் ஸ்ரீதோபா சுவாமிகள்

மஹேந்திரவாடி உமாசங்கரன்

சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு திருச்சிராப்பள்ளியில்வேளாளர் குலத்தில் சிவகுருநாதப்பிள்ளை என்பவருக்கு மகனாக அவதரித்தார் நம் ஸ்வாமிகள். ஆங்கிலேயர் தம் நாட்டை ஆண்டுவந்த காலம் அது.

சிவகுருநாதப் பிள்ளை ஆங்கிலேயரின் ராணுவத்தில் பணிபுரிந்து வந்தார். அவர் சிவபக்தி மிக்கவர்; தன்னுடைய இல்லத்தரசியோடு சேர்ந்து பல கோயில்களைத் தரிசித்துவிட்டு, ராமேசுவரம் சென்று ராமநாதேசுவரரை தரிசித்தார். அங்கு சென்றுவந்த சில மாதங்களுக்குள் அவ்வம்மையார் கருவுற்று, உரிய காலத்தில் ஒரு ஆண் மகவைப் பெற்றெடுத்தார்கள். ராமேசுவரத்தில் குடிகொண்ட ஈசனின் நினைவாக அக்குழந்தைக்கு ராமலிங்கம் என்னும் பெயரைச் சூட்டி மகிழ்ந்தனர் பெற்றோர்.

குறித்த காலத்தில் குழந்தையை கல்வி கற்க பள்ளியில் சேர்த்தனர். எல்லாப் பாடங்களையும் கற்றுத் தேர்ந்து சிறந்த அறிஞராக விளங்கினார். அவர் வாலிப வயதை அடையுமுன்பே தாய் தந்தையரை இழந்தார்.

தாய், தந்தையரை இழந்த பிறகு, தன்னுடைய தந்தைசெய்த தொழிலையே செய்ய எண்ணி, ராணுவத்தில் சேர்ந்து எல்லாப் பயிற்சியும் பெற்றார். அப்பயிற்சி முடிந்தபிறகு, அவருடைய தந்தை வகித்த பதவியிலேயே அதிகாரிகள் இவரை அமர்த்தினர். திருச்சியில் பணிபுரிந்துவந்த அவரைச் சென்னைக்கு மாற்றினர்.

பற்றற்ற நிலையில் ராணுவத்தில் பணிபுரிந்த அவருக்கு ஞான நிலையின் மேம்பாட்டால் சைவ புராணங்களைப் படிக்க முற்பட்டார். ஞான சம்பந்தப் பெருமான்மீதுகொண்ட பக்தியால் அவரையே மானசீககுருவாக ஏற்றார். ஒருமுறை தியானத்தில் அமர்ந்திருந்த நேரத்தில் சம்பந்தப் பெருமான் அவரது உள்ளத்திற்குக் காட்சிகொடுத்து ஆட்கொண்டார். குருவருள் தனக்குக் கிடைக்கவே, மகிழ்வுற்று காழியர் தவமே கவுணியர் தனமே கலை ஞானத் தாழிய கடலே அதனிடை அமுதே' என்று பாடிப் பாடி பரவசமடைந்தார்.

ஒருசமயம் ஆங்கிலப் படைக்கும், எதிரிப்படைக்கும் போர் மூண்டது. அந்த ,சமயத்தில் நம் ஸ்வாமிகள் கலந்துகொள்ளவில்லை. இவரைக்

எமது மனமார்ந்த தீபாவளி திருநாள் நல்வாழ்த்துக்கள்

காணவில்லையே என்று அதிகாரிகள் ஏங்கிய வேளையில் திடீரென்று தோன்றி, மிகவும் தீரமாகப் போரிட்டு எதிர்ப்படைகளை புறமுதுகிட்டு ஓடச்செய்தார். ஆனால் போர் முடிந்தவுடன் குதிரைமட்டும் அங்கிருந்ததே தவிர, ஸ்வாமிகளை காணவில்லை. ஆங்கிலேய அதிகாரிகள் அவரை எங்குத் தேடியும் கிடைக்காததால், அவருடைய இருப்பிடத்திற்குச் சென்று பார்த்தனர்.

அங்கு அவர் யோகநிலையில் வீற்றிருக்கக் கண்டனர். எவ்வளவு முயன்று பார்த்தும் அவருடைய யோகம் கலையவில்லை இந்நிகழ்ச்சியைக்காண பெருங்கூட்டம் கூடியது. இதன் விளைவால் அங்கு அமைதி குறைந்து ஆரவாரமேற்பட்டது. அவருடைய யோகமும் கலைந்தது. அப்பொழுது அவருடைய திருவாக்கிலிருந்து தோ-பா, தோ-பா என்ற சொற்கள் பலமுறை வெளிப்பட்டது.

தோடுடைய செவியன் என்று பாடிய ஞானசம்பந்தப் பெருமானையே இது குறிக்கிறது என்றும், தோன்றுகின்ற தோற்றங்களெல்லாம் பா - பாதம் - பொய் என்று குறிக்கிறது என்றும் அறிஞர் பெருமக்கள் பலவாருகக் குறிப்பர்.

ஆங்கிலேயப் படைத் தளபதிகள் போரில் ஆங்கிலப் படைகளுக்கு ஏற்பட்ட வெற்றியைப் பற்றியும் அதில் ஸ்வாமிகள் பங்குகொண்டு பிறகு மறைந்ததைப்பற்றியும் விவரமாக எடுத்துரைத்தனர்.

இதைக்கேட்ட ஸ்வாமிகள் தனக்கெதுவும் தெரியாதென்றும், தான் யோகத்தில் ஆழ்ந்திருந்ததாகவும் எல்லாம்வல்ல ஈசன் நடத்திய திருவிளையாடலே இது என்றும் அவர்களிடம் கூறினர்.

இந்நிகழ்ச்சி தளபதிகளுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது அத்தளபதி மிகவும் வியந்து, He is not an ordinary man, but he seams to be a Divine Person என்று கூறினுராம்.

துறவறத்தில் பலவகையுண்டு. அவற்றில் மிக உயர்ந்தது திகம்பரம் என்னும் துறவே அணிந்திருக்கும் ஆடைகள்கூட ஒரு பற்றுதலைக் குறிக்கிறது என்று எண்ணி எட்டு திக்குகளே ஆடை என நினைத்து, நிர்வாண நிலையை அடைவதே அத் துறவு. தம்மிடமிருந்தபொருளையெல்லாம் தானம் செய்துவிட்டு அந்நிலையை அடைந்தார்.

துறவு நிலையை ஏற்றபிறகு சென்னையைச் சேர்ந்த திருவொற்றியூரில் ஒரு வீதியில், நம் ஸ்வாமிகள் ஓர் ஓரமாக அமர்ந்திருந்தார். அவ்வீதியில் போவோர் வருவோரைப் பார்த்து, அவரவர் குணங்களுக்கேற்ப நாய் போகிறது, மாடு ஓடுகிறது, கழுதை கத்துகிறது என்று பலவிதமாக சொல்லிய வண்ணமிருந்தார் ஸ்வாமிகள்.

அச்சமயத்தில் வள்ளலார் அவ்வீதி வழியாக வருவதைக் கண்ட ஸ்வாமிகள், மனிதர் வருகிருர் என்ருர். அதுவரை இவரைப் பித்தம் பிடித்தவர் என்று நினைத்திருந்த அன்பர்கள் சிலர், ஸ்வாமிகளை அணுகி விளக்கம் கேட்டனர், உடனே ஸ்வாமிகள், வள்ளலார் மனித வடிவிலிருக்கும் மஹானென்றும், மற்றவர்களெல்லாம் மனித வடிவிலுள்ள மிருகமென்றும் கூறினுராம்.

இதைக் கவனித்த வள்ளலார், தாம் இருவரும் சமநிலையிலுள்ளவர்கள் என்றும், இவர் திக்கை ஆடையாகக்கொண்டவரென்றும், தான்



ஆகா! ஸினித்தில் தைக்கும் பொழுது ஏற்படும் ஆனந்தமே' தனி.

இல்லத்தரசிகள் தன் பொழுதை இன்பத்துடன் கழிக்க ஸினித் தையல் மிஷின் உங்கள் வீட்டில் இருக்கட்டுமே!

இதன் தரமும் அஸெம்பிள் செய்துள்ள முறையும் எல்லா தையல் மிஷின்களைவிட தனித்து முன்நிற்கிறது

பிஎம் எஸ்ஸி ஸினித் சுவிங் மெஷின் ஒர்க்ஸ்

653, அண்ணா சாலை, ஆயிரம் விளக்கு,
சென்னை–600 006. போன். 82559

ஒவ்வொரு வீட்டிற்கும் ஸினித் கட்டாயம் தேவை

எமது மனங்களிந்த தீபாவளி திருநாள் வாழ்த்துக்கள்

"லோத்ரா" டானிக் மகளிர்க்கு மட்டும்!

உடல் ஆரோக்கியம் இயற்கை முறையில் பெற மாதத்தில் எல்லா நாட்களும் வேதனையற்ற நாட்களாக இருக்க, தொடர்ந்து "லோத்ரா" டானிக் உட்கொள்ளுங்கள் வேதனையற்ற ஆரோக்கியம் நிறைந்த வாழ்வை பெறுங்கள்.

லோத்ரா 75 வருடங்களுக்கு மேலாக பெண்கள் நம்பிக்கைக்கு பாத்திரமான டானிக். "லோத்ரா" மருந்துகடைகளில் கிடைக்கும்

இலவச மருத்துவ ஆலோசனைக்கு கீழ்க்காணும் விலாசத்திற்கு இந்த கூப்பனை பூர்த்தி செய்து உங்கள் கடிதத்துடன் அனுப்புங்கள்.

பெயர்: ______
விலாசம்: ______
______
______ PIN ______

கேசரி குடீரம் (பி) லிமிடெட்
18 ஜெனரல் பேட்டர்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை-600 014

வெண்ணிற ஆடையை அணிபவர்
ன்றும் கூறி, ஸ்வாமிகளிடம்
றிது நேரம் உரையாடிவிட்டு
ரிந்து சென்றாராம்..

ஒற்றியூரைவிட்டு பல ஊர்களுக்
குச் சென்று வந்த ஸ்வாமிகள், ஒரு
முறை முகம்மதியர் வசிக்கும் தெரு
ஒன்றின் வழியாகச் செல்ல நேரிட்
டது ஒரு முகம்மதிய செல்வந்தரின்
மனைவி ஸ்வாமிகளைக் கண்டு நாண
முற்று, தன்னுடைய கணவரிடம்
ஸ்வாமிகளை அவ்வீதியை விட்டுத்
துரத்துமாறு கூறினாள். அவனும்
இவருடைய மகிமை தெரியாது தன்
னுடைய பணியாளிடம் அவரைத்
துரத்துமாறு கூறினான். அப்பணி
யாள் ஒரு கோணி ஊசியைஎடுத்து
ஸ்வாமிகளின் அடி வயிற்றை
நோக்கி வீசினான்.

ஆனால் அவ்வூசி அவரைத் தாக்
காமல், அதை எறிந்தவனின் அடி
வயிற்றில் வந்து குத்திக்கொண்
டது, அவன் வலியால் துடித்தான்.
ஊசியையும் பிடுங்கமுடியவில்லை;
ஸ்வாமிகளின் திருவடியில் பணிந்து
முறையிட்டான். ஸ்வாமிகளின்
அருள்நோக்கால் ஊசியும்தானே
அகன்றது வலியும் மறைந்தது.

ஸ்வாமிகளின் மகிமைகளைக் கண்ட அந்த முகம்மதிய பெரியவர் ஸ்வாமிகளின் பெயராலேயே ஒரு மசூதியைக் கட்டி அதற்கு தோபா மசூதி என்று பெயரிட்டு அழைத்தார்.

சென்னையில் தங்கி சித்துக்கள் பல புரிந்த ஸ்வாமிகள் காஞ்சி, வாலாஜாப்பேட்டை, ஆர்காடு வழியாக வேலூரை அடைந்தார்கள். வேலூரில் நிரந்தரமாகத் தங்கி சித்துகள் பல புரிந்த ஸ்வாமிகள் சிஷ்யர்களாகப் பலரை ஏற்றார்.

சாலிவாகன சகாப்தம் 1772-ம் வருடத்திற்குச் சரியான ஆங்கில ஆண்டு கி பி 1850-ம் ஆண்டு பங்குனித் திங்கள், 27-ம் தேதி புதன் கிழமை பிரதமை திதி, ரேவதி நட்சத்திரம் கூடிய நன்னாளில் ஸ்வாமிகள் சமாதிநிலையை அடைந்தார்கள். இன்றும ஸ்வாமிகளின் சமாதி வேலூர் சைதாப்பேட்டையில் தரிசிக்கலாம்.

ஆன்மீக் அன்பர்களை இந்தத்தீப ஒளித் திருநாளில் வேலூர் தோபா ஸ்வாமிகளின் மடத்திற்கு அழைத்துச் செல்வதில் பெருமையடைகிறேன்,

எமது மனங்கனிந்த தீபாவளி திருநாள் நல்வாழ்த்துக்கள்

*

எல்லாவிதமான இங்கிலீஷ் மருந்துகளும் நியாயமான விலையில்
எப்பொழுதும் எங்களிடம் கிடைக்கும்

அம்பிகா பார்மஸி

40, பாரதி சாலை, திருவல்லிக்கேணி
சென்னை - 600 005.

போன் கடை : 844604 வீடு : 75501

காமகோடி

— தில்லைநாதன் —

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற பெருமைகளுடன் சக்திபீடங்களில் தலையாயதாகவும் காஞ்சிமா நகரம் விளங்குகிறது. ஆதிசங்கர பகவத் பாதர்கள் ஸ்தாபித்த மடங்களுள், தாமே பீடாரோஹணம் செய்து அலங்கரித்த ஸ்ரீகாமகோடி பீடமாகவும் விளங்குகிறது. பூமி தேவியின் தொப்புள் பகுதி இந்த நகரமென்று தந்திர சாஸ்திரங்கள் கூறுவதால் காஞ்சி என்ற பெயர் பெற்றதாகக் கூறப்படுகிறது.

சேய்களின் தாபங்களைப் போக்கி அருளையும்கருணையையும்பொழிந்து காக்கும் எம்பெருமாட்டி காமாட்சியின் திருக்கோவில் நகரின் நடு நாயகமாக விளங்குகிறது அன்னையைக் காமகோடி என்ற பெயரால் தேவாரப் பதிகங்களில் அப்பர், சம்பந்தர் முதலிய நாயன்மார்கள்குறிப்பிடுகிறார்கள்.

காமகோடி என்றால் விருப்பத்தின் முடிவு என்று பொருள். எப்போது விருப்பத்தின் முடிவு தோன்றுகிறதோ, அப்போதுதான் நிறைவு ஏற்படுகிறது. இந்த நிறைவு ஜீவன் முக்த நிலையில்தான் உண்டாகிறது. எல்லாம் நிறைந்த நிலையில் ஆசை ஏதும் தோன்றாது. அந்த நிலையில் தான் காமகோடியின் அர்த்தம் பூரணத்துவம்பெறுகிறது. காமாட்சி என்றாலும் கண்களால் பக்தர்களின் விருப்பங்களை நிறைவேற்றுபவள் என்று பொருள்.

தொண்டை மண்டலத்தைஸத்ய புத்திர நாடென்றும் வழங்குவார்கள் இங்குள்ள முக்கிய நகரமான காஞ்சிக்கு ஸத்ய விரதக்ஷேத்திரம் என்றும் பெயர். புகழேந்திப்புலவர் தொண்டை மண்டல மக்களைப் பற்றிக் கூறும்போது, வையகம் பெறினும் பொய்யுரைக்கமாட்டார் தொண்டை நாட்டார் என்கிறார்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த இந்த க்ஷேத்திரத்தில் ஸ்ரீசங்கர மடத்தில் சமீபத்தில் ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்களின் சந்நிதியில் எட்டாவது தமிழ்மாநில சமஸ்கிருத மாநாடு சிறப்பாக நடைபெற்றது. சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஸ்ரீ ஆர்.

எமது மனங்கனிந்த தீபாவளி திருநாள் வாழ்த்துக்கள்

என் மீச்ரா அவர்கள் தலைமை தாங்கி, சமஸ்கிருதத்தின் பெருமையைக் கூறி அதனை எல்லோரும் கற்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார் தமிழகத்தின் பிரதிநிதிகளாக சுமார் அறுபது வித்துவான்கள் மகாநாட்டில் பங்குகொண்டார்கள்.

அதில் சாகித்ய சாஸ்திரம் மற்ற எல்லா சாஸ்திரங்களின் கருத்துக்களைப் பிரதிபலிக்கிறது ஸாஹித்ய சாஸ்த்ர: ஸர்வ சாஸ்த்ர நிஷ்யந்த: என்ற பொருள்பற்றிப் பலர் பேசினர் பெரும்பாலும் வேதங்களின் கருத்துக்கள் காளிதாசன் போன்ற மகாகவிகளின் காவியங்களிலும் ஆதி கவியான ராமாயணத்திலும் பொதிந்திருக்கின்றன என்று விளக்கினார்கள்.

ஆதிசங்கரரின் சௌந்தர்யலஹரியிலுள்ள முதல் சுலோகத்துக்கு ஸ்ரீ பெரியவர்கள் வேதத்திலிருந்து மேற்கோள் காட்டினார். சிவ சக்த்யா யுக்த: என்ற சுலோகத்தில் பராசக்தியின் மகிமையால் தான் பரமேசுவரன் ஆற்றல் உள்ளவராகத் திகழ்கிறார், இல்லாவிட்டால் அசையக்கூட முடியாது என்கிறார் சங்கரர்;

வேதத்திலுள்ள கருத்தைவிளக்க வந்தது தான் இந்தச் சுலோகம் தயா ஸோ ம்ருட ஜீவஸே! ம்ருட—ஓ பரமேசுரா, தயா—அம்பிகையினால் தானே? ஜீவஸே—நீ ஜீவித்திருக்கிறாய்! என்கிறது வேதம்.

தவ தாடங்க மஹிமா—என்ற சுலோகம் மேலும் விளக்கம் தருகிறது ஆலகால விஷத்தை உண்ட பிறகும் சிவன் உயிருடன் இருப்பது அம்பிகையின் (காதணி) தாடங்கத்தினுடைய மகிமையால் தானே!' என்கிறது.

> செய்யும் தொழிலைத் தெய்வமாக நினைப்பவர்களை, அவர்களின் நேர்மை, அவர்களுக்குச் செல்வத்தைக் குவித்துக்கொண்டே இருக்கும் —குகதாசர்

அந்த உலக அன்னையின் அருள் தான் நம்மையெல்லாம் காப்பாற்றுகிறது என்கிறார்கள், பெரியவர்கள் எல்லாம் முத்தாய்ப்பாக.

ஹுதாசநப் சந்தன பங்கசீதல: அக்கினி சந்தன குழம்பு போன்று குளிர்ச்சியானவன் என்ற சுற்றடியை வைத்துச் சுலோகம் புனைய வேண்டும் என்றுகவியரங்கத்துக்கு பொருள் கொடுக்கப்பட்டது.

நெருப்பு என்றைக்காவது குளிர்ச்சியாக இருக்குமா? இதை வைத்து எப்படிச் சுலோகம் புனையமுடியும்? என்று உடனே கேட்கத் தோன்றுகிறது அல்லவா? அதில்தான் இருக்கிறது கவியின் சாமர்த்தியம்.

அநுமானின் வாலில் கட்டிய நெருப்பு அவனுக்குச் சந்தனம் போல் குளிர்ச்சியாக இருந்ததாம். ஏன் இருக்காது? இராம தூதனான அநுமனைச் சுட்டெரிக்க அக்கினிக்குத் தைரியம் எப்படி வரும்? அப்படியே கொஞ்சம் வாலாட்ட நினைத்தாலும் அந்த அக்கினி பகவானைச் சீதையின் பதிவிரதய அக்கினி சும்மா விட்டுவிடுமா?' என்று கூறினார் ஒரு கவி.

நெருப்பையே சுட்டெரிக்கும் ஆலகால விஷம் பரமேசுவரனின் கழுத்தை அடைந்தபோது அது தன் வெப்பத்தையெல்லாம் இழந்து கருஞ்சந்தனமாகக் கழுத்துக்கே எழிலூட்டிக் குளிர்ந்து விளங்கியது என்றார் கவி.

மூன்று பெரியவர்களின் முகத்திலேதான் எவ்வளவு கலர்ச்சி!